REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மார்ச் 8 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 92 இல. 59 | Friday 08, March, 2024 | 20 பக்கங்கள் | 50/-

## இன்று மஹா சிவராத்திரி தினம்

சிவனுக்கு உகந்த மஹா சிவராத்திரி தினம் இன்றாகும். இந்துக்களுக்கு மிகவும் முக்கியமான ஒரு நாளாக இது, கருதப்படுகிறது. சிவ பக்தர்களுக்கு மஹா சிவராத்திரி மிகவும் விஷேசமானது.

300 ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆண்டு வரப்போகும் மஹா சிவராத்திரி தினம் மிகவும் சிறப்பானதென கூறப்படுகிறது.

இலங்கையில் முன்னேஸ்வரம், திருக்கேதீஸ்வரம்,

i

## சர்வதேச மகளிர் தினம்




சர்வதேச மகளிர் தின விழா இன்று (08) காலை 10 மணிக்கு பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர் நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்திற்கு இணைந்ததாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மொனராகலை, இரத்தினபுரி மத்திய நிலையங்களுக்கு 05 முச்சக்கரவண்டிகள் மற்றும் 05 கணினிகள் வழங்கப்படவுள்ளன.

கட்டுப்பாடற்ற நுண்கடன் திட்டங்களால் பாதிக்கப்படும் கிராமப்புற பெண்களை இனங்கண்டு, தரவு அமைப்பு தயாரித்தல், அவர்களுக்கு சுயதொழில் நிவாரணம் வழங்குதல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட 05 பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு சமுர்த்தி கடன்களை வழங்குதல் ஆகியவற்றுடன், Forever நிறுவனம் அழகுக் கலை துறையில் 03 பெண்களுக்கு 150,000 ரூபா பெறுமதியான புலமை பரசில்களையும் வழங்கவுள்ளது.

## பால்நிலை சமத்துவ கல்வியில் பெண்களின் மகிமை பேணப்படும்

### பொருளாதாரத்துக்கு பெண்கள் தனித்துவ பங்களிப்பு



பாரம்பரிய வகிபாகங்களுக்கு அப்பாற்பட்ட அறிவு, திறன் மற்றும் தொழில் தன்மையுடன் கூடிய இலங்கைப் பெண்கள், நாட்டின் பொருளாதாரத்திற்கு தனித்துவமான பங்களிப்பை வழங்கி வருவதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மகளிர் தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

குடும்பம் மட்டுமின்றி சமூகத்தில் வேறு பொறுப்புகளை

i

## சமூகத்தில் பெண்களின் வகிபாகங்கள் வரையறுக்கப்படாத பெறுமதிமிக்கவை

### வங்கித்துறையிலும் பெண்கள் இணைய வேண்டும்



நாட்டின் அபிவிருத்திக்கு சிறப்பான பங்களிப்பை பெண்கள் வழங்கிய போதிலும், பெரும்பான்மையான பெண்கள் இன்னும் வங்கித் துறையில் இணையாதுள்ளமை கவலைக்குரியதென, பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். பெண்கள் தினத்தையிட்டு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் பிரதமர் தெரிவித்துள்ளதாவது:

பெண்களின் எதிர்கால நலனுக்காக வங்கி முறைமையில் இணைவதற்கான தடைகளை நீக்குவதில் அரச மற்றும் வர்த்தக வங்கிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கை சமூகத்தில் பெண்ணுக்கு

i

### IMF உடனான இணைந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

# இலங்கையின் அர்ப்பணிப்புக்கு IMF தலைவர் பாராட்டு



**நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வலுவடைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதென தெரிவித்த IMF தலைவர் பீட்டர் ப்ரூவர், ஜனாதிபதியின் அர்ப்பணிப்புக்கும் பாராட்டு தெரிவிப்பு**



சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கத்தின் உறுதியான அர்ப்பணிப்பைப் பாராட்டுவதாகவும், அத்தகைய அர்ப்பணிப்புக்கள் முன்னேற்றகரமான மாற்றங்களை ஏற்படுத்தும் என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதக்குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர் (Peter Breuer) தெரிவித்தார்.

i

## "Press Vs. Prez" நூலின் முதல் பிரதி ஜனாதிபதியிடம் கையளிப்பு



பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன எழுதிய "Press Vs. Prez" நூல் வெளியீட்டு விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், கொழும்பு தாமரைத்தடாக அரங்கில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் வஜிர அபேவர்தன எம்.பி, நூலின் முதற் பிரதியை ஜனாதிபதிக்கு வழங்குவதைக் காணலாம்.

## ரயில் நிலையத்தில் புதிய டிஜிட்டல் திரைகள்



கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் ரயில் பயணிகளின் வசதிக்காக புதிய இலத்திரனியல் நேர அட்டவணை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கோட்டை ரயில் நிலையத்துக்குச் சென்று அதனை ஆரம்பித்து வைத்தார்.

கோட்டை ரயில் நிலையத்தின் பிரதான நுழைவாயில் முன்பாக உள்ள பயணிகளுக்கும், ரயில் நிலைய பயணிகளுக்காகவும் இரண்டு விசாலமான டிஜிட்டல் திரைகளுடன் கோட்டை ரயில் நிலையத்தில் 07 டிஜிட்டல் திரைகள்

i



06 ரயில் நிலையத்தில் புதிய டிஜிட்டல் திரைகள்

## கோப், கோபா குழுக்களுக்கு புதிய தலைவர்கள் நியமனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**





அரசாங்க பொறுப்பு முயற்சிகள் தொடர்பான குழுவின் (கோப்) புதிய தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவும் பாராளுமன்ற அரசாங்க கணக்குகள்

i

## இனப் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் நாட்டை சரியாக வழிநடத்த முடியாது

### சமஷ்டியை கோரும் உரிமை தமிழ் தரப்புக்கு உண்டு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படாமல் நாட்டை சரியான திசையில் எவராலும் முன்னெடுத்துச் செல்ல முடியாது. எவ்வாறாயினும் அதிகாரப் பகிர்வு இல்லாமல் இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை காணவும் முடியாதென வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேபோன்று, சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வு நாட்டில் மிக அவசியமாகும் என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி இராசமாணிக்கம்

06

## ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும் நடவடிக்கைகள் தொடர்கின்றன

### புள்ளிகளின் அடிப்படையில் நியமனங்கள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அவசரமாக நிரப்ப வேண்டிய வெற்றிடங்களுக்கு ஒன்பது மாகாணங்களிலும் ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என, கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பரீட்சைகளில் தோற்றி புள்ளிகளை பெற்றுக் கொண்டவர்களுக்கு புள்ளிகளின் அடிப்படையில், நியமனங்கள் வழங்கப்படுவதாகவும் அவர் சபையில்

06

## மின்சார மீளிணைப்புக்கான கட்டணம் 800 ரூபாவாக குறைப்பு


### தவணை முறையில் புதிய மின் இணைப்பு கட்டணத்தை செலுத்தவும் அவகாசம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மின்சாரம் துண்டிக்கப்பட்ட பின்னர் மீண்டும் இணைப்பை வழங்குவதற்காக இதுவரை காலம் அறவிடப்பட்ட 1,300 ரூபா கட்டணத்தை 800 ரூபாவாக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அதேவேளை, புதிதாக மின் இணைப்பை பெற்றுக்கொள்ளும் சேவைக் கட்டணத்தில் 25 சதவீதத்தை, முதல் கட்டமாகவும் மீதமான கட்டணத்தை தவணை அடிப்படையிலும்

06

## கிராம மட்டங்களில் சுமார் 45,000 தென்னங்கன்றுகளை நடத் திட்டம்



விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கென 86 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட ரீதியாக இக்கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இளநீர் செய்கையை விரிவுபடுத்தும் நோக்கில் தெங்கு செய்கை சபை இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளது. இதற்கென, மொனராகலை மாவட்டத்தில் 03 கிராமங்கள், மாத்தறையில் 01, குருநாகலில் 08, கேகாலையில் 08, கம்பஹாவில் 09,

06

## குற்றச் செயல்களில் ஈடுபட்ட 22 இந்தியப் பிரஜைகள் கைது

### 35 கைபேசிகள், மடி கணினிகளும் பறிமுதல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மடி கணினிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை உபயோகித்து சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த இந்தியப் பிரஜைகள், 22 பேரை கைது செய்துள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 35 கையடக்க தொலைபேசிகள் மற்றும் ஐந்து மடி கணினிகளையும் உத்தியோகபூர்வ முத்திரை ஒன்றையும்

06

## முருகன், ரொபட் பயஸையாவது உயிருடன் விடுதலை செய்யுங்கள்

### சிவஞானம் சிறிதரன் எம்பி உருக்கமான வேண்டுகோள்




இந்திய சிறையில் உள்ள இலங்கையர்களான முருகன், ரொபட் பயஸ் ஆகியோரையாவது உயிருடன் விடுதலை செய்து அவர்களைக் குடும்பத்துடன் இணைக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தியப் பிரதமர், தமிழக முதலமைச்சர் மற்றும் இலங்கை அரசாங்கத்திடமே அவர்

i

## 'ஷெல்' எரிபொருள் நிறுவனம் மீண்டும் இயங்குவதற்கு அனுமதி



'ஷெல்' நிறுவனம் 63 வருடங்களின் பின்னர் எதிர்வரும் (19) முதல் மீண்டும் எரிபொருள் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது.

1880ஆம் ஆண்டு முதல் இலங்கையில் செயற்பட்டு வந்த ஷெல் எரிபொருள் நிறுவனம் 1961ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கத்தினால் அரசுடைமையாக்கப்பட்டது. இதன் பின்னர் இந் நிறுவனம் இங்கிருந்து வெளியேறி, சிங்கப்பூரில் இயங்கத் தொடங்கியது. இன்று சிங்கப்பூரில் மாபெரும் நிறுவனமாக இது வளர்ந்துள்ளது. சிங்கப்பூர் எரிசக்தித்

i

# நகர்வலம்



ஜனாதிபதியின் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில்;

## மல்வானை அல் முபாரக் மத்திய கல்லூரிக்கு புதிய கேட்போர் கூடம்!

ருவன் விஜேவர்தன





மல்வானை அல் முபாரக் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அனைத்து வசதிகளுடன் கூடிய கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார்.

அதற்கமைய கேட்போர் கூடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தனவின் பங்களிப்புடன் நேற்று முன்தினம் (06) நடைபெற்றது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய இந்த கேட்போர் கூடம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டதுடன், ஒரே நேரத்தில் சுமார் 5000 மாணவர்கள் ஒன்று கூடக்கூடிய சகல வசதிகளுடன் இந்த புதிய கேட்போர் கூடம் நிர்மாணிக்கப்பட உள்ளது.

புதிய கேட்போர் கூட அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ருவன் விஜேவர்தன, கடற்படையினரின் பங்களிப்புடன் கேட்போர் கூடத்தின் நிர்மாணப் பணிகள் துரிதமாக பூர்த்தி செய்யப்பட்டு மாணவர்களிடம் கையளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

மாணவர்களின் கல்விக்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அன்றிலிருந்து இன்று வரை பெரும் பங்காற்றியுள்ளதாக சுட்டிக்காட்டிய ருவன் விஜேவர்தன, ஜனாதிபதி பியகம பிரதேச மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக அடுத்த மாதம் புதிய வைத்தியசாலையை நிர்மாணிக்கும் பணி ஆரம்பிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்த மல்வானை பிரதேசத்துக்கும் இடையில் பெரும் பிணைப்பு உள்ளது. பியகம தொகுதி அமைப்பாளராக பணியாற்றிய அவர் இப்பிரதேசத்திற்கு பெரும் சேவையாற்றியுள்ளார். குறிப்பாக இந்த மல்வானை பிரதேசத்தில் உள்ள பெண்கள் மற்றும் சிறுவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்கும் நாட்டின் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கும் அவர் பல பணிகளை செய்துள்ளார். இவருடன் இணைந்து சுரனிமலா ராஜபக்ஷவும் இப்பகுதியில் கல்விக்காக பெரும் சேவையாற்றியுள்ளார்.

புதிய கேட்போர் கூடம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் இப்பாடசாலைக்கு மட்டுமன்றி இப்பிரதேசத்திற்கும் பெரும் பயன் கிடைக்கும் என நான் நம்புகிறேன். ஏனைய பாடசாலைகளுக்கும் இந்தக் கேட்போர் கூடத்தைப் பயன்படுத்தலாம். அத்துடன், இந்தப் பிரதேசத்தில் வைத்தியசாலை ஒன்று நிர்மாணிக்கப்படும் என கடந்த பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதியளித்திருந்தார். அதன்படி, அடுத்த மாதத்திற்குள் மருத்துவமனை கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மல்வான அல் முபாரக் மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ். எச். எம்.நயீம்,ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பாலியல் வன்கொடுமை;

## பிணையில் விடுதலையான பொலிஸ் பரிசோதகருக்கு மீண்டும் விளக்கமறியல்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

கற்பிட்டி பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பொலிஸ் பரிசோதகர் நிசாந்த குமாரவை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட மேலதிக நீதவான் அயோனா விமலரத்ன நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய போது, பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் புத்தளம் நீதிமன்றில் ஆஜராகி பிணையில் இருந்த முன்னாள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, நேற்றைய தினம் மீண்டும் புத்தளம் நீதிமன்றில் முன்னிலையானார்.

இதன்போது , சம்பவம் தொடர்பில் விசேட விசாரணைகளை மேற்கொண்ட குளியாப்பிட்டிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மஹேஷ் குமாரசிங்க, சம்பவம் தொடர்பில் முன்னெடுத்த விசாரணைகளின் உண்மைத் தன்மைகளை புத்தளம் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தார்.

இதன்போது, இருதரப்பு விவாதங்களையும் கருத்திற்கொண்ட நீதவான், பாதுகாப்பு சட்டத்தின் கீழ் முறைப்பாட்டாளரை அச்சுறுத்தியமையை தொடர்பில் அவதானம் செலுத்தியதுடன் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.



சவூதி அரேபியாவின் இலங்கைத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி, புதிதாக சவூதி அரேபியாவிற்கான இலங்கைத்தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள அமீர் அஜ்வாதை நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள சவூதி தூதரகத்தில் சந்தித்து உரையாடினார். இதன்போது இரு நட்பு நாடுகளுக்கும் இடையேயான பொதுவான ஆர்வமுள்ள பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.



விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்கவின் இணைப்புச் செயலாளராக புதிய ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும் முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான என்.ரவிகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தனது நியமனக்கடிதத்தை அமைச்சரிடமிருந்து நேற்று (07) பெற்று கொண்டபோது எடுத்த படம்.

## இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் 'மகே கதாவ' நூல் வெளியீடு









முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எழுதிய 'மகே கதாவ' (எனது கதை) என்ற வாழ்க்கைச் சரிதை நூல் கடந்த செவ்வாய்க்கிழமை (05) மாலை 03.45 மணிக்கு கொழும்பு 10இல் அமைந்துள்ள ஆனந்த கல்லூரியின் குலரத்ன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பௌத்த, இந்து, கத்தோலிக்க, இஸ்லாமிய மதத் தலைவர்கள் முன்னிலையில் நூலின் முதல் பிரதியை நூல் வெளியீட்டுப் பதிப்பகத்தின் சார்பில் ஹேரர்ஸ் பெர்ணாந்து நூலாசிரியர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன, பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய உட்பட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை இம்தியாஸ் பாக்கிர் மாக்காரின் புதல்வர்களில் ஒருவரான பாதில் பாக்கீர் மாக்கார் நிகழ்த்தினார்.

நூல் தொடர்பான கருத்துரைகள் வல்பொல ராகுல பௌத்த கல்வி நிறுவகத்தின் பணிப்பாளரும் களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கல்கந்தே தம்மானந்த தேரர், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளரும் பிரபல ஊடகவியலாளருமான ஏரானந்த ஹெட்டியாராச்சி மற்றும் பிரபல ஊடகவியலாளர் கலாநிதி ரங்க கலன்சூரிய ஆகியோரால் நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பேருவளை அக்கர தாஅட்ட பகுதி

## ஸாலிஹீன் ஸாவியா மஸ்ஜிதின் மேல் மாடி இன்று திறந்து வைப்பு

### சீனன்கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் பங்கேற்பு



பேருவளை பிரதேச சபைக்குட்பட்ட அக்கர தாஅட்ட (18 ஏக்கர்) பகுதியில் உள்ள ஷாதுலியத்துல் ஸாலிஹீன் ஸாவியா மஸ்ஜிதின் மேல் மாடி பல இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழாவும் வக்ப் செய்யும் நிகழ்வும் இன்று 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை அஸர் தொழுகையோடு சீனன் கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியார் தலைமையில் நடைபெறும்.

வெலிகாமம் கப்புவத்தை ரிபாயிய்யா மகளிர் அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.எஸ்.எம். அப்துல்லா (ரவ்ழி) விசேட பேச்சாளராக கலந்து கொள்வதுடன் சீனன் கோட்டை பிட்டவளை மிர்அதுஷ்ஷாதுலிய்யா ஸாவியா பிரதம இமாம் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.எம்.ஸெய்னுலாப்தீன் (பஹ்ஜி) இந்த ஸாவியா மஸ்ஜிதை வக்ப் செய்து வைப்பார் என நிர்வாக சபை தலைவர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.ஹிகாம் தெரிவித்தார்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்க உறுப்பினரும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை நிர்வாகக் குழு உறுப்பினருமான அஷ்ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) துஆப் பிரார்த்தனை புரிவதுடன் சீனன் கோட்டை பள்ளிச் சங்க உறுப்பினர்கள், மேற்படி ஸாவியா மஸ்ஜிதின் நிர்வாகிகள், உலமாக்கள், ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொள்வர்.



பாணந்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இரத்தான நிகழ்வின் போது பிரதேச செயலாளர் ஜயதேவி கொடிதுவக்கு எட்டாவது தடவையாக இரத்தானம் வழங்கும் போது எடுத்த படம்.

(படம் : பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

தொல்பொருட்களுக்கு சேதம் விளைவித்து

## விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட தேரரொருவர் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தமான காணி என அடையாளப்படுத்தப்பட்ட நிலத்தில் தொல்பொருட்களுக்கு சேதம் விளைவித்து விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த தேரர் ஒருவரையும் விவசாயி ஒருவரையும் எதிர்வரும் (13) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நொச்சியாகம நீதிமன்ற உதவி கடமை நீதவான் தமயந்தி ஹேரத் உத்தரவிட்டுள்ளார்.

இராஜாங்கனை யாய 16 மாளிகாதென்ன விஹாரையின் விஹாராதிபதி உடிலும்பர விஜிரசிறி தேரர் மற்றும் யாய 18 ல் வசித்து வரும் விவசாயி எஸ்.எச்.ஜகத் வசந்த ஆகியோருக்கே சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

விஹாராதிபதி யாய 18 பகுதியில் வசித்து வரும் விவசாயி ஒருவரை பயன்படுத்தி விஹாரைக்கு அருகாமையில் அமைந்துள்ள தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தமான 3 ஏக்கர் காணிக்குள் அனுமதியின்றி உட்பிரவேசித்து அதனை சுத்தம் செய்து வாழை மற்றும் மரக்கறி வகைகளை பயிரிட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கையினால் பழமையான தொல்பொருட்கள் மற்றும் கற் கம்பங்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக இராஜாங்கனை பிரதேச தொல்பொருள் உத்தியோகத்தர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதனால் குறித்த தேரர் மற்றும் விவசாயி ஆகிய இருவரும் ஒரு மாதகாலமாக பிரதேசத்தை விட்டுச் சென்று தலைமறைவாகி இருந்த நிலையில் கடந்த (05) இராஜாங்கனை பொலிஸ் நிலையத்தில் ஆஜராகிருந்த போது கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதவான் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

உடப்பு பொலிஸ் நிலைய

## பொலிஸ் பரிசோதகர் பணியிலிருந்து நீக்கம்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் உடப்பு பகுதியில் நபர்கள் இருவர் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

புத்தளம் உடப்பு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி உப பொலிஸ் பரிசோதகர் தனது நண்பர்கள் சிலருடன் சேர்ந்து இருவர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த நிலையிலேயே, அவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.




306 பி 2, கொழும்பு லயன்ஸ் கழக வட்டத்தினால் வவுனியா மருத்துவ பீடத்தில் கல்விகற்கும் யேக்கப் என்னும் மாணவிக்கு லயன் ஜெயச்சந்திரன் லயன் தவநிதி இருவரும் இணைந்து அவரின் பெற்றோர்களிடம் மடிக்கணினி ஒன்றை கையளித்தபோது எடுத்த படம். இந்நிகழ்வு லயன் இராசகுலசிங்கத்தின் காரியாலத்தில் நடைபெற்றது.

## புத்தளம் மாவட்டத்தில் கடும் வரட்சி; பொதுமக்கள் அசௌகரியம்

( நீர்கொழும்பு தினகரன் நிருபர் )

தற்போது நாட்டில் நிலவும் கடும் வரட்சி காரணமாக புத்தளம் மாவட்டத்தின் நாத்தாண்டிய தேர்தல் தொகுதியிலுள்ள பல்வேறு கிராமங்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் நாத்தாண்டிய, தப்போவ கமத்தொழில் திணைக்கள பிரிவிலுள்ள விவசாயிகள் வரட்சி காரணமாக தமது நிலங்களில் விவசாயப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதிலும்பல்வேறுசிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேபோன்று தும்மோதர கிராமத்திலுள்ள பாற்பண்ணையாளர்கள் தமது பால் மாடுகளுக்கான புற்களை வெட்டிக் கொள்வதற்கும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். வரட்சி காரணமாக நளீம்புர, றொபேட்வத்த, பதுவத்த மற்றும் மொரகலே ஆகிய பிரதேசங்களிலுள்ள குழாய் நீர் கிணறுகள் வற்றியுள்ளதால் பிரதேசவாசிகள் தமக்குரிய குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்காக தற்போது கொட்டராமுல்ல அக்கரை பிரதேசத்தின் ஆற்றுப் படுக்கைக்கு அருகாமையிலுள்ள குழாய் நீர் கிணறுகள் மற்றும் கிணறுகளை நாடிச் செல்கின்றனர்.

## கஜிமாவத்தையில் வீடின்றி வசிக்கும் குடும்பங்களுக்கு விரைவில் வீடுகள்

### துரிதமாக வழங்குமாறு ஜனாதிபதியின் பணிப்பு



கொழும்பு, கஜிமாவத்தையில் வீடில்லாமல் வசிக்கும் சகல குடும்பங்களுக்கும் வீடுகளை வழங்கத் தேவையான பணிகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். அரசாங்கத்தின் வீடுகள் வழங்கும் கொள்கைகள் மற்றும் அளவுகோல்களுக்கு அமைவாகவே இப்பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி அறிவித்தார்.

06

## மனுக்குலத்தின் பெறுமதியான இருப்பில் பெண்களின் வகிபாகம் தவிர்க்க முடியாதது

பண்டைய காலத்திலிருந்தே மனுக்குலத்தின் நிலையான இருப்பானது, வலுவூட்டப்பட்ட பெண்களின் வலிமையைப் பொறுத்தாக இருந்ததாக,எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாசா தெரிவித்துள்ளார்.மகளிர் தினச் செய்தியில் அவர் தெரிவித்துள்ளதாவது;

தாயின் அரவணைப்பு, சகோதரியின் பாசம், மனைவியின் நேசம், மகளின் அன்பு என சகலதையும் சமமாக அனுபவிக்கும் பாக்கியம் தனக்கு கிடைத்ததால், பெண்ணின் தைரியம், பலம், உறுதிப்பாடுகளை புரிந்து கொள்ள முடிந்தது.



நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 52% பெண்கள் உள்ளனர். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இவர்கள் 29% நேரடியாகப் பங்களிக்கின்றனர்.

06

## தவக்கால சிந்தனை



### "உன்னைப்போல் உன் அயலானையும் அன்பு செய்"

நாம் அருளின் காலமாகிய தவக்காலத்தின் அரைவாசியைக் கடந்து விட்டோம். இன்றைய நாளினுடைய இறைவார்த்தையினை நமது இதயத்திலும் மனதிலும் இருத்துவோமாயின், அவை நம்மிடமுள்ள சந்தேகம், பிரிவினை போன்றவற்றை வெளியகற்ற அழைக்கிறது.

ஓசேயா இறைவாக்கினர் பிரமாணிக்கம் நிறைந்தவர். யாவேயுடன் நெருக்கமான உறவில் இருந்தவர். அவரது செய்தியும் மிகவும் நன்மை நிறைந்தவை. அவரது அழைப்பானது உண்மையாகவே உங்களை அன்பு செய்கிற இறைவனிடம் திரும்பி வாருங்கள் என்பதாகும்.

இன்றைய நற்செய்தியும் ஓசேயா இறைவாக்கினர் முதல் இறைவாக்கில் கூறுவது போன்று எவ்வாறு ஒருவர் நல்வழியில் பயணிக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது.

நற்செய்தியில் மறைநூல் அறிஞர் ஒருவர் இயேசுவை அணுகி அனைத்திலும் முதன்மையான கட்டளை யாது? என்ற கேள்வியினை முன்வைக்கின்றார். நாமும் அவரைப் போன்று அத்தகைய கேள்வியினை இன்று எழுப்ப வேண்டுமா?

இயேசுவின் பதிலானது, உன் கடவுளாகிய ஆண்டவரை முழுமையாக அன்பு செய்வாயாக. அவ்வாறே உன் அயலானையும் அன்பு செய்வாயாக. இவையே கட்டளைகள் அனைத்திலும் முதன்மையானதும் முழுமையானதுமாகும்.

இயேசுவின் பதிலானது தவக்காலப் பயணத்தை மேற்கொள்ளும் நம் அனைவருக்குமானது. தவக்காலமதில் இறைவேண்டல், உண்ணா நோன்பு, தர்மச் செயல்களில் ஈடுபட அழைக்கப்பட்டுள்ள நாமனைவரும் அதனூடாக அடுத்தவர் மட்டிலான நமது அன்பு பயணத்தை பெருக்கிக் கொள்ள வேண்டும்.

எனவே நம் தவக்காலத்தை அர்த்தமுள்ளதாக மாற்றிக் கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும் என்று இயேசுவிடமே கேட்டு அவர் தரும் பதிலுக்கு செயல் வடிவம் கொடுக்க முயற்சிப்போம். அன்பு வாழ்வு நம்மில் பெருகட்டும்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

## ஆசிரியைகள் ஆஸ்பத்திரியில் அனுமதி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாணந்துறை பகுதி பாடசாலையொன்றில் தேநீர் அருந்திய ஆசிரியைகள் 06 பேர், சுகயீனமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்றுக்காலை மேற்படி ஆசிரியைகள் இணைந்து ஓய்வு வேளையில் தேநீர்அருந்தியுள்ளனர். இதனையடுத்து அவர்களுக்கு சுகயீனம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.03.06
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5411
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,178,200.00
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 4 4 2 0 8 6

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3653
சீட்டிழுப்பு திகதி 2024.03.06
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,796,687.36
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 06 07 15 71
விசேட எழுத்து Q
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 87447

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1759
2024.03.06
85283
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.426,233,766.00
ஆங்கில எழுத்து K
சுப்பர் இலக்கம் 26
வெற்றி இலக்கங்கள் 17 24 26 47
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP**
திகதி 2024.03.06
சீட்டிழுப்பு இலக்கம் 0237
ஆங்கில எழுத்து S
L7 எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 1 7 1 6 6 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.26,366,672.40

**ராசி சுப பலன்**
திகதி 2024.03.06
சீட்டிழுப்பு இலக்கம் 720
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,140,534.80
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 01 04 60 61
தனயோக இலக்கம் 29740
நாளுக்கான விதி எண் 25

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1441
2024.03.06
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 82,831,857.44
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 05 22 42 65
விசேட எழுத்து E
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 18574


செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
நேர்த்தி தவறாதது
55 வருடங்களாக மாறாத நம்பிக்கை
நாடளாவிய ரீதியில் 110 கிளைகள்


லீஸிங்,
தங்கக்கடன்,
நிலையான வைப்பு,
சேமிப்பு,
மார்ஜின் டிரேடிங்
போன்ற உங்களின் அனைத்துவிதமான நிதித்தேவைகளுக்காக

எதிர்காலத்தை வென்றிட நான் ஆயத்தம்!

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
ஜயகமு ஸ்ரீலங்கா
SMART
நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் மக்கள் நடமாடும் சேவை குருணாகலையில்
மார்ச் 09-10 மு.ப. 9.30 இலிருந்து பி.ப. 4.00 மணி வரை
குருணாகலை வெஹர நகரசபை மைதானத்தில் நடைபெறும்.
வெளிநாடுகளில் வேலை தேடும் உங்களுக்கும்...
- அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களால் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்
- பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் புலமைப்பரிசில்கள்
- பாடசாலைகளுக்கு 'Smart Board'
- சுயவேலைவாய்ப்புக்கான உதவிகள் மற்றும் ஆலோசனைகள் உள்ளிட்ட பல சேவைகள்
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டு வேலைகளுக்கு செல்லும் உங்களுக்கு பூரண பாதுகாப்புண்டு. மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள ஜயகமு ஸ்ரீலங்கா நடமாடும் சேவையின் பணியக காட்சியகத்துக்கு வருகை தரவும்.
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 25ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 26

## குறள் தரும் சிந்தனை



அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு

நன்மைகளின் விளைநிலமாக இருக்கும் அறத்தைப் போல் ஒருவருடைய வாழ்க்கைக்கு ஆக்கம் தரக்கூடியது எதுவுமில்லை; அந்த அறத்தை மறப்பதை விடத் தீமையானதும் வேறில்லை.

# மகளிருக்கான உரிமைகளை வென்றெடுக்க பாடுபடுவோம்!

சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில், பாலின சமத்துவத்தை நோக்கிய பயணத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் தொடர்ந்து வரும் சவால்கள் குறித்து சிந்திப்பது இன்றைய காலத்தில் மிகவும் அவசியமாகும்.

தற்போதைய சூழலில், இலங்கைப் பெண்கள் தங்களது உரிமைகள் தொடர்பில் குறிப்பிடத்தக்க மைல்கற்களை அடைந்துள்ளனர் என்பதில் சந்தேகமில்லை, எனினும் அவர்களின் உரிமைகள் மற்றும் திறன்களை முழுமையாக உணர்ந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு இன்னமும் நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது.

பெண்களுக்கான கல்வி மற்றும் தொழிலாளர் பங்கேற்பில் இலங்கை பாராட்டத்தக்க முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் முதல் அரசியல் மற்றும் வணிகம் வரை பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவதன் மூலம் அதிகமான பெண்கள் பாரம்பரிய தடைகளை தகர்த்து வருகின்றனர். எவ்வாறாயினும், தற்போதுள்ள பாலின ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வது மிகவும் முக்கியமானது, குறிப்பாக கிராமப்புறங்களில் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளுக்கான அணுகல் அநேக பெண்களுக்கு குறைவாகவே உள்ளது.

முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று பாலின அடிப்படையிலான வன்முறை. பெண்கள் மீதான வன்முறையானது வெறுப்புப் பேச்சு, இணைய வழியிலான துன்புறுத்தல், அச்சுறுத்தல்கள் மற்றும் தொல்லை கொடுத்தல் போன்ற வடிவங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் கைத்தொலைபேசிகளுக்கு தேவையற்ற வெளிப்படையான பாலியல் உள்ளடக்கங்கள் அனுப்பி வைக்கப்படும் நிகழ்வுகள் அதிகரித்துள்ளதாக கணக்கெடுப்பு கண்டறிந்துள்ளது.

பெண்களையும் அவர்களது குடும்பத்தினரையும் அச்சுறுத்தும் மற்றும் மிரட்டும் தொலைபேசி அழைப்புகள், சில செயல்களைச் செய்யுமாறு மிரட்டப்படல், நெருக்கமான புகைப்படங்ளை அனுமதியின்றிப் பகிர்தல் என பெண்கள் பலவேறு வன்முறைளை நாளாந்தம் எதிர்கொள்ள நேரிடுகின்றது. புள்ளிவிபரங்களின்படி நான்கில் ஒருபெண் இவ்வாறான வன்முறைக்கு ஆளாகின்றாள்.

இதற்கு எதிரான போராட்ட முயற்சிகள் இருந்த போதிலும், கடுமையான சட்டங்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்புகளின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரிக்கவே செய்கின்றன. பெண்களுக்கு எதிரான வன்முறை அற்ற சமூக கலாசாரத்தை உருவாக்குவதற்கு சட்ட நடவடிக்கைகள் மட்டுமல்ல, கல்வி மற்றும் விழிப்புணர்வு மூலம் சமூக மாற்றமும் தேவைப்படுகிறது.

பொருளாதார வலுவூட்டல் என்பது கவனம் செலுத்த வேண்டிய மற்றொரு முக்கிய அம்சமாகும். தொழிலாளர்களில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து வரும் நிலையில், ஊதியம் மற்றும் தலைமைப் பதவிகளில் இன்னும் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. பெண்கள் தொழில் முனைவோரை ஊக்குவிப்பதும், சமவேலைக்கு சம ஊதியத்தை உறுதி செய்வதும் மிகவும் சமமான பொருளாதார நிலையை வளர்ப்பதற்கான இன்றியமையாத படிகளாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக பெண்கள் சமூக, கலாசார காவலர்களாக சித்தரிக்கப்படுவதும் பல சிக்கலான சவால்களுக்கு பங்களிக்கின்றன. பாரம்பரிய பெண் பாத்திரம் மற்றும் நவீன அபிலாஷைகளை சமநிலைப்படுத்துவது என்ற இரண்டுமே ஒன்றுடனொன்று முரண்பட்டவையாக உள்ளன. திருமணமான ஆண், திருமணமான பெண் இருவரையும் ஒப்பிட்டாலே இந்த வேறுபாடு தெளிவாகும்.

திருமணமான பெண், வேலைசெய்பவளாக இருக்கும் பட்சத்தில், அவள் என்னதான் உயர்பதவி வகித்தாலும் தனது வீட்டையும் சேர்த்தே அலுவலத்துக்கு எடுத்துச் செல்கின்றாள். இந்த இரட்டைச் சுமையிலிருந்தும், வன்முறைகளில் இருந்தும் பெண்ணைப் பாதுகாப்பதென்பது வெறும் சட்டத்தினால் மாத்திரம் சாத்தியப்படாது.

இதற்கான மாற்றம் சமூகத்திலிருந்தே வரவேண்டும். சமூகத்தின் அடிப்படை அலகான குடும்பங்களே இந்த மாற்றத்துக்கான தொடக்கப் புள்ளிகள். பெண் இரண்டாம் பட்சமானவள்தான் என்ற எண்ணம் குடும்பத்திலிருந்துதான் ஆரம்பமாகின்றது. குடும்பத்தில் ஆண்பிள்ளை ஒரு விதமாகவும் பெண்குழந்தை இன்னொரு விதமாகவும் வளர்க்கப்படுவதில் இருந்துதான் வன்முறைச் சிந்தனைகள் ஊற்றெடுக்கின்றன.

மாற்றங்கள் குடும்ப மட்டங்களில் இருந்து ஆரம்பமாக வேண்டும் என்பதையே சர்வதேச மகளிர் தினம் ஒவ்வொரு வருடமும் எமக்கு நினைவுபடுத்துகின்றது.

இன்றைய சர்வதேச மகளிர் தினத்தன்று எமது நாட்டின் மகளிர் அனைவரையும் வாழ்த்துவதில் நாம் பெருமை கொள்கின்றோம்.

editor.tkn@lakehouse.lk

# பாவங்களை நீக்கி, புண்ணியங்களை தேடும் அற்புதம் நிறைந்த சிவராத்திரி

இவ்வுலகில் அனைத்து உயிர்களுக்கும் உயிர் வாழ உரிமை உண்டு என்ற புரிதல் அவசியம். இனியாவது பாவங்கள் செய்யக் கூடாது என்று சங்கற்பம் எடுப்பதும் முக்கியம். அவ்வாறு பாவங்களை அகற்றிவிட்டு, புண்ணியங்களைச் சேர்த்துக் கொள்ளும் அற்புதமான நாள்தான் சிவராத்திரி.

மாசி மாதம், தேய்பிறை சதுர்த்தசிதான் (24 ஆம் நாள்) சிவராத்திரி. அனைத்துக்கும் ஆதாரமான சிவன், உயிர்களைப் படைத்ததும், ஒடுக்கியதும் (தனக்குள் ஐக்கியப்படுத்தியது) இந்த நாளில்தான். அதாவது, படைத்தலுக்கும், அழித்தலுக்கும் ஆதாரமான இறைவனுக்கான அனுஷ்டானம் இது.

எந்த ஓர் உயிருக்கும் ஆணவ குணம் சிறிதேனும் இருக்கும். அதற்கு தேவாதி தேவர்களும் விலக்கல்ல. தங்களின் ஆணவ குணம் அடக்கப்பட, அவர்கள் சிவபெருமானை வணங்கும் நாள் சிவராத்திரி. அந்த நாளின், மூன்றாம் காலத்தில் சிவனை வழிபட்டால் எப்பேர்ப்பட்ட பாவங்கள் செய்திருந்தாலும் விட்டு விலகிப் போகும்.

அதாவது, தன்னால் ஒதுக்கப்பட்ட, தான் ஏற்றுக் கொள்ளாத விஷயங்களைக் கூட சிவன் அந்த நேரத்தில் ஏற்றுக்கொண்டு, மன்னித்து அருள்புரிவார். அந்த அளவிற்கு மகத்துவம் மிக்க நேரம் அது.

அதாவது பாவங்கள் மன்னிக்கப்படும். எனவேதான், அந்நாளில் சிவாலயங்களுக்குச் சென்று இறைவனைத் தொழுமாறு நம் முன்னோர்கள் அறிவுறுத்தினர். அது, நிறைந்த புண்ணியத்தையும் நமக்குத் தரும்.

மூன்றாம் காலம் (நள்ளிரவு) என்பது தீட்டுக்களைக் கூட விலக்கி வைக்கும் நேரம். எனவேதான், சிவபூஜையில் பயன்படுத்தாத ‘தாழம்பூ' அந்த ஒரு தருணத்தில் மட்டும் பூஜைக்கு எடுத்துக் கொள்ளப்படும். பூலோக உயிர்கள் மட்டுமின்றி தேவர்கள், கிங்கரர்கள், பூதகணங்கள் சுவாமியை ஆராதிக்கும் தினமும் அதுதான் என்பது ஐதீகம்.



சிவராத்திரி விரதத்தின் பின்னணியில் பல கதைகள் சொல்லப்படுகின்றன. வில்வ மரத்தின் மேல் இருந்த குரங்கு ஒன்று, ஒரு சந்தர்ப்பத்தில் மரத்தில் இருந்த இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்து கீழே வீசியது. ஓர் இரவு முழுதும் அது அவ்வாறு செய்தது. அந்த மரத்தினடியில் ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. ஒரு வில்வ இலை கீழேயிருந்த சிவன் மீது விழ, அதுவே அவருக்கு அர்ச்சனையானது.

அதனால், அகமகிழ்ந்த சிவனார், அவரை அடுத்த பிறப்பில் சக்கரவர்த்தியாக அவதரிக்கச் செய்தார். அவரே, முசுகுந்தச் சக்கரவர்த்தி. மன்னரான பின்னும், சிவபக்தனாக இருந்து, இந்திரன் பூஜித்த விடங்க லிங்கத்தைப் பெற்று சிவனின் அருள் பெற்றார். குரங்கு வடிவில் இருந்த மன்னன் வரலாறு, கயிலாயத்தில் நடந்ததாகவும், காட்டில் வேடன் ஒருவனிடமிருந்து தப்பி காட்டில் இருந்தபோது இவ்வாறு செய்ததாகவும் இரு வேறு புராணங்கள் சொல்லப்படுகின்றன. திருவண்ணாமலையின் தல வரலாறு நூலில் அடிமுடி காண முடியாதபடி உயர்ந்த சிவன், ‘லிங்கோத்பவர்' வடிவம் எடுத்து பக்தர்களை உணர வைத்த நாள் சிவராத்திரி எனக் கூறப்படுகிறது. சிவராத்திரியை ‘லிங்கோத்பவ காலம்' என்றும் சொல்வர். ‘மகாநிசி காலம்' (நள்ளிரவுக்கு முன்னும், பின்னுமான ஐந்து நிமிடங்கள். அதாவது, நள்ளிரவு 11.55 12.05 வரை) என்று சாஸ்திரங்கள் சொல்லும் நள்ளிரவு நேரத்தில், சிவனை வழிபடுவது பல நன்மைகளைத் தரும்.

சிவராத்திரி, நான்கு காலங்களிலும் நான்கு விதமான அபிஷேகங்கள் சிவபெருமானுக்குச் செய்யப்படும். முதல் கால பூஜையில் பஞ்சகவ்யம்; இரண்டாம் காலத்தில் பால் மற்றும் பஞ்சாமிர்தம், மூன்றாம் காலத்தில் பழச்சாறுகள், நான்காம் காலத்தில் சந்தன அபிஷேகம் செய்வது விசேஷம்.

சிவராத்திரி தினமான இன்று எல்லா சிவாலயங்களிலும் சிவபெருமானை வழிபடுவது புண்ணியத்தைத் தரும். சிவராத்திரி அன்று கண் விழித்திருந்து விரதமிருந்து இறைவனை வணங்கும்போது முழுமையான இறைவன் அருள் கிடைக்கும்.

விரதம் கடைப்பிடிப்போர் முதல்நாள் ஒரு பொழுது உணவருந்தி சிவராத்திரியன்று உபவாசமாய் இருந்து காலையில் குளித்து சிவசிந்தனையுடன் கண்விழித்திருந்து நான்கு சாம வழிபாடு செய்யவேண்டும். அடுத்தநாள் காலையில் தீர்த்தமாடி, சுவாமி தரிசனம் செய்து அடியார்களுடன் உணவருந்தி (பாரணை செய்து) விரத்தை நிறைவு செய்தல் வேண்டும். சிவராத்திரிக்கு மறுநாள் சிவபுராணம் படித்தோ அல்லது கேட்டோ, பகல் பொழுதைக் கழிக்க வேண்டும்.

அதன் பின் உபதேசம் தந்த குருவைப் பூஜை செய்து விட்டு, உடைகள் மற்றும் உணவினை அந்தணர்க்கு தானமாக அளித்து விரதத்தை நிறைவு செய்யும் விதமாக உணவு உண்ண வேண்டும். சிவராத்திரி நாளில் முழுவதும் உபவாசம் இருக்க முடியாதோர், ஒவ்வொரு ஜாமப் பூஜை முடித்த பிறகும் தண்ணீர், பால், பழங்களை உண்ணலாம்.

சிவராத்திரி விரதம் இருப்பதால் தெரியாமல் செய்த பாவங்களுடன், தெரிந்தே பாவங்கள் செய்திருந்தாலும் அவை நம்மை விட்டு நீங்கிப் போகும்.

சிவராத்திரியன்று அதிகாலை எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்து சிறப்பாக வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவதும், நாவினுக்கருங்கலம் ஆனதும், பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நண்ணி நின்றருப்பதுமான இறைவனின் பஞ்சாட்சர மந்திரத்தை கூறி பூஜை செய்ய வேண்டும். எதுவும் உண்ணுதல் கூடாது. ஆலயம் சென்று லிங்க மூர்த்தியையும் அம்பாளையும் தரிசித்து வரலாம்.

முடிந்தவரையில் வில்வ இலைகளால் சிவனை அர்ச்சனை செய்ய வேண்டும். வில்வ அர்ச்சனை அவருக்கு உகந்தது என்பதால், அதனையே பிரசாதமாகப் பெற்றுச் சென்று வீட்டில் வைத்தால் ‘சுபிட்சம்' உண்டாகும்.

**நடராஜன் ஹரன்...**
பனங்காடு

# பெண்களை அற்பமாக நோக்குகின்ற மனோநிலை மாற்றம் பெற வேண்டும்!

பெண் சுதந்திரம் என்றால் என்ன?

இந்த வினாவைப் பல நூற்றாண்டுகளாகக் கேட்டுக் கொண்டேதான் இருக்கிறோம். ஆனால், இன்றுவரையில் முழுமையான விடை கிடைக்கவில்லை. இன்று ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் எல்லாத் துறைகளிலும் சாதித்து வருகிறார்கள் என்றாலும், அவர்களுக்கான முழுமையான சுதந்திரத்தைக் கொடுத்திருக்கிறோமா?

பெண்கள் அனைத்துத்துறைகளிலும் முன்னேறிக் கொண்டே வந்தாலும், பாதுகாப்பு இன்மையால் பாதிக்கப்படுவதை மறுக்க முடியாமல் கையறு நிலையில் இருக்கிறோம். உலகநாடுகளை எடுத்துக் கொண்டால் பொலிஸ்துறையில் இருக்கும் பெண்களுக்குக் கூட முழுமையான பாதுகாப்பு இல்லை என்பதே இன்றைய நிலை.

இன்னொரு கொடுமையான விடயமும் அரங்கேறுகின்றது. பெண்ணே இன்னொரு பெண்ணை துன்புறுத்தும் அவலமும் நடந்து வருகிறது. பெண்களுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டாலும், அவர்களில் பலர் இன்றும் அடிமைத்தனத்திலிருந்து மீண்டு வராமல் இருக்கும் நிலையே நீடிக்கிறது. பெண்ணுக்குச் சுதந்திரம் இருக்கிறதா? அது எப்படியான சுதந்திரமாக இருக்கிறது? என்ற வினாவை காலம் காலமாக எழுப்ப வேண்டியக் கட்டாயத்திலேயே நாம் இருக்கிறோம்.




பெண்கள் மற்றைய யாரையும் சார்ந்து வாழாமல் இருப்பதற்கான பொருளாதாரக் கட்டமைப்பு நம்மிடம் இல்லை. எல்லாப் பெண்களுக்குமே யாராவது ஒருவரைச் சார்ந்து வாழ வேண்டிய கட்டாயத்திலேயே இருக்கிறார்கள். எந்தவிதமான சிரமமும் இன்றி, தான் விரும்பியதைச் செய்யப் பெண்களுக்கு இங்கே உரிமை இல்லை. பெண் என்பவள் இப்படித்தான் வாழ வேண்டும் என்று, எழுதப்படாத சட்டதிட்டங்களை வகுத்து வைத்திருக்கிறோம். இதை மீறி பெண் வெளியே வந்தால், அவளை குற்றம் சுமத்துகிறோம்.

பெண் சுதந்திரம் பற்றிப் பேசுபவர்கள் கூட, பெண்ணை முழுமையான சுதந்திரமாகச் செயல்பட விடாமல் தடுக்கிறார்கள் என்பதும் உண்மையாக இருக்கிறது.

ஒரு பெண் தனது திறமைகளைக் கொண்டு முன்னேறுகிறார் என்றால், அவளுக்கு வழிகாட்டி, ஊக்கப்படுத்தாமல் அவளது முன்னேற்றத்தைத் தடுக்கும் போக்கே பெரும்பாலான ஆண்களிடம் இருக்கிறது. பெண்களில் பலர் ஏமாந்து போய் வாழ்க்கையைச் சிதைத்துக் கொள்பவர்களாகவும் இருக்கிறார்கள். இன்றைய நவீன பொழுதுபோக்கு ஊடகமான முகநூல், இன்ஸ்டாகிராம், புலனம் போன்றவை பெண்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படுவதை விட, சீரழிவுக்கே அதிகம் பயன்படுகின்றன.

அறிவியல் வளர்ச்சியை ஏற்றுக் கொள்ளக் கூடாதா? என்று கூட ஒரு வினா எழுப்பலாம். ஆனால் இதை எப்படி நம் வளர்ச்சிக்குப் பயன்படுத்துகிறோம்? என்பது முக்கியம். பெண்களில் ஒரு தொகுதியினர் ஆடம்பர வாழ்க்கையை இன்று அதிகம் விரும்புகிறார்கள். இதுவே அவர்களின் பாதிப்புக்கும் காரணமாகி விடுகிறது. ஆடம்பர வாழ்க்கையின் மீதான மோகத்தால், எளிதில் ஏமாந்து போகும் பெண்களின் அவநிலையை செய்திகளாக நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

நவீன ஊடகங்களின் மூலம் பெண்களில் பலரை எளிதில் ஏமாற்றி விடுகிறார்கள். ஒருவருடைய உண்மை முகம் தெரியாமலேயே முகநூல் வழியாகவும், இன்ஸ்டாகிராம் வழியாகவும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, ஏற்படப்போகும் பின்விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் பலர் ஏமாந்து விடுகிறார்கள். வயது வித்தியாசம் எதுவும் இல்லாமல், எல்லா வயதினருமே ஏமாந்து சீரழியும் நிலை அன்றாடம் நடந்து வருகிறது.

இன்னொரு பக்கத்தில் இது போன்ற நவீன ஊடகங்களைச் சரியாகப் பயன்படுத்தி, பொருளாதாரத்தில் தங்களை முன்னேற்றிக் கொண்டு வாழும் பெண்களும் இருக்கிறார்கள். தடைகளை உடைத்து முன்னேறும் பெண்களின் எண்ணிக்கை என்பது, குறைவாகத்தான் இருக்கிறது. பெண்கள் தங்களின் சுயபுத்தியை தொலைத்து விடாமல், பாரதி சொல்வது போல, ‘சிந்தனையில் தெளிவும், நேர்கொண்ட பார்வையும்' இருந்தால் எந்தத் துறையிலும் சாதிக்கலாம்.

கல்வியிலும், பொருளாதாரத்திலும் பெண்கள் முன்னேறி இருந்தாலும், பெண்களுக்கான அங்கீகாரம் இன்றும் முழுமையாகக் கிடைக்கவில்லை. ஒரு சிலர் தான் தங்களின் தனித் திறமையால் முன்னேறி இருக்கிறார்கள். இன்னும் ஏராளமான பெண்கள் அவலமான நிலையில்தான் இருக்கிறார்கள்.

பெண்கள் பாதிக்கப்பட்டதைப் பொதுவெளியில் பகிர்ந்து கொள்ளக் கூடச் சுதந்திரம் இல்லாமல் உள்ளது. பெண்கள் தங்கள் பாதிப்புகளை வெளியில் சொல்லத் தயங்குகிறார்கள்.

பெண்களின் முன்னேற்றத்திற்கு முக்கியமான தடையாக இருப்பது, பாலியல் தொந்தரவுகள்தான். பாலியல் தொந்தரவுகளை வெளியில் சொல்ல முடியாமல், குடும்பச் சூழல் காரணமாகவும், வெளியில் தெரிந்துவிட்டால் ஏற்படப் போகும் அவமானம், எதிர்கால பாதிப்பு போன்றவற்றால் நெருக்கடிகளோடுதான் பயணிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள்.

பெண்களை அற்பமாகப் பார்க்கும் பார்வையில் இருந்து மாற்றம் காணாமல், முழுமையான சுதந்திரத்தை அவர்களுக்குக் கொடுக்க முடியாது என்பதே உண்மை. பெண்களுக்கும் உணர்வுகள் இருக்கின்றன, சுயமரியாதையும், தனித்திறமையும் இருக்கின்றன. பெண் என்பவள் எல்லாவற்றிற்கும் கீழ்மையானவள் என்று அடிமைப்படுத்தும் போக்கிலிருந்து மாறாமல், பெண்ணியம் பற்றியும், பெண் சுதந்திரம் பற்றியும் மேடை போட்டு முழங்குவதால், எந்த மாற்றமும் வரப் போவதில்லை.

**நந்தவனம் சந்திரசேகரன்...**

# கொட்டகலையில் நாளைமறுதினம் இ.தொ.காவின் மகளிர்தின விழா


இலங்கை தொழிலாளர் காங்கிரசின் மாபெரும் மகளிர் தின பெருவிழா எதிர்வரும் 10ம் திகதி (10.03.2024) கொட்டகலை காங்கிரஸ் தொழில்நுட்ப வளாகத்தில் வெகுவிமரிசையாக நடைபெறவுள்ளது. இ.தொ.காவின் இணை மாநிலங்கள் இணைந்ததாக பெருந்திரளான மங்கையர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இ.தொ.காவின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.காவின்; பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் நிதிச்செயலாளரும், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் கண்காணிப்புக்குழு பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோரது பரிந்துரைக்கமைய, மலையக பிரதேசங்களிலுள்ள இயக்குனர்கள், மாநில, மாவட்ட பிரதிநிதிகள் மகளிர் இணைப்பதிகாரிகள், இ.தொ.காவின் அனைத்து உத்தியோகத்தர்களும் இப்பெருவிழாவை ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

இதில் பேச்சுக்கள், கலாசார நிகழ்வுகள், சிலம்பாட்டம், கும்மி நடனம், வீதி நாடகம், கிராமிய நடனங்கள் இடம்பெறவுள்ளன. இ.தொ.காவின் பிரதித் தலைவரான திருமதி. அனுசியா சிவராஜா இப்பெருவிழாவிற்கு தலைமை வகிப்பார்.

மலையக மகளிர் பிற சமூக மகளிருக்கு சமமாக சிந்திக்கவும், செயற்படவும் வாழவும் வேண்டும் என்பதற்காக பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான். குறிப்பாக மகளிருக்கு 52 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கி இ.தொ.காவின் பல்வேறு பிரிவுகளிலும் அவர்களை பங்களிப்பு செய்ய வைத்தவர் அவர். தலைமை பயிற்சி, மகளிர் முகாமைத்துவம், சமூக உணர்வு, அரசியல் பாசறை, தொழிற்சங்க பணியென்று மலையக மகளிரை பன்முகத் தன்மை கொண்டவர்களாக மாற்றும் முயற்சியில் அவர் ஈடுபட்டார். அதில் வெற்றியும் கண்டார். அதன் பலனாக இ.தொ.காவில் முக்கிய பொறுப்புகளை மலையக மகளிருக்கு மிகச் சாதுரியமாக செய்துவருகின்றமை கவனிக்கத்தக்கது.

இ.தொ.காவின் பிரதித்தலைவரான திருமதி அனுசியா சிவராஜா தொழிற்சங்கதுறையில் பல்வேறு மட்டங்களிலும் அங்கம்வகித்து மத்திய மாகாண சபை உறுப்பினராக, மாகாண கல்வியமைச்சராக, இ.தொ.காவின் நிர்வாகச் செயலாளராக, பின்னர் பொதுச்செயலாளராக பல பொறுப்புகளை வகித்தமை இன்று நல்ல உதாரணம். எனவேதான் மகளிர் தின நிகழ்வுகளில் மகளிரை மாண்புபடுத்திட அமரர் தொண்டமானின் எழுச்சி நிகழ்வுகளை ஞாபகப்படுத்துவது சாலவும் பொருந்தும்.




பெண்களின் பலர் தோட்டக்கமிட்டி தலைவிகளாகவும், மாதர்சங்க தலைவிகளாகவும் இருந்து வருகிறார்கள். இப்பெண் உறுப்பினர்கள் பலர் தேயிலை மலை மேற்பார்வையாளர்களாகவும் (சூபர்வைசர்) கங்காணிகளாகவும், உதவி தோட்ட அதிகாரிகளாகவும் அமையப் பெற்று இருக்கின்றார்கள். மாகாண சபைகளிலும் பிரதேச சபைகளிலும் நகர சபைகளிலும் இந்தப் பெண்களுக்கு போதுமான இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த வகையில் மலையகத் தமிழ் பெண்கள் நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகளில் 27 அங்கத்தவர்களை கொண்டிருந்தமை வரலாற்றில் பெருமையே. கிளை பணிமனைகளில் பிரதிநிதிகளாக பலர் உள்வாங்கப்பட்டிருக்கின்றார்கள். பலர் உப தலைவர்களாகவும் இருப்பது பெருமைத் தரக்கூடிய விடயமாகும்.

இம்மாபெரும் மகளிர் தின நிகழ்வுகளில் இ.தொ.காவின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் நிதிச்செயலாளரும், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் கண்காணிப்புக்குழு பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் இ.தொ.கா பிரதி தலைவர்கள், நிர்வாகச்செயலாளர், சிரேஷ்ட சட்ட ஆலோசகர், கணக்காளர், உபதலைவர்கள், அரசியல் அமைப்பாளர்கள், தேசிய அமைப்பாளர்கள், இ.தொ.காவின் உயர்மட்ட அதிகாரிகள் இயக்குனர்கள், மாநில, மாவட்டப்பிரதிநிதிகள் அனைத்து உத்தியோகத்தர்கள் ஆகியோர் அடங்களாக மகளிர் இணைப்பதிகாரிகள், பிரதேச சபையின் தலைவர்கள், உறுப்பினர்கள், மாவட்ட மகளிர் தலைவிகள், மகளிர் அணி நிர்வாக சபை பெண் உறுப்பினர்கள், முன்னால் பிரதேச சபை பெண் உறுப்பினர்கள், பெருந்தோட்ட சேவையாளர்களாக பணிபுரியும் பெண்கள் உத்தியோகஸ்தர்கள், பல்வேறு தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ள மகளிர் அமைப்புகள் இதில் பங்கேற்கவுள்ளனர் பல்வேறு கலாசார நிகழ்வுகளோடு இ.தொ.காவின் அங்கத்தவர்கள் பெருந்திரளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

**தேவதாஸ் சவரிமுத்து...**
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# இறையருள் நிறைந்த ரமழான்

புண்ணியம் பூத்துக்குலுங்கும் அருள்மிகு ரமழான் மாதம் இன்னும் சில தினங்களில் இன்ஷா அல்லாஹ் எம்மை வந்து சேர உள்ளது. பணக்காரன், ஏழை, ஆண்டி, அரசன், முதலாளி, தொழிலாளி, படித்தவன், பாமரன் என வாழ்க்கையின் இரண்டு துருவங்களில் எதிரும் புதிருமாக நிற்பவர்கள் அனைவரையும் ரமழான் ஒரு நேர்கோட்டில் நிறுத்தி சமப்படுத்துகின்றது. ரமழான் நோன்பின் மூலம் மனிதர்களிடையே அன்பும் மனித நேயமும் வளர்க்கப்படுகின்றது. இவ்வாறு முஸ்லிம் உலகில் ஒரு மாபெரும் ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தும் இப்புனித மாதம் எங்களால் எப்படி பார்க்கப்படுகின்றது? இதன் மாண்புகளும், கீர்த்தியும், இது சுமந்து வருகின்ற அருட்பாக்கியங்களும் எங்களால் முறையாக புரியப்பட்டிருக்கின்றதா? அல்லது வளமை போன்று எல்லோருடனும் சேர்ந்து ரமழான் மாதத்தினுள் பிரவேசித்து 30 நாட்களை கழித்து விட்டு வெளியேறப் போகின்றோமா? என்பது போன்ற கேள்விகளை எங்களை நோக்கி கேட்பது இன்றியமையாத ஒன்றாக உள்ளது.

ரமழான் நோன்பு கடமையாக்கப்பட்டதன் நோக்கத்தை அல்லாஹ் பின்வருமாறு விபரிக்கின்றான்:

'ஈமான் கொண்ட விசுவாசிகளே.. உங்களுக்கு முன்பிருந்தவர்களுக்கு கடமையாக்கப்பட்டது போன்று உங்களுக்கும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. நீங்கள் இறையச்சம் உள்ளவர்களாக மாறும் பொருட்டு'. (அல்பகரா: 183)



எனவே இந்த ரமழானின் ஊடாக குறித்த இலக்கை எட்டுவதற்கான வழியைப் பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டும். வாழ்க்கையில் பல ரமழான்களை சந்தித்து, பல நூறு நோன்புகளை நோற்றிருந்தாலும் ரமழானின் ஊடாக நாம் அடைய வேண்டிய அடைவுகளையும் மாற்றங்களையும் பெற்றுக்கொண்டோமா என்ற நியாயமான கேள்விக்கு திருப்திகரமான பதிலை யாரிடமிருந்தும் எதிர்பார்க்க முடியாது என்பதுதான் உண்மை.

இப்புனித ரமழான் மாதத்தின் வருகைக்கு ஆவலோடு காத்திருப்பதும், அது தன்னை அடைந்து கொள்ள வேண்டும் என்ற வேட்கையை வெளிப்படுத்துவதும் நபி வழியாகும். ரமழான் வருவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'யா அல்லாஹ் எங்களுக்கு ரஜபு, ஷஃபான் மாதங்களில் பரக்கத் செய்வாயாக, ரமழான் மாதத்தை எங்களுக்கு அடைந்து கொள்ளச் செய்வாயாக என்று பிரார்த்தனை செய்வார்கள்'. (ஆதாரம் அல்பைஹகி)

மேலும் ரமழான் மாதத்திற்கு முன்னைய மாதமாகிய ஷஃபான் மாதத்தின் தலைப்பிறையை நபி (ஸல்) அவர்கள் மிக உன்னிப்பாகக் கவனித்து தேடுவார்கள். காரணம் ரமழான் மாதத்தின் தலைப்பிறையை முறையாக அடைந்து கொள்ள வேண்டும் என்பதற்காக.

பதினோரு மாத காலமாக பிரிந்திரிந்த இடைவெளியின் பின்பு தரிசனம் தரும் நெஞ்சம் கவர்ந்த கௌரவமான ஒரு அதிதியின் விஜயம் போன்று தான் அதன் வருகையை நபி (ஸல்) அவர்கள் எதிர்பார்த்து காத்திருந்திருக்கிறார்கள்.

இத்தீராத வேட்கையின் பின்புலத்தில் மறைந்திருக்கும் தாற்பரியமும், தத்துவமும் என்ன என்பதனை ரமழானின் சிறப்புகளை அறிந்து கொண்ட ஒவ்வொரு மனிதனும் எளிதாகப் புரிந்து கொள்வான்.

ரமழான் புனித அல்குர்ஆன் இறங்கப் பெற்ற மாதம், பாவங்கள் மன்னிக்கப்படுகின்ற மாதம், ஷைத்தான்களுக்கு விலங்கிடப்படுகின்ற மாதம், சுவனத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்ற மாதம், நரக விடுதலையை பெற்றுத் தருகின்ற மாதம், ஆயிரம் மாதங்களை விட சிறந்த அருள்மிகு லைலத்துல் கத்ரை தன்னகத்தே கொண்ட மாதம், துஆக்கள் அங்கீகரிக்கப்படுகின்ற மாதம், முஸ்லிம் சமூகத்திற்கு பல்வேறு வகையான வெற்றிகளை கொண்டு வந்த மாதம்,

மேற்குறிப்பிட்ட சிறப்புக்களை பின்வரும் நபிமொழி ஊடாகத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'ரமழான் மாதம் வந்து விட்டால் சுவர்க்கத்தின் கதவுகள் திறக்கப்படும். அதில் எந்த ஒரு வாசலும் மூடப்பட மாட்டாது. நரகின் வாசல்கள் மூடப்படும். அதன் எந்த ஒரு வாசலும் திறக்கப்படமாட்டாது. சைத்தான்களும், கட்டுக்கடங்காத ஜின்களும் விலங்கிடப்படுவர். ஒரு அழைப்பாளர்! (மலக்கு) நன்மை செய்ய நாடுபவரே முன் வருவீர், தீமை செய்ய நாடுபவனே தடுத்துக்கொள் என்பதாக அழைப்பு விடுப்பார். ஒவ்வொரு இரவிலும் அல்லாஹ் நரகிலிருந்து விடுதலை வழங்கிக் கொண்டே இருப்பான்' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: திர்மிதி)

அற்ப ஆசைகளாலும் கீழ்த்தரமான எண்ணங்களாலும் பொய்யான மாயைகளாலும் நிறைந்து போயிருக்கின்ற மனித உள்ளங்களுக்கு நோன்பு எனும் இறை கடிவாளம் இட்டு புத்துயிர் பெறச் செய்யும் உன்னதமான பயிற்சிக்களமே ரமழான் ஆகும். இமாம் ஹசன் அல் பிஸ்ரி (ரஹ்) இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். 'மூர்க்கத்தனமான மிருகம் கடிவாளம் இன்றி விடப்படுவதை விட மனித ஆசைகள் கடிவாளம் இன்றி விடப்படுவது ஆபத்தானது. எனவே அடங்காத மிருகத்தையும் விட மனித ஆசைகளுக்கே கடிவாளம் மிகவும் அவசியமாகிறது.

மோசமான பண்புகளாலும் அசுத்தமான எண்ணங்களாலும் ஆளப்படுகின்ற மனிதன், நோன்பு என்னும் தெய்வீக கடிவாளம் இடப்பட்டு நெறிப்படுத்தப்படும் போது ஆத்மார்த்தமான அமைதியையும் இன்பத்தையும் அடைந்து கொள்கிறான். அவனது வாழ்வில் ஆன்மீக மலர்ச்சியும், தெய்வீக ஆசிர்வாதங்களும் திண்ணமாகிவிடுகின்றன. மாற்றமாக அவன் கடிவாளம் இன்றி விடப்பட்டால் இக்கொடிய பண்புகளும் எண்ணங்களுமே அவனது வாழ்வின் மொத்த அழிவிற்கு அடித்தளமாக அமைந்து விடும்.

எனவே இந்த உயர்ந்த பாக்கியங்களோடும் வரப்பிரசாதங்களோடும் எம்மை நோக்கி வருகின்ற ரமழானை நாம் சாதாரணமாக எதிர்கொள்ள முடியாது. அதற்கான முழுமையான ஒரு திட்டமிடலும் வழிகாட்டலும் இன்றியமையாத ஒரு அம்சமாக உள்ளது.

அதை வெளிப்படுத்தும் முகமாகவே நபி (ஸல்) அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பே அதற்காக தன்னை தயார் செய்து கொண்டார்கள். அதனுள் நுழைந்து 30 நாட்களை கழித்து விட்டு வெளியில் வருகின்ற ஒரு மனிதன் மாற்றங்களுக்கு உட்பட்டிருக்க வேண்டும். புதிய நடத்தைகளையும் புதிய மனப்பாங்குகளையும் வளர்த்துக் கொண்டவனாக இருக்க வேண்டும். இவ்வாறான மாற்றங்களை சந்திப்பதற்கான எல்லா காரணிகளையும் கொண்டதாக ரமழான் அமைந்திருக்கின்றது.

ரமழான் மாற்றத்திற்கான காரணிகளைக் கொண்டிருந்தாலும் வெறுமனே பசித்தும் தாகித்தும் இருந்து இன்னும் சில அமல்களையும் செய்து விடுவதனால் மாத்திரம் மாற்றங்களை அடைந்து கொள்ள முடியாது. மாறாக ரமழானின் ஊடாக நாம் அடைய விரும்பும் மாற்றங்களை இலக்குகளாக கொண்ட ஒரு செயல்திட்டமொன்றினை வகுத்து ரமழான் காலங்களில் அதனை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவே நாம் விரும்புகின்ற மாற்றங்களை அடைந்து கொள்ளலாம்

ரமழானை மாற்றத்திற்கான சந்தர்ப்பமாக பயன்படுத்துவதற்குரிய படிமுறைகளை பின்வரும் அடிப்படைகளில் அமைத்துக் கொள்ளலாம்:

அதாவது தற்போது நாம் இருக்கின்ற தவறான நிலையை வெறுத்தலும், இந்நிலையை இந்த ரமழானுடன் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று விரும்புதலும், நாம் இந்த ரமழானின் ஊடாக அடைந்து கொள்ள விரும்புகின்ற மாற்றங்களை இலக்குகளாக வரையறை செய்து கொள்ளுதலும், அவ்விலக்குகளை அடைந்து கொள்வதற்கான 30 நாள் செயல் திட்டம் ஒன்றை தயாரித்துக் கொள்ளுதலும், அச்செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வெற்றியடைவதற்கு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்தலும், அவனோடு உடன்படிக்கை செய்து கொள்ளுதலும், அச்செயற்திட்டத்தினை உறுதியுடன் நடைமுறைப்படுத்தலும் மிகவும் பயன்மிக்கதாக இருக்கும்.

மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு இலக்குகளுடன் கூடிய செயல் திட்டம் ஒன்றினை தயாரித்து செயல்படுத்தி நாம் விரும்புகின்ற மாற்றங்களையும், ரமழான் சுமந்து வருகின்ற அனைத்து வகையான ஈருலக நன்மைகளையும் பெற்றுக்கொள்வதற்கு எம் அனைவருக்கும் அல்லாஹ் அருள்பாளிக்கட்டும்.

கலாநிதி, அல்ஹாபிழ்
எம்.ஐ.எம். சித்தீக்...
(அல்ஈன்ஆமி)
B.A.Hons, (Al Azhar university, Egypt) M.A.& PhD (International Islamic university, Malaysia)

# இஸ்லாத்தில் பிறை பார்த்தலின் முக்கியத்துவம்

இஸ்லாத்தின் பிரதான கடமைகளில் ஒன்றான ரமழான் நோன்பு முஸ்லிம்களை நோக்கி வந்து கொண்டிருக்கின்றது. அருள்மறையாம் அல் குர்ஆன் அருளப்பட்ட இம்மாதத்தில் நோன்பு நோற்பது முஸ்லிம்களின் மீது கட்டாய கடமையாகும். அந்த வகையில் அடுத்துவரும் சில தினங்களில் ரமழான் நோன்பு ஆரம்பமாகிவிடும். அதாவது ரமழான் மாதத்திற்கான தலைப்பிறை தென்பட்டதைத் தொடர்ந்து நோன்பு தொடங்கும்.

இஸ்லாத்தில் மாதக் கணிப்பு பிறையுடன் சம்பந்தப்பட்ட ஒன்று. முதல் பிறை தான் ஒவ்வொரு மாதத்தினதும் ஆரம்ப நாளாகும். இதனை அல் குர்ஆனும் நபிமொழிகளும் தெளிவாக எடுத்தியம்பியுள்ளன.

அல் குர்ஆனின் சூரா பகராவில் 'உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும்' (2:185) என்று அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்.

இதன் ஊடாக ரமழான் நோன்பை அல்லாஹ் பிறையுடன் தொடர்பு படுத்தி வைத்திருப்பது தெளிவாகிறது. நபி(ஸல்) அவர்களும் பிறை பார்ப்பதன் அவசியத்தை பல சந்தர்ப்பங்களில் எடுத்தியம்பியுள்ளார்கள்.

'பிறையைப் பாத்து நோன்பு வையுங்கள். பிறையைப் பார்த்து நோன்பு விடுங்கள். உங்களுக்கு மேக மூட்டம் தென்பட்டால் ஷஃபான் மாதத்தை முப்பது நாள்களாக முழுமைப் படுத்துங்கள்.' என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம் ஸஹீஹுல் புஹாரி)



மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள், 'ரமழான் பிறையை நீங்கள் காணும் வரை நோன்பு நோற்காதீர்கள். (மறு) பிறையைக் காணும் வரை நோன்பை விடாதீர்கள். உங்களுக்கு மேக மூட்டம் தென்படுமானால் (முப்பது நாட்களாக) அதைக் கணித்துக் கொள்ளுங்கள்' என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம் புஹாரி)

இந்த இரண்டு நபிமொழிகளும் கூட பிறை பார்த்து ரமழான் நோன்பை ஆரம்பிப்பதையும், பிறையைப் பார்த்து மாதத்தை நிறைவு செய்வதையும் வலியுறுத்தியுள்ளன.

அந்த வகையில் ஒரு தடவை இப்னு உமர் (ரழி) அவர்கள் மக்கள் பிறையைத் தேடினார்கள். அப்போது நான் அல்லாஹ்வின் தூதரிடம் வந்து நான் பிறையைப் பார்த்தேன் என்று சாட்சிக் கூறினேன். அப்போது நபி அவர்கள் நோன்பு நோற்று மக்களுக்கும் நோன்பு நோற்குமாறு கட்டளையிட்டார்கள்.

(ஆதாரம்: சுனன் அபீதாவூத்)

மற்றொரு சந்தர்ப்பில், 'நீங்கள் நோன்பு என முடிவு செய்யும் நாள் தான் நோன்பு ஆகும். நோன்புப் பெருநாள் என நீங்கள் முடிவு செய்யும் நாள் தான் நோன்புப் பெருநாள் ஆகும். ஹஜ்ஜுப் பெருநாள் என நீங்கள் முடிவு செய்யும் நாள் தான் ஹஜ்ஜுப் பெருநாள் ஆகும்' எனவும் அன்னார் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: சுனனுத் திர்மிதீ)

இந்நபிமொழிக்கு விளக்கமாக இமாம் திர்மிதி (ரஹ்) அவர்கள், நோன்பும், பெருநாளும் ஜமாஅத்தாகவும், பெரும்பான்மை மக்களுடனும் நோற்க வேண்டுமென்பது தான் இதன் பொருள் என்பதாக அறிஞர்கள் கூறியுள்ளார்கள்' என்றார்கள்.

'அவன்தான் சூரியனை பிரகாசமாகவும், சந்திரனை ஒளியுள்ளதாகவும் ஆக்கினான். ஆண்டுகளின் எண்ணிக்கையையும், காலக்கணக்கையும் நீங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு(ச் சந்திரனாகிய) அதற்கு மாறி மாறி வரும் பல படித்தரங்களை உண்டாக்கினான். அல்லாஹ் உண்மை(யாக தக்க காரணம்) கொண்டேயல்லாது இவற்றைப் படைக்கவில்லை – அவன் (இவ்வாறு) அறிவுள்ள மக்களுக்குத் தன் அத்தாட்சிகளை விவரிக்கின்றான்.

(அல் குர்ஆன் 10:5)

இவ்வசனத்தில் சந்திரனைப் படைத்ததின் நோக்கத்தை அல்லாஹ் தெளிவுபடுத்தியுள்ளான். அது மக்களுக்கு மாதத்தையும் ஆண்டுகளையும் அறிவிப்பதாக உள்ளது. சூரியனைப் பொருத்தவரை அது நாட்காட்டியாகும் என்று இப்னு ஹஸீர் (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு அமைய பிறை பார்ப்பதோடு ரமழான் நோன்பையும் ஆரம்பிப்போம்.

அப்துல்லாஹ்...

# தராவீஹ் தொழுகையின் சிறப்பு



ரமழான் கால இரவுகளில் தொழப்படும் தொழுகைக்கு தராவீஹ் என்று அழைக்கப்படும். ரமழான் கால இரவுத் தொழுகை நீட்டி நிதானித்து தொழப்பட்டதால் தராவீஹ் என ஓய்வெடுத்துத் தொழப்படும் தொழுகை என குறிப்பிடப்படுகிறது.

ரமழான் கால இரவுத் தொழுகை கட்டாய சுன்னத், 'சுன்னா முஅக்கதா" என்று கூறப்படுகிறது. நபி(ஸல்) அவர்கள் இதை ஊக்குவித்துள்ளார்கள். அத்தோடு அன்னார் செயற்படுத்தியும் காட்டியுள்ளார்கள். இந்த அடிப்படையில் நபி(ஸல்) அவர்களின் சொல், செயல் இரண்டின் மூலமும் இந்த சுன்னா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

'நம்பிக்கை கொண்டு (நற்கூலியை) எதிர்பார்த்து ரமழான் மாதத்தில் நின்று வணங்குபவரின் முந்தைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு விடும்' என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம் புஹாரி, முஸ்லிம்)

இந்த ஹதீஸின் அடிப்படையில் தராவீஹ் தொழுகை என்பது சுன்னாவாகும். இந்நபிமொழியே தாராவீஹ் தொழுகையின் சிறப்பையும், முக்கியத்துவத்தையும் உணர்த்தப் போதுமானதாகும்.

நபி(ஸல்) அவர்கள், 'ரமழான் கால இரவுத் தொழுகையை ஜமாஅத்தாகத் தொழுதார்கள். பின்னர் அதை விட்டு விட்டார்கள். அதற்குக் காரணமாகக் கூறும் போது, 'இது உங்கள் மீது கடமையாக்கப்பட்டு விடுமோ என நான் பயந்தேன்' எனக் கூறினார்கள்.

இது தொடர்பில் ஸைத் இப்னு ஸாபித்(ரழி) அவர்கள் அறிவித்துள்ள நபிமொழியில், 'நபி(ஸல்) அவர்கள் (ரமழான் மாதத்தில்) பள்ளிவாசலில் சில இரவுகள் (இரவுத் தொழுகை) தொழுதார்கள். அதனால் மக்கள் அவர்கள் பின்னே திரண்டு (தொழத் தொடங்கி) விட்டார்கள். ஒரு நாள் நபி(ஸல்) அவர்களின் குரலை மக்களால் கேட்க முடியவில்லை. எனவே, நபி (ஸல்) அவர்கள் (வீட்டினுள்) உறங்கிவிட்டார்கள் போலும் என்று மக்கள் நினைத்துக் கொண்டனர். அவர்களில் சிலர் நபி(ஸல்) அவர்கள் தங்களிடம் வெளியேறி வருவதற்காக கனைக்கலானார்கள். அதனால் (மறுநாள்) நபி(ஸல்) அவர்கள், '(ஒவ்வொரு நாளும் என்னைப் பின்தொடர்ந்து இரவுத் தொழுகையைத் தொழுகின்ற) உங்கள் செயலை நான் கண்டு வந்தேன். உங்களின் மீது (ரமழானின் இரவுத் தொழுகையான) அது கடமையாக்கப்பட்டுவிடுமோ என்று நான் அஞ்சும் அளவிற்கு உங்களுடைய அச்செயல் தொடர்ந்து கொண்டே இருந்தது. நீங்கள் (இரவுத்) தொழுகை உங்களின் மீது கடமையாக ஆக்கப்பட்டால் உங்களால் அதை நிறைவேற்ற முடியாது. எனவே, மக்களே! நீங்கள் (இரவுத் தொழுகையை) உங்கள் வீடுகளிலேயே தொழுங்கள். ஏனெனில், ஒரு மனிதனின் தொழுகைகளில் சிறந்தது அவன் தன்னுடைய வீட்டில் தொழுவது தான். கடமையான தொழுகையைத் தவிர என்று கூறினார்கள்' எனப் பதிவாகியுள்ளது.

(ஆதாரம் புஹாரி)

ஆன போதிலும் உமர்(ரழி) அவர்களது ஆட்சிக் காலத்தில் முறையான ஒழுங்குகளுடன் கூட்டாக இந்தத் தொழுகையைத் தொழும் நடைமுறை ஏற்படுத்தப்பட்டது. நபி (ஸல்) அவர்களின் வழிமுறைக்கு மாற்றமானதாகக் கருத முடியாது. அன்னார் இத்தொழுகையை கூட்டாகத் தொழுதுள்ள போதிலும் அது கடமையாக்கப்பட்டுவிடுமோ என அஞ்சித்தான் அவ்வாறு செயற்பட்டார்கள் என்பதையும் மறந்து விடலாகாது.

நபி (ஸல்) அவர்களுடன் சில நபித்தோழர்கள் இத்தொழுகையைக் கூட்டாகத் தொழுதுள்ளதால் ரமழான் கால இரவுத் தொழுகையை ஜமாஅத்தாகத் தொழுவது சுன்னாவாகும். இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நற்காரியத்துக்கும் ஒன்றுக்கு பத்து முதல் எழுநூறு வரை நன்மைகள் கிடைக்கப்பெறும். அதனால் நோன்பு காலம் கொண்டுள்ள இறையருள் நன்மைகளை அடைந்து கொள்வதில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்வோம்.

அப்பாஸ்...

# ரமழான் கால தானதர்மங்கள்



ஒரு தடவை நபி (ஸல்) அவர்களிடம் 'தர்மத்தில் சிறந்தது எது?' என்று கேட்கப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'ரமழானில் செய்யும் தர்மம் ஆகும்' என்று பதிலளித்தார்கள்.

(ஆதாரம்: திர்மிதி)

புனித ரமழான் மாதம், மாதங்களில் சிறந்த மாதமாக அமைந்துள்ளதைப் போன்று அதில் நிறைவேற்றப்படும் அனைத்து நற்காரியங்களும் சிறந்ததாக அமைந்து விடுகின்றன. குறிப்பாக, அதில் வழங்கப்படும் தர்மமும் மற்ற மாதங்களில் வழங்கப்படும் தர்மத்தை விட சிறந்ததாக விளங்குகிறது. அதற்கு நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளே நல்ல முன்னுதாரணமானகும்.

நபி (ஸல்) அவர்கள் மனிதர்களில் மிகப்பெரும் கொடையாளியாகத் திகழ்ந்தார்கள். (சாதாரண நாட்களை விட) வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களை ரமழான் மாதத்தில் சந்திக்கும் போது அன்னார் மிக அதிக மதிகம் வாரி வழங்கும் கொடையாளியாகத் திகழ்ந்தார்கள். ஜிப்ரீல் (அலை) அவர்கள் ரமழான் மாதத்தின் ஒவ்வொரு இரவிலும் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து (அதுவரை) அருளப்பட்டிருந்த குர்ஆனை நினைவுபடுத்துவார்கள். இருவருமாகத் அல் குர்ஆனை ஓதும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள். தொடர்ந்து வீசும் காற்றைவிட (வேகமாக) நபி (ஸல்) அவர்கள் நல்ல காரியங்களில் மிக அதிகமாக வாரி வழங்கும் கொடையாளியாகவே திகழ்ந்தார்கள். (ஆதாரம்: புஹாரி)

நபி (ஸல்) அவர்களின் சொல்படியும், அவர்களின் செயல்படியும் அன்னை ஆயிஷா (ரழி) அவர்களும் நோன்பு நோற்ற நிலையில் தானதர்மம் செய்துள்ளார்கள்.

ஒரு தடவை முஆவியா (ரலி) அவர்கள், ஆயிஷா (ரழி) அவர்களுக்கு 1180 வெள்ளிக்காசுகளை அன்பளிப்பாக அனுப்பி வைத்தார்கள். அன்று ஆயிஷா (ரழி) அவர்கள் நோன்பு நோற்றிருந்தார்கள். நோன்பு நோற்ற நிலையில் தமக்கு அன்பளிப்பாகக் கிடைத்த அனைத்து வெள்ளிக்காசுகளையும் மக்களிடையே பங்கு வைத்து வாரி வழங்கிவிட்டார்கள். நோன்பு துறக்கும் இப்தார் நேரம் வந்ததும் தமது பணிப்பெண்ணிடம் நோன்பு துறக்க இப்தார் உணவை கொண்டு வரும்படி வேண்டினார்கள்.

பணிப்பெண் ரொட்டியையும், ஆலிவ் எண்ணையையும் கொண்டு வந்து, 'தாங்கள் இன்று பங்கீடு செய்த வெள்ளிக்காசுகளிலிருந்து நோன்பு துறக்க இப்தார் உணவுக்காக இறைச்சி வாங்கி வரக்கூட ஒரு காசையும் மிச்சம் வைக்காமல் ஏன் அனைத்தையும் வாரி வழங்கினீர்கள்?' என்று கேட்டாள்.

அதற்கு ஆயிஷா (ரழி), 'இந்த விஷயத்தை முன்னே நீ எனக்கு ஞாபகப் படுத்தியிருந்தால், நான் அவ்வாறு செய்திருப்பேனே' என்று கூறினார்கள். 'தனக்குப் போக தானம்' என்பதையும் தாண்டி, தனக்கே ஒன்று கூட வைக்காமல் பிறருக்கே அனைத்தையும் வாரி வழங்கிய கொடை வள்ளல் தான்ஆயிஷா (ரலி) ஆவார்.

நபி (ஸல்) அவர்களைப் போன்று நபித்தோழர்களும் ரமழானில் அதிகமதிகம் கொடையளித்து வந்துள்ளனர். இப்னு உமர் (ரழி) அவர்கள், ரமழான் வந்துவிட்டால் ஏழைகள் இல்லாமல் நோன்பு துறக்க மாட்டார்கள். அவர்கள் நோன்பு நோற்க நாடி உணவு உண்ண ஆரம்பிக்கும் போது யாசகர் யாராவது வந்து உணவு கேட்டால், அவர் தம் உணவின் பங்கை வழங்கிடுவார். வந்து பார்த்தால் மீதி உணவை அவரின் குடும்பத்தினர் உண்டு முடித்து விடுவார்கள். இவ்வாறே அவர் ஸஹர் உணவை சாப்பிடாமல் நோன்பு நோற்பார். இந்த நல்லசெயல் அவரிடம் தொடர்ந்து நடக்கும்.

'எவர் ஒருவர் ஒரு நோன்பாளிக்கு நோன்பு துறக்க உணவு வழங்குகிறாரோ அவருக்கு நோன்பாளிக்கு வழங்கப்படும் நன்மை போன்று கிடைக்கும். இதனால் நோன்பாளியின் நன்மையிலிருந்து எதுவும் குறைக்கப்பட மாட்டாது' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: திர்மிதி)

இந்த சமுதாயத்தில் வாழ்ந்த முன்னோர்களில் நல்லவர்கள் தர்மம் வழங்குவதின் மீதும், நோன்பாளிகள் நோன்பு துறக்க இப்தார் உணவு வழங்குவதின் மீதும் பேராசை கொண்டிருந்தனர். மற்ற வணக்க வழிபாடுகளை விட இந்த செயலுக்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னிலை வழங்கி வந்தனர். இப்னு உமர் (ரழி), இமாம் அஹமத் (ரஹ்), இமாம் தாவூத் தாயீ (ரஹ்), மாலிக் பின் தீனார் (ரஹ்) ஆகியோர் தாங்கள் நோன்பு நோற்ற நிலையில் இப்தார் உணவை பிறருக்கு வழங்குவதில் தங்களைவிட பிறரை முற்படுத்தினர்.

ஹஸன் பஸரீ (ரஹ்), அப்துல்லாஹ் பின் முபாரக் (ரஹ்) ஆகியோர் தாங்கள் நோன்பு நோற்ற நிலையில் தமது சகோதரர்களுக்கு உணவு வழங்கி அவர்களை அமரவைத்து, அவர்களுக்கு பணிவிடை செய்து, அவர்களின் உள்ளங்களை ஆறுதல்படுத்துவார்கள்.

நபி (ஸல்) அவர்கள் முதற்கொண்டு நல்லோர்கள் வரை நோன்பு நோற்ற நிலையில் கொடையளிப்பதையும், தானதர்மம் வழங்குவதையும், சிறந்த செயலாக கருதினார்கள்.

ஆகவே நாமும் புனித ரமழானில் ஏழை நோன்பாளிகளுக்கு ஸஹர் உணவு, இப்தார் உணவு ஏற்பாடு செய்து கொடுப்போம். அத்தோடு தானதர்மங்கள் வழங்குவதிலும் சிரத்தை எடுத்துக் கொள்வோம்.

மின்ஸார் இப்றாஹிம்...

# ரயில் நிலையத்தில் புதிய டிஜிட்டல் திரைகள்



கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் ரயில் பயணிகளின் வசதிக்காக புதிய இலத்திரனியல் நேர அட்டவணை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன கோட்டை ரயில் நிலையத்துக்குச் சென்று அதனை ஆரம்பித்து வைத்தார்.

கோட்டை ரயில் நிலையத்தின் பிரதான நுழைவாயில் முன்பாக உள்ள பயணிகளுக்கும், ரயில் நிலைய பயணிகளுக்காகவும் இரண்டு விசாலமான டிஜிட்டல் திரைகளுடன் கோட்டை ரயில் நிலையத்தில் 07 டிஜிட்டல் திரைகள் மூலம் ரயில் நேரஅட்டவணைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தனியார் நிறுவனமொன்றின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் இத் திட்டத்தை ஆரம்பிக்கும் நிகழ்வில் ரயில்வே பொது முகாமையாளர், எச். எம். கே. டபிள்யூ. பண்டார, பிரதி பொது முகாமையாளர்கள், மீடியா ஹட் நிறுவன தலைவர் கமிந்த மலவியாராச்சி உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கொழும்பு 09, விபுலானந்தா தமிழ் வித்தியாலயத்தின்

# கல்வி பொது தராதர சாதாரண தர மாணவர்களுக்கான கருத்தரங்கு!

## கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகனினால் நன்கொடையும் வழங்கி வைப்பு











கொழும்பு 09 விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் கல்வி பொது தராதர சாதாரண தர மாணவர்களுக்கான கருத்தரங்கு இன்று பாடசாலையின் அதிபர் என். ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாடசலையின் அதிபரின் அழைப்பின்பேரில் கலந்துகொண்ட ஐ.டி.எம் நேசன் கெம்பஸ் மற்றும் ஜனனம் அறக்கட்டளையின் ஸ்தாபகருமான கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் வண பிதா சந்ரு பெர்னாண்டோ கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.

அதேவேளை மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் சாதாரண தர மாணவர்களுக்கான கருத்தரங்கை நடாத்துவதற்கான அன்பளிப்பும் கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகனால் வழங்கி வைக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய கலாநிதி ஜனகன், கொழும்பு 09, விபுலானந்தா தமிழ் வித்தியாலயத்தி 1993ஆம் ஆண்டு பழைய மாணவர் சங்கத்தால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய பாடசாலை முழுவதற்கும் வர்ணம் பூசுவதற்கான நிதியை நன்கொடையாக வழங்கவுள்ளதாக உறுதியளித்தார். இந்த நிகழ்வின் போது கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகனுக்கு நினைவுச்சின்னமொன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

## மின்சார மீளிணைப்புக்கான...

செலுத்துவதற்கான வசதிகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், எச்.தர்மசேன எம்.பி முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்:

மின் துண்டிக்கப்பட்டு மீள் இணைப்பு வழங்கும் போது பெறப்படும் கட்டணங்கள் மின்சாரத்துறையின் நிர்வாக சேவைக்காக பயன்படுத்தப்படுகிறது.அதற்கமைய 2019 இல்,மீள் இணைப்புகள் மூலமாக சுமார் 78 இலட்சம் ரூபாவை வருமானமாக பெற முடிந்தது.

2023இல், நீர் மின் திட்டம் ஊடாக அதிகளவில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது.உமா ஓயா செயற்றிட்டத்தின் ஊடாக 120 மெகாவோட் மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்பில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

முழுமையான தரப்படுத்தலுக்கு அமைய கடந்த (04 ) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் மின்கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. எரிபொருள் மற்றும் நிலக்கரி ஊடான மின்னுற்பத்தியை மட்டுப்படுத்தி காற்றாலை,சூரிய மின் கலம் மற்றும் நீர் மின் உற்பத்தி ஊடாக அதிகளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்டு மேலதிக கேள்வி எழுப்பிய பாராளுமன்ற உறுப்பினர் எச்.தர்மசேன பொருளாதார நெருக்கடியால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 400,500,600 ரூபா மின்கட்டணத்தை செலுத்த முடியாதவர்களின் மின்கட்டணம் துண்டிக்கப்படுகிறது.மீண்டும் அவர்களுக்கு மின் இணைப்பை வழங்கும் போது 3000 ரூபா மேலதிக கட்டணமாக அறவிடப்படுகிறது.

400 ரூபாவை கூட செலுத்த முடியாதவர்களிடமிருந்து 3000 ரூபாவை மேலதிகமாக கோருவது நியாயமற்றது. ஆகவே இந்த 3000 ரூபா கட்டணத்தை 500 ரூபாவாக குறைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர்,1000 ரூபாவுக்கு குறைந்த மின்கட்டணத்தை கொண்டவர்களின் மின் இணைப்பை துண்டிக்கும் போது கால அவகாசம் வழங்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளோம். நிலுவை இல்லாமல் உரிய நேரத்தில் மின்கட்டணத்தை செலுத்துபவர்கள் ஏதாவது சந்தர்ப்பத்தில் மின்கட்டணத்தை செலுத்துவதை தாமதித்தால் அவர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

மின்கட்டணத்தை செலுத்தாதவர்களின் மின் கட்டணம் துண்டிக்கப்பட்டு அவர்களுக்கு மீளிணைப்பு வழங்கும் போது அறவிடப்படும் 3000 ரூபா கட்டணம் கடந்த ஆண்டு 1300 ரூபாவாக குறைக்கப்பட்டது.இந்த தொகையை 800 ரூபாவாக நிர்ணயிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தியோகபூர்வ அனுமதி வெகுவிரைவில் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பும்...

தெரிவித்தார். தேசிய சுதந்திர முன்னணி கட்சியின் எம்பி ஜயந்த சமரவீர, மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆசிரியர் நியமனங்கள் தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், மாகாண ஆளுநர்களுடன் நேற்று முன்தினம் காலையும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளேன். அத்துடன் நேற்று காலை சகல மாகாணங்களிலுமுள்ள கல்வித்துறை உயர் அதிகாரிகளுடன், சூம் தொழில்நுட்பம் ஊடாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. விரைவாக மேற்கொள்ள வேண்டிய ஆசிரியர் நியமனங்களை வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. புள்ளிகளின் அடிப்படையில் தெரிவானவர்கள் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர்.

ஜயந்த சமரவீர எம்பி தமது கேள்வியின் போது,

மேல் மாகாணத்தில் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பரீட்சை நடத்தப்பட்டது. அதனையடுத்து நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டது. சமகாலத்தில் செயன்முறை பரீட்சையும் நடத்தப்பட்டது. 5350 பேர் இதற்கு தோற்றியுள்ளனர். அவர்களில் 2500 பேருக்கு மட்டுமே இதுவரை நியமனம் வழங்கப்பட்டுள்ளது. எனினும், மேல் மாகாணத்தில் 5305 ஆசிரிய பெற்றிடங்கள் காணப்படுகின்றன. பாடசாலைகளில் கடும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால், மீதமானவர்களுக்கு எப்போது நியமனம் வழங்கப்படும் என்பதை கல்வியமைச்சர் சபையில் வெளிப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இதற்குப் பதிலளித்த போதே நியமனங்கள் தொடர்ந்து வழங்கப்படும் என கல்வி அமைச்சர் தெரிவித்தார்.






## குற்றச் செயல்களில்...

கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் எழுதுவினைஞர் ஒருவர், பொலிஸில் முன் வைத்துள்ள முறைப்பாட்டுக்கு இணங்கவே இவர்கள் கைது செய்யப்பட்டனர். தலங்கம நாகஹமுல்ல பிரதேசத்தில் வீடொன்றில் மறைந்திருந்த சந்தர்ப்பத்திலேயே இச்சந்தேக நபர்களை கைது செய்ததாக தலங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கிராம மட்டங்களில்...

களுத்துறையில் 10, இரத்தினபுரி 04, ஹம்பாந்தோட்டையில் 08, அநுராதபுரம், 02, பொலன்னறுவையில் 02, அம்பாறையில் 02, மாத்தளையில் 04, காலியில் 08, மட்டக்களப்பில் 02, யாழ்ப்பாணத்தில் 03, கண்டியில் 04 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மேலும்,குளியாப்பிட்டியவில் 09 கிராமங்களும் மாரவில 09 கிராமங்களும் இதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ளன.

# இன்றைய பலன்கள்

(08.03.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:** பிரதோஷ விரதம், மகா சிவராத்திரி மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. தொழில் வளர்ச்சி திருப்தியாக இருக்கும். கூடுதல் லாபம் கிடைக்கும். பிள்ளைகள் வழியில் நல்ல காரியங்கள் நடைபெறும்.

**ரிஷபம் :** பிரதோஷ விரதம், மகா சிவராத்திரி மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. தொழில் வளம் சிறப்பாக இருக்கும். நன்மை தீமைகளை பற்றி கவலைப்படாமல் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மிதுனம்:** பிரதோஷ விரதம், மகா சிவராத்திரி மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. பணப்புழக்கம் அதிகரிக்கும். பாராட்டும் புகழும் உண்டு. இனத்தார் பகை மாறும். எதிர்காலம் பற்றிய பயம் அகலும்.

**கடகம்:** பிரதோஷ விரதம், மகா சிவராத்திரி மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. தன வரவு திருப்தி தரும். அரசு வழி ஆதரவு கிடைக்கும். வெளிநாட்டு முயற்சி கைகூடும். வாடகை கட்டிடத்தில் நடைபெறும்.

**சிம்மம்:** பிரதோஷ விரதம், மகா சிவராத்திரி மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. தொழில் வளம் சிறப்பாக இருக்கும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்போடு நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும்.

**கன்னி:** பிரதோஷ விரதம், மகா சிவராத்திரி மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. தொழில், உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் கிடைக்கும். விலகிச் சென்ற நண்பர்கள் விரும்பி வந்து இணைவர்.

**துலாம்:** பிரதோஷ விரதம், மகா சிவராத்திரி மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. பிள்ளைகளைப் பற்றிய கவலை அதிகரிக்கும். பிள்ளைகளால் விரையங்கள் ஏற்படலாம். பெரிய மனிதர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**விருச்சிகம்:** பிரதோஷ விரதம், மகா சிவராத்திரி மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. புதிய வாகனம் வாங்கி பயணிக்க வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறும். பாதியில் நின்ற கட்டிட பணி மீதியும் தொடரும்.

**தனுசு:** பிரதோஷ விரதம், மகா சிவராத்திரி மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. வருங்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தர்ம சிந்தனை அதிகரிக்கும்.

**மகரம்:** பிரதோஷ விரதம், மகா சிவராத்திரி மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். வளர்ச்சி கூடும். தேங்கிய காரியங்கள் சிறப்பாக நடைபெறும். திடீர் திருப்பங்கள் பலவும் வந்து கொண்டே இருக்கும்.

**கும்பம்:** பிரதோஷ விரதம், மகா சிவராத்திரி மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. சுகங்களும் சந்தோஷங்களும் வந்து சேரும். பெற்றோர் வழியில் இருந்த பிரச்சனைகள் ஆகலும். உற்றார் உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தை கண்டு ஆச்சரியப்படுவர்.

**மீனம்:** பிரதோஷ விரதம், மகா சிவராத்திரி மாலை நேரத்தில் சிவன் நந்தி வழிபாடு செய்க. எதிர்பாராத நல்ல திருப்பங்களும் வருமான உயர்வும் வந்து சேரும். ஆரோக்கியம் சீராகும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.

## கஜிமாவத்தையில்... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு கஜிமாவத்தை வீட்டுப் பிரச்சினை தொடர்பில் (06) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார். கொழும்பு மாநகரப் பகுதிக்குள் அரசாங்கத்துக்குச் சொந்தமான, பயன்படுத்தப்படாத கட்டடங்கள் மற்றும் காணிகள் தொடர்பில் ஆராய்ந்து, அக்காணிகளை அபிவிருத்தி செய்து வர்த்தக நடவடிக்கைகளுக்கு வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதி, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அரச துறையின் தலையீட்டுடன் தனியார் முதலீடுகளூடாக இவ்வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு நகர எல்லையில் தற்போது அமுல்படுத்தப்பட்டுவரும், அரசாங்க வீடமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி, மேலும் வீடமைப்புத் திட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை விளக்கினார்.

அத்துடன், தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில் இந்தப் பணிகள் சிரமமானதாக இருந்தாலும், பொருத்தமான முறைமையைத் தயாரிக்குமாறும் சுட்டிக்காட்டினார். முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. சத்தியானந்த, கொழும்பு மாவட்ட செயலாளர் கே.ஜி. விஜேசிறி, கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன மற்றும் துறைசார் நிறுவன அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

## மனுக்குலத்தின் பெறுமதி... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிறந்தது முதல் பல்வேறு வகிபாத்திரங்களை ஏற்று இந்த உலகை அழகுறச் செய்ய பெண்கள் எடுக்கும் முயற்சிகளை நாம் மறக்க முடியாது.

குழந்தையாக வீட்டையும், இளம் பெண்ணாக உலகையும், மனைவியாக குடும்பத்தையும் அழகுபடுத்தும் பெண்ணின் தவிர்க்கமுடியாத தைரியம், வலிமைகளால், வீழ்ச்சியடைந்த நம் நாட்டை மீண்டும் மீட்டெடுக்கலாம். நாடு என்ற வகையில் நாம் இன்னும் பெண்களின் தைரியத்தையும், வலிமையையும் புரிந்து கொள்ளவில்லை. இதை வருத்தத்துடன் சொல்ல வேண்டும். பாரம்பரிய கருத்துக்கள் மற்றும் அடிப்படைக் கருத்துக்களின் பேரிலேயே நாம் இன்னும் பெண்களை நோக்குகிறோம். இந்த மனோபாவத்திலிருந்து நாம் விடுபட வேண்டும்.

## இனப் பிரச்சினைக்கு தீர்வு காணாமல்...

சாணக்கியனின் கூற்றுக்கு பதிலளிக்கும் வகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமிப்பது தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்தியுள்ளது. இது தொடர்பில் 56 கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காணாமற் போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு அண்மைக்காலமாக 500க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது தொடர்பில் முழுமையான தீர்வை வழங்க முடியாவிட்டாலும் இதற்கு தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். இதில் உறுதியாக உள்ளோம்.

மேற்படி அலுவலகத்தை உருவாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரசியல் ரீதியில் நீண்ட காலமாக இரண்டாக பிளவுபட்டு செயல்பட்டுள்ளோம்.

இனபிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். அதற்கு அனைவரதும் ஒத்துழைப்பு மிக அவசியம். புலம்பெயர்ந்தோர் அமைப்புகள் தொடர்பில் எமக்கு எந்த எதிர்ப்பும் கிடையாது. எனினும் அவர்களில் ஒரு தரப்பினர் தனியான அரசு தொடர்பிலேயே பேசுகின்றனர்.


தேசிய பிரச்சினைக்கான தீர்வு பற்றி தெரிவிக்கும் போது சமஷ்டி தீர்வை கோருவதற்கான உரிமை தமிழ் தரப்பினருக்கு உள்ளது. அதனை நாம் மறுக்க முடியாது. இது தொடர்பில் நீதிமன்ற தீர்ப்பும் உள்ளது. நாம் அதனை வழங்குகின்றோமோ இல்லையோ அதனை கோருவது அவர்களது உரிமை. இதனை வழங்குவதா? இல்லையா? என்பதை நாட்டு மக்கள் தீர்மானிப்பரென்றும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

# ඇයට ශක්තිය - දැයට ප්‍රගතිය

MARCH 8TH WOMEN'S DAY

**சொந்த குடும்பம் மற்றும் முழுமையாக நாட்டின் முன்னேற்றத்திற்காக பாரிய அர்ப்பணிப்பு மற்றும் பாடுபட்டு செயற்படும் உன்னதமான பெண்கள் சமூகத்திற்கு இன்று மாத்திரமன்றி வருடத்தின் எல்லா நாட்களிலும் கௌரவத்தையும் நன்றியையும் வழங்க வேண்டும். அவ்வாறான பெண்களின் வாழ்வை ஒளியூட்டி அவர்களின் உரிமைகளை உறுதி செய்வதற்கு நாம் எப்போதும் பாடுபடுவோம்.**

## ஜனாதிபதியின் ஆசிச் செய்தி



பாரம்பரிய வகிபாகங்களுக்கு அப்பாற்பட்ட அறிவு, திறன் மற்றும் தொழில் தன்மையுடன் கூடிய இலங்கைப் பெண்கள் இன்று இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு தனித்துவமான பங்களிப்பை வழங்கி வருகின்றனர். இத்தகைய பின்னணியில் குடும்பம் மட்டுமின்றி சமூகத்திலும் பல்வேறு பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கும் பெண்கள் நாட்டின் அபிமானத்திற்குரியவர்கள்.
நிலையான அபிவிருத்திக்கான பயணத்தில் பெண்களின் பங்களிப்பை மேலும் பலப்படுத்த அரசாங்கம் தற்போது விரிவான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதோடு, டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்திற்காக பெண் தொழில்முனைவோரை வலுவூட்டுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.
மேலும், மகளிர் தினத்தை ஒரு தினத்திற்கு மட்டுப்படுத்தாமல், புதிய சட்ட திட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்கிப் பெண்களின் அபிமானம் மற்றும் பாதுகாப்பிற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், பெண்கள் மீதான பாகுபாட்டைத் தவிர்க்க, முதல் முறையாக தேசிய ஆண்/பெண் பாலினக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளமை சிறப்பம்சமாகும்.
தேசிய மகளிர் ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளதோடு, பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவதற்கான இரண்டு புதிய சட்டங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
மேலும், பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளைத் தடுப்பதற்கான ஐந்தாண்டு தேசிய செயல் திட்டம் தற்போது இறுதி செய்யப்பட்டு அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கத் தேவையான சட்டத் திருத்தங்களையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.
எதிர்கால சந்ததியினருக்கு மிகவும் பாதுகாப்பான மற்றும் வளம்மிக்க நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஒட்டுமொத்த பெண்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதோடு, சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

**ரணில் விக்கிரமசிங்க**
**ஜனாதிபதி**
**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**

## கௌரவ மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



சர்வதேசமகளிர் தின கொண்டாட்டங்களை முன்னிட்டு வாழ்த்துச் செய்தியொன்றை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இது போன்றதொரு தினத்தில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பற்றிய இராஜாங்க அமைச்சர் என்றவகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதையிட்டும் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.
சர்வதேச மகளிர் தின வைபவம் அதிமேதகு ஜனாதிபதிரனில் விக்ரமசிங்க அவர்களின் தலைமையில் மார்ச் மாதம் 08 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நடைபெறும். அந்த விசேட நிகழ்வைவெற்றிகரமாக மேற்கொள்வதற்காக மாண்புமிகு பிரதமர் தினேஷ் குணவர்தன அவர்களும் பங்குபற்றுவார் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.
இம்முறை மகளிர் தினத்தின் தொனிப்பொருள் “அவளுடைய பலம் - நாட்டிற்கு முன்னேற்றம்” என்பதாகும்.
இறந்தகாலத்தில் கீழைத்தேய நாடுகளில் பெண்கள் வீடுகளில், வீட்டை அடிப்படையாகக்கொண்ட செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த விடயங்களில் செயற்பட்டு வந்தபோதிலும் நிகழ்காலத்தில் அந்த வரையறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து பெண்கள் முன்வந்து ஆண்களுடன் தோளோடு தோள்கொடுக்கின்ற வகையில் அனைத்து தொழில்களிலும் செயற்பாடுகளிலும் தங்களுடைய உரிமைகளை அடையப் பெற்றுள்ளமையை மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் குறிப்பிட வேண்டும்.
பெண்கள் எழுந்து நிற்பதற்கும் வலுவான பெண்ணொருவரை உருவாக்குவதற்குமாக ‘‘பெண்களை வலுவூட்டும் சட்டம்’’(Women Empowerment Bill) மற்றும் ‘‘ஆண் பெண் பால்நிலை சமத்துவம் மீதான சட்டம்’’(Gender Equality Bill) போன்றவற்றை எதிர்காலத்தில் அங்கீகரிப்பதன் மூலம் பெண்களுக்கு உரித்தான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அடிக்கடி கிடைக்கும் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.
தேசிய அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் 5.33% ஆகும். இது இலங்கையில் பெண்களின் சனத்தொகை 52% உடன் ஒப்பிடும் போது சிறிய எண்ணிக்கையாகும். இந்த சட்டவரைவு மூலம் எமக்கு தேசிய அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக் கொள்ளமுடியும் என்று நம்புகின்றேன்.
உலகச் சாதனை படைத்த பெண்கள் எந்த நாட்டில் இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் பெண்களாகிய எம் அனைவருடைய ஆசீர்வாதமும் கௌரவமும் உரித்தாகட்டும்.

**கீதாசமன்மலி குமாரசிங்க**
**மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள்**
**இராஜாங்க அமைச்சர்**


## செயலாளரின் ஆசிச் செய்தி



2024 சர்வதேச மகளிர் தினத்திற்காக “அவளுக்கு பலம் - நாட்டுக்கு முன்னேற்றம் என்ற தேசிய தொனிப்பொருளில் இலங்கையின் ஒட்டுமொத்த பெண்களுக்கும் பலம் சேர்ப்பதற்கு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு பாரிய பங்களிப்பை செய்து வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.
அதன்படி தேசிய பொருளாதாரத்திற்கு மாத்திரமன்றி உலகளாவிய பொருளாதாரத்தைக் கூட சுபீட்சம் பெறச் செய்வதற்கும் ஆரோக்கியமான சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கும் ஆண் பெண் சமூக சமத்துவம் மற்றும் பெண்கள் வாழ்வின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சிறந்த, நேரடியான பங்களிப்பை பெற்றுத் தருகின்றனர்.
2030ஆம் ஆண்டாகும்போது பேண்தகு அபிவிருத்தி நோக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆண் பெண் சமூக சமத்துவத்துவம் சார்ந்த இலக்குகளை வெற்றிகரமாக எட்டுவதற்கு இம்முறை மகளிர் தினத்தின் தேசிய தொனிப்பொருள் வழி சென்று முன்னெடுக்கப்படும் வேலைகள் பெரும் உந்துதலாக அமையும்.
அரச கொள்கைகளை பலப்படுத்தி சமூகத்தை வலுவூட்டி பெண்கள் உரிமைகள் சார்ந்த சட்டரீதியான கட்டமைப்பை பலப்படுத்துவதற்கும், இருக்கின்ற சிக்கல்கள் மற்றும் சவால்களை மட்டுப்படுத்தி கௌரவமான மற்றும் தனித்துவத்தை பேணி சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கும் எமது அமைச்சு கொண்டு செல்லும் பணிகள் மிகச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன என்பதை தேசத்தின் பெண்களுக்கான இந்த முக்கிய தினத்தில் கௌரவத்துடன் எம்மால் கூறிக்கொள்ள முடியும்.
அரசாங்கம் பெண்களின் முன்னேற்றத்திற்காக செய்கின்ற பணிகள் மார்ச் 08 திகதியன்று மாத்திரமன்றி வருடம் முழுவதும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிய சட்டம், கொள்கை, திட்டமிடல், விசேட நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்ற கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள், மூலோபாயங்கள் மற்றும் புதிய இணக்கப்பாடுகள் அவைகளில் மிக முக்கியமானவையாக அமையும்.
குறிப்பாக ஆண், பெண் சமூக அமைப்பு தொடர்பான சட்டமூலம் ஒன்று தயாரிக்கப்பட்டு அது தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சு தற்போது அடிப்படை பணிகளை ஆரம்பித்திருப்பதோடு, அதன்மூலம் பெண்களுக்கு இருக்கின்ற சவால்கள் மற்றும் பாகுபாடுகளை நீக்குவதற்கு அரச முதலீடுகள் முறையான வகையில் இயங்க ஏற்பாடுகளை மேற்கொள்வது இலக்காகும்.
நாட்டின் முன்னேற்றத்திற்காக பெண்களை சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் வலுவூட்டி அவர்களின் உரிமைகளை பாதுகாக்கின்ற, வன்முறைகள் அற்ற சூழல் ஒன்றை கட்டியெழுப்பும் மகளிர் தினம் ஒன்றுக்கு இலங்கையின் அனைத்து பெண்களுக்காகவும் பிரார்த்திக்கிறேன்.

**யமுனா பெரேரா**
**செயலாளர்**
**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு**

## பிரதமரின் ஆசிச் செய்தி



இலங்கை சமூகத்தில் பெண்களுக்கு பிரதான இடம் ஒன்று உள்ளது. தேசத்தின் கௌரவமான பெண்கள் தேசம், சமயம், அரசியலில் முன்னின்று செயற்படுகிறார்கள். பிரச்சினைக்குரிய நிலையில் கூட உறுதியாக நின்று செயற்படுகின்ற பெண்கள் குடும்பம், சமூகம் மற்றும் நாட்டினது பலமாகும்.
முழு மக்கள் தொகையில் நூற்றுக்கு ஐம்பத்து இரண்டு வீதமாக உள்ள பெண்கள், நாட்டின் அபிவிருத்திக்கு பாரிய அர்ப்பணிப்புடன் செயற்பாடுகிறார்கள். மகள், மனைவி, தாய், சகோதரி மற்றும் குடிமகள், சமூக சேவையாளராகவும் தமது பாத்திரத்தை வெளிப்படுத்தும் அவர் பாடசாலையிலும், வீட்டிலும், வேலை இடத்திலும், வீதியிலும் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தற்போதைய சூழலில் நாம் அதிகம் அவதானம் செலுத்த வேண்டும். சமூகத்தினதும், குடும்பத்தினதும் முன்னேற்றத்திற்காக தமது உயிரையே இரண்டாம் பட்சமாக்கி செயற்படும் பெண்களின் உரிமைகளை பாதுகாப்பது முழு சமூகத்தினதும் பொறுப்பாகும்.
நாட்டின் அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பு ஒன்றை வழங்கியபோதும், தொடர்ந்தும் இந்நாட்டு பெண்களின் பெரும்பாலானவர்கள் வங்கி முறைக்கு இணையாதது கவலைக்குரிய விடயமாகும். இதனால் அரச மற்றும் வர்த்தக வங்கிகள் ஆக்கபூர்வமாக செயற்பாட்டு, பெண்களின் எதிர்கால நலனுக்காக வங்கி முறையுடன் இணைவதற்கு உள்ள தடைகளை நீக்குவது தொடர்பில் அதிகம் அவதானம் செலுத்த வேண்டும்.
பொருளாதார, சமூக, அரசியல் ரீதியாக பலம்மிக்க பெண்களுக்காக தேவையான வலுவூட்டல்களுக்கு சட்டம் மற்றும் கொள்கை வகுக்கும் பணியில் மகளிர் விவகார அமைச்சு ஈடுபட்டு வருகிறது. தற்போதைய சமூக பிரச்சினைகளுக்கு மத்தியிலும் கூட பெண்களின் போசாக்கு, சுகாதாரம் மற்றும் கல்விக்காக அதேபோன்று அவர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக செயற்திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெண்களிடம் உள்ள அறிவு மற்றும் திறமை அதேபோன்று தேவையை நன்றாக புரிந்து புதிய உலகுக்கு பொருந்துகின்ற வலுவான மற்றும் பயன்மிக்க பெண்கள் சந்ததி ஒன்றை உருவாக்குவது எமது ஒரே இலக்காகும். பெண்களுக்கான சர்வதேச தினம் மற்றொரு கொண்டாட்ட நாளாகவன்றி எதிர்காலத்திற்கு முன்னுதாரணமான வகையில் அர்த்தபூர்வமான முறையில் கொண்டாட வேண்டும். அதனை ஒரு நாளைக்கு மட்டுப்படுத்த முடியாது. அவள் பூமியில் உள்ள மற்றொரு விடியலாவாள்.

**தினேஷ் குணவர்தன (பா.உ.),**
**பிரதமர்,**
**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு,**

## பெண்களின் மேம்பாட்டுக்கு அமைச்சின் எதிர்கால நடவடிக்கைகள்

- பெண்களை வலவூட்டும் சட்டமூலம் மற்றும் ஆண் பெண் சமூக சமத்துவம் தொடர்பிலான சட்டமூலத்தை தயாரித்து செயற்படுத்தல்.
- ஆண் பெண் சமூக சமத்துவம் மற்றும் பெண்கள் சமூக வலுப்படுத்துகை தேசிய கொள்கையை செயற்படுத்தல்.
- ஆண் பெண் சமூக அமைப்பின் வன்முறையை தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு திட்டத்தை தயாரித்தல்.
- பெண்களின் அமைதி மற்றும் பாதுகாப்பு தொடர்பில் தேசிய செயற்பாட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- பெண்கள் அரசியல் மற்றும் முடிவு எடுக்கும் செயற்பாட்டுக்கு நேரடியாக பங்களிப்புச் செய்வதற்கு திட்டங்களை செயற்படுத்தல்.
- ஒழுங்குபடுத்தப்படாத நுண் நிதித் திட்டங்களால் பாதிக்கப்பட்டுள்ள கிராமிய பெண்களை அடையாளம் காணல் மற்றும் அவர்களை பொருளாதார ரீதியில் வலுப்படுத்தல்.
- சிறுவர் இல்லங்களில் இருந்து வெளியாகும் 18 வயதைத் தாண்டிய பெண் பிள்ளைகளை சமூகத்துடன் இணைத்தல்.
- விளிம்புநிலை குழுக்களின் பெண்கள் மற்றும் விசேட தேவையுடைய பெண்களுக்காக வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சிகளை செயற்படுத்தல்.
- வன்முறைகளுக்கு முகம்கொடுக்கும் பெண்களின் நலன்புரி மற்றும் உரிமைகளை உறுதி செய்வதற்கு தற்காலிக பராமரிப்பு நிலையங்களை நடத்தல், ஆலோசனை சேவைகளை வழங்கல்.
- ஆண் பெண் சமூக அமைப்பின் வன்முறையை தடுப்பதற்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு பல தரப்பு ஒருங்கிணைந்த பொறிமுறை மூலம் உதவி வழங்கல்.
- சமுரத்தி அபிவிருத்தி திணைக்களம் மூலம் பெண்களுக்காகவே ஒதுக்கப்பட்ட லிய சவி கடன் திட்டத்தின் கீழ் வியாபாரம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அல்லது பெற்றுக்கொண்ட கடனை செலுத்துவதற்கு அதிகபட்சம் 05 இலட்சம் ரூபா வரை கடன் வழங்கல்.

அனுசரணை:

**இன்று சர்வதேச மகளிர் தினமாகும்**
**"அவளுக்கு பலம் - நாட்டுக்கு முன்னேற்றம்"**
**மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு.**
**தொலைபேசி இலக்கம் 0112 186 055**

# பெண்கள் சுய பலத்துடன் எழுந்து நிற்பதற்கு கைகொடுத்தவர்கள் நாங்கள்

மூன்று ஆண்டுகள் எனும் குறுகிய காலத்தில் இலங்கையின் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் சுய பலத்துடன் எழுந்து நிற்பதற்கு கைகொடுக்க எம்மால் முடிந்தது எமக்கு பெரும் கௌரவமாகும்.

2021 இன் கொவிட் பிரச்சினைக்கு முன் நாடே செயலிழந்த சந்தர்ப்பத்தில் ஹேர்ப்லைன் வர்த்தகக் குழுமத்தின் தலைவர் பிரியதர்ஷன பென்தொட்டாரச்சி அவர்களின் புதிய சிந்தனை அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட ஹேர்ப்லைன் தனியார் நிறுவனம் இன்றாகும்போது வர்த்தகக் குழுமம் ஒன்றாக இலங்கை பெண்களுக்கு தோள்கொடுப்பதோடு நாட்டின் பொருளாதாரத்திற்கும் பலம் சேர்ப்பதாக உள்ளது.

நேரடியாகவும் மறைமுகமாகவும் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு எம்மால் முடியுமானதோடு உள்நாட்டு மூலப்பொருட்களை பயன்படுத்தி பெண்களின் உடல் ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும் மூலிகை அழகுக்கலை உற்பத்திகள் பலதை அறிமுகப்படுத்துவதற்கு எம்மால் முடிந்துள்ளது. கொவிட் பிரச்சினைக்கு முன் வீட்டில் பொருளாதார பிரச்சினைக்கு முகம்கொடுத்த பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு ஒன்லைன் முறை மூலம் வருவாய் வழி ஒன்றை உருவாக்கி இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட பெண்களுக்கு பாரிய பலம் தருவதற்கு எம்மால் முடிந்துள்ளது.

தேசிய ஆயுர்வேத அழகுக்கலை உற்பத்திகளுடன் மக்கள் மனதைக் கவர்ந்த ஹேர்ப்லைன் வர்த்தக நாமம் ஒன்லைன் முறையில் அதிகம் விற்பனையாகும் அழகுக்கலை உற்பத்தி என்பதோடு மேலும் தினசரி தேவைகளான உணவுப் பொருட்கள் மற்றும் மேலதிக போஷாக்கு உணவுகள், கெப்சூல் வகை உற்பத்திகளை மேற்கொண்டு ஏற்றுமதி செய்து இலங்கைக்கு அந்நிய செலாவணியையும் கொண்டு வருகிறது.

2021ஆம் ஆண்டு தமது வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த உள்நாட்டு நிறுவனம் தற்போது ஹொரண பிரதேசத்தில் நவீன தொழிற்சாலை மற்றும் பன்னிப்பிட்டியவில் தலைமை அலுவலகத்தையும் செயற்படுத்தி வரும் அதேநேரம் அவ்ஷத லங்கா தனியார் நிறுவனம் மற்றும் மிஸ்டர் ஹோப் போன்ற பழைமையான நிறுவனங்களை தமது வர்த்தக வலையமைப்புக்குள் ஒன்றிணைத்து அந்த உள்நாட்டு வர்த்தகங்களை பாதுகாத்து பாரிய குடும்பம் ஒன்றாகி உள்நாட்டில் தொழில்முயற்சியாளராக நாட்டுக்கு தமது பொறுப்பை செய்து வருகிறது.

ISO சர்வதேச தரச்சான்று மற்றும் GMP தரச்சான்றுகள் தவிர மருந்து உற்பத்தியில் ஆயுர்வேத திணைக்களத்தில் பதிவு செய்துள்ளது.

தரத்தில் உயர்ந்த தரமான உற்பத்திகள் பலதையும் அறிமுகம் செய்திருப்பதோடு இலங்கைப் பெண்களுக்கு தொழில்முயற்சியாளராக எழுந்து நிற்பதற்கு இலங்கை மகளிர் பணியகத்துடன் இணைந்து அத்வெல என்ற பெயரில் வெற்றிகரமான திட்டம் ஒன்றை நாடு முழுவதும் செயற்படுத்தி வருகிறது.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் கீழ் உள்ள இலங்கை மகளிர் பணியகத்துடன் இணைந்த மகளிர் செயற்குழுக்களின் உறுப்பினர்களுக்கு அடிப்படை மூலதனம் ஒன்று இல்லாது வர்த்தகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அதிக இலாப வீதத்துடன் வெற்றிகரமான வர்த்தகம் ஒன்றை நடத்திச் செல்வதற்குத் தேவையான அறிவு மற்றும் பயிற்சிக்கு வழிகாட்டல் மற்றும் பலம் சேர்த்து அவர்களின் உழைப்பை நாட்டின் அபிவிருத்திக்கு நேரடியாக பெற்று அவர்களது குடும்பங்களின் முன்னேற்றத்திற்கு வழியமைத்து வருகிறது.



வர்த்தகக் குழுமத்தின் தலைவர/ தலைமை நிர்வாகி பிரியதர்ஷன பென்தொட்டாரச்சி

ஹேர்ப்லைன் வர்த்தகக் குழுமத்தின் தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் பிரியதர்ஷன பென்தொட்ட ஆரச்சி கரன்னெத்தியின் புதிய சிந்தனைக்கு அமைய இலங்கை மகளிர் பணியக பணிப்பாளர் சம்பா உபசேன வின் வழிகாட்டலில் 2023ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஹேர்ப்லைன் அத்வெல திட்டத்தின் செயற்பாட்டு பணிப்பாளராக சமன் விஜேமான்ன செயற்படுவதோடு மாவட்ட மட்டத்தில் மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் திறமையான முகாமையாளர்களை கட்டியெழுப்பி வருகிறது.

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலக அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்ட அல்வெல திட்டம் தற்போது கம்பஹா, குருணாகல், கண்டி, கேகாலை, இரத்தினபுரி, திருகோணமலை, களுத்துறை, மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் வெற்றிகரமாக செயற்படுவதோடு 2024ஆம் ஆண்டு நிறைவடையும்போது நாடு முழுவதும் அனைத்து கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கி 15000 பெண்களுக்கு வலுச்சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்காக இலங்கை மகளிர் பணியகத்தின் மகளிர் மேம்பாட்டு அதிகாரிகளின் பங்களிப்பு மிகவும் உயர்வான மட்டத்தில் பாராட்ட வேண்டும் என்பதோடு பெண்கள் செயலணிகளின் அதிகாரிகளும் தமது சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தலைமை வழங்கி பெரும் பங்களிப்பை செய்து வருகின்றனர்.



திட்டத்தின் செயற்பாட்டு பணிப்பாளர் சமன் விஜேமான்ன

அத்வெல திட்டத்துடனான பெண்களுக்கு பத்து இலட்சம் ரூபா ஆயுள் காப்புறுதி ஒன்று இலவசமாக கிடைப்பதோடு வருடாந்தம் ஒரு இலட்சம் ரூபாவின் சுகாதார காப்புறுதி ஒன்றும் கிடைக்கும்.

அது தவிர மேலும் பல நன்மைகளும் இந்த ஊக்கமுடைய பெண்களுக்கு கிடைப்பதோடு அது அவர்களின் செயல்திறனை அதிகரிப்பதற்கு தூண்டுவதாக அமையும்.

“அவளுக்கு பலம் - நாட்டுக்கு முன்னேற்றம்” என்ற தொனிப்பொருளை உண்மையாக்குவதற்கு எமது தேசத்திற்கு பங்களிப்புச் செய்ய முடியுமாவது தொடர்பில் மனப்பூர்வமாக மகிழ்ச்சி அடைவதோடு அதற்கு வாய்ப்பு வழங்கிய இலங்கை மகளிர் பணியகத்திற்கு இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

எதிர்காலத்திலும் இலங்கை பெண்களின் மேம்பாட்டுக்காக செயற்படுவதற்கு எதிர்பார்ப்பதோடு அதற்காக எம்முடன் கைகோர்க்கும்படி கௌரவத்துடன் கோரிக்கை விடுக்கிறோம்.

அத்வெல தொடர்பில் மேலதிக விபரங்களை தெரிந்து கொள்வதற்கு
0707999150
சமன் விஜேமான்ன
செயற்பாட்டு பணிப்பாளர்
www.thwela.lk
herblinegroup@gmail.com
தலைமை அலுவலகம் - 113/5f, பொரல்ல வீதி, பன்னிபிட்டிய.



# பெண்கள் தங்கி வாழும் நிலைமையை இல்லாமற் செய்வதே எமது அமைப்பின் பிரதான நோக்கம்

## பெண்கள் வலுவூட்டும் அமைப்பின் தலைவி முஹம்மத் ராசிக் பாத்திமா ரியாஸா



**பெண்கள் வலுவூட்டும் அமைப்பின் தலைவியான முஹம்மத் ராசிக் பாத்திமா ரியாஸா, சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இவ்வமைப்பின் மூலம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் மனிதாபிமான செயற்பாடுகள் தொடர்பாக தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல்.**

**உங்கள் பெண்கள் வலுவூட்டும் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் என்ன?**

எமது பெண்கள் வலுவூட்டும் அமைப்பானது 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பெண்கள் தங்கி வாழும் நிலைமையை இல்லாமல் செய்யும் நோக்குடன் இது ஆரம்பிக்கபட்டதாகும். அவர்கள் சமூகத்திற்கு மத்தியில் தலைநிமிர்ந்து வாழ்வதற்கான வலுவூட்டல் செயற்பாடுகளை இவ்வமைப்பு மேற்கொண்டு வருகின்றது. பெண்கள் நெருக்கடியான சூழலிலும் அவற்றை எதிர் கொண்டு சிறந்த முறையில் வாழ்வதற்கான வழிகளை உருவாக்கிக் கொடுப்பது எங்களது பணியாகும்.

**அப்படியாயின் எவ்வகையான பணிகளை நீங்கள் மேற்கொள்கின்றீர்கள்?**

ஒரு குடும்பத்தில் பெண் தலைமைத்துவங்கள் எவ்வாறு உருவாக்கிக் கொள்ளுதல் என்பது பற்றிய விழிப்புணர்வூட்டுதல்களை பரந்த மட்டத்தில் செய்து வருகின்றோம். அதாவது இளம் வயதில் தன் கணவன்



மரணம் எய்தினால் அந்தப் பெண் தன் வாழ்க்கையில் எப்படியான சவால்களை எதிர்கொள்கிறார் என்பதை கண்டறிந்து அப்பெண் வீழ்ந்து விடாமல் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளையே நாங்கள் பிரதான நோக்காகக் கொண்டு பல செயற்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

அந்தக் குடும்பத்தை அவதானிக்காமல் விட்டால், வீழ்ந்து விடும் சூழ்நிலையே அதிகம் காணப்படுகின்றன. அவ்வாறு வீழ்ந்த குடும்பத்தை அதில் இருந்து மீண்டெழச் செய்து தங்களுடைய பிள்ளைகளை எவ்வாறு நல்ல நிலைக்கு கொண்டு வரச் செய்தல் போன்ற விடயங்களில் அவதானம் செலுத்தி செயற்பட்டு வருகின்றோம். அதேநேரம், அறிவு மேலோங்கிய கால கட்டத்தில் விதவைத் தாய்மார்கள் தங்களுடைய பிள்ளைகளையும் படுபாதாள உலகிற்கு தள்ளி விட்டு தாங்களும் ஒரு இக்கெட்டான சூழலில் வாழும் சில பெண்களும் இருந்து கொண்டிருக்கின்றார்கள். இத்



தகைய பெண்கள் விடயத்தில் அதிக கவனம் செலுத்தி அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றி வைக்கின்ற வகையில் நாங்கள் செயற்பட்டு வருகின்றோம்.

அவர்கள் ஒரு உறுதியானவர்களாக மாறி தங்களுடைய பிள்ளைகளை ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வருகின்றார்களா அல்லது அவர்கள் வீழ்ச்சி நிலைக்குத் தள்ளப்பட்டு தாங்களும் தங்களுடைய, பிள்ளைகளுடைய வாழ்க்கை நிலை குலைந்து சீரழிந்து போகின்ற பெண்களையும் நாம் காணுகின்றோம். அந்த நிலையில்லாமல் ஒரு சக்திமிக்க உறுதியானவர்களாக மாறி அதில் இருந்து அவர்கள் எப்படி வெளியே வருகிறார்கள் என்ற தெளிவூட்டல்களை அதி தீவிரமான எங்களுடைய மனிதாபிமானப் பணிகள் ஊடாக நிறைவேற்றி வருகின்றோம்.



இந்தப் பெண்கள் மத்தியில் ஒன்று பாதுகாப்பு மற்றையது பொருளாதார விடயம் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்த இரு விடயத்திலும் அவர்களை வெற்றி கொள்ளச் செய்வதற்கான வேலைத் திட்டங்களை நாங்கள் ஆரம்ப கால கட்டத்தில் இருந்து மேற்கொண்டு வருகின்றோம்.

**பெண்களுக்கான மனிதாபிமான உதவிகளை எந்தத் தரத்தில் மேற்கொண்டு வருகின்றீர்கள்?**

ஐந்து வகையிலான தரங்களைப் பிரித்து நாம் செயற்பட்டு வருகின்றோம். ஆரம்பத்தில் விதவைத் தாய்மார்களைக் கவனத்தில் எடுத்தோம். இரண்டாவது விவாகரத்துப் பெற்றவர்களை கவனத்தில் எடுத்தோம். மூன்றாவது கணவன் மரணிக்கவும் இல்லை கணவன் விவாகரத்துப் பெறவும் இல்லை. இந்த இரண்டும் இல்லாமல் கவனிப்பாரற்ற நிலையில் வாழும் பெண்களையும் கவனத்தில் எடுத்து செயற்பட்டு வருகின்றோம். நான்காவது திருமணம் ஆகாமல் வயது சென்ற குழுவினர் இருக்கின்றார்கள். வயது வந்தவர் எனும் போது ஒரு குடும்பத்தில் தந்தை உயிரிழந்து விட்டால் அந்தக் குடும்பத்தில் நான்கு பிள்ளைகள் இருப்பின் அதில் மூன்றாவது பெண் பிள்ளை தம் குடும்பத்தை கரை சேர்ப்பதற்காக வெளிநாடு செல்கின்றாள்.

தன்னுடைய சகோதரிகளுடைய திருமண நல்வாழ்வுக்காக வெளியே செல்லுகின்றாள். இளமையான



காலம் முதல் தனது சக்தி இருக்கும் காலம் வரையிலும் தனது சம்பளப் பணத்தை வீட்டுக்கு அனுப்பி முழு உழைப்பையும் தன் குடும்பத்திற்காக தியாகம் செய்கின்றாள். குடும்ப பிரச்சினைகளை நிறைவேற்றி விட்டு நாடு திரும்பும் போது அவர்கள் நோயாளிகளாக வந்து சேர்கின்றார்கள். மேலதிகமான ஊதியங்கள் சேமிப்பு என்பது அவர்களுக்கு எவையும் இல்லை.

தன் சகோதரர்கள் எல்லோரும் குடும்பமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற தருணத்தில் இப்பெண் தனிமைப் படுத்தப்படுகின்றாள். இவர்களைக் கேட்கப் பார்க்க ஆட்களில்லை. இவர்கள் நோயாளியாகி விடுகின்றாள். அப்படியான பெண்கள் நிறையப் பேர்களை நாங்கள் அடையாளப்படுத்தியிருக்கின்றோம்.

தற்போது புதிதாக வந்துள்ள பிரச்சினை என்னவென்றால் நன்றாய் வாட்ட சாட்டமான கணவன்மார்கள் இருக்கின்றார்கள். ஆனால் அவர் போதைவஸ்துக்கு அடிமையானவர்களாக இருக்கின்றார்கள். இந்த இளம் கணவன்மார்கள் குடும்பப் பொறுப்பற்று போதைக்கு அடிமையாகி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பிரச்சினை சமூகத்தில் புதிதாகத்தான் எழுந்துள்ளது. ஐந்து வகையிலான பிரிவுகளில் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களைக் கேட்கப் பார்க்க ஆட்களில்லை.



**அப்படியாயின் நீங்கள் கூறுகின்ற ஆலோசனைகள் யாவை?**

இதன் காரணமாக இளம் வயதான நிறையப் பெண்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளார்கள். வெளியே கொண்டு வர முடியாத பாலியல் வன்முறைப் பிரச்சினைகள் உள்ளன. இவர்களுக்கு மத்தியில் முதலாவது வறுமை மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. இவர்கள் தொடர்பில் நாங்கள் கூடுதல் கவனம் செலுத்தி உள ரீதியாக வலுப்படுத்தப்பட வேண்டிய தேவை சமூகத்திற்கு இருக்கிறது. இவர்களுக்கு மார்க்கத்தைத் தெளிவூட்டி அவர்களை மீட்டெடுக்கின்ற முயற்சிகளில் நாங்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறு மறைமுகமாக பாதிக்கப்பட்ட பெண்களை நாங்கள் உள்வாங்கி மீளவும் சிறந்ததொரு வாழ்க்கை நிலைக்கு இட்டுச் செல்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

அநேகமான விதவைத் தாய்மார்கள் இருக்கின்றார்கள். அவர்கள் மறுமணம் முடிப்பதற்கு தயாராக



இருக்கின்றார்கள். ஆனால் அதை முன் வந்து செய்து வைப்பதற்கு ஆட்களில்லை. இது சமூகத்தைப் பொறுத்தவரையில் வெட்கப்பட வேண்டிய விடயம். இது குறித்து பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

கணவன் இறந்தவுடன் அவர்களுடைய வாழ்க்கை முடிந்து விட்டது என்ற நிலைதான் உள்ளன. இந்த மனோ நிலையால் பெண்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள். உடல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதில் தெளிவான நல்ல மார்க்க அறிவைக் கொண்ட பெண்கள் தங்களையும் உயர்த்திக் கொண்டு தங்களுடைய பிள்ளைகளையும் உயர்த்திக் கொண்டு வெற்றியடைந்து விடுகின்றார்கள்.

நல்ல மார்க்க அறிவுள்ள பெண்கள் படிப்படியாக தங்களுடைய இலக்கை அடைந்து வருகிறார்கள். எல்லாச் சவால்களை எதிர்கொண்டு முன்னேறி விடுகின்றார்கள். இன்னுமொரு கூட்டத்தினர் என்றைக்கும் இரந்துண்டு வாழும் நிலையிலேயே வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். இவர்கள் மற்றவர்கள் தருவார்கள் என்று நம்பிக் கொண்டு முன்னேறுவதற்கு வாய்ப்பே இல்லாமல் இருக்கின்றார்கள். அவர்கள் மாற்றம் ஒன்று காண்பதற்கு ஆயத்தம் இல்லை. அவர்கள் பத்து வருடத்தில் எவ்வாறு இருந்தார்களோ அவ்வாறே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இன்னும் ஒரு சிலர் இருந்ததை விட பின்நோக்கிச் சென்று விட்டார்கள். ஒழுங்கான பிள்ளை வளர்ப்புக்கள் இல்லை. பிள்ளைகள் தவறான வழிகளில் ஈடுபடுதல். இவை பொருளாதார ரீதியில் மட்டும் நடப்பது அல்ல. அவர்கள் பிள்ளைகளைச் சரியான முறையில் வழிநடத்தாமல் அப்படியே கவனயீனமாக விட்டு விடுகின்றனர்.

இத்தகைய பிள்ளைகளை வழி நடத்துவதற்காக புத்தளத்தில் உள்ள மேர்சி நிறுவனத்தின் ஆதரவுடன் பாடசாலைப் பிள்ளைகளுக்கு நல்ல வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் வழங்கி எங்கெங்கு பிள்ளைகள் சேர்ந்து படிக்க வாய்ப்புக்கள் உள்ளதோ அந்த இடங்களை இனங்கண்டு அதில் அவர்களை இணைத்துக் கொள்வதற்கான வழிகளை காட்டி வருகின்றோம்.

நாங்கள் எந்த விதமான நிதி உதவிகளை பெற்றுக் கொள்வதில்லை. நேரடியாக உரிய நபர்களைத் தொடர்புபடுத்தி வருகின்றோம். அந்தப் பிள்ளை பாடசாலை விட்டு வெளியேறும் வரையிலும் அந்தப் பிள்ளைகளின் தகவல்கள் எங்களிடம் இருக்கும். யாராவது சிறார்களுக்கு உதவி செய்யவுள்ளோம் என்று நன்கொடையாளர்கள் முன்வந்தால் அதற்குரிய தகவல்களை நாங்கள் அவர்களுக்கு வழங்கி அந்த உதவியைப் பெற்றுக் கொடுத்து வருகின்றோம்.

சுயதொழிலுக்கான வாய்ப்புக்களை நிறைய ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். தையல் மெசின் இயந்திரம் வாங்கிக் கொடுத்து குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்தி வருகின்றோம். அதேபோன்று சுயதொழில்



கைத்தொழில் முயற்சிகளுக்கான வலுவூட்டல் பயிற்சி முகாம்களை நடத்தி அதற்குத் தேவையான வழிகாட்டல்களையும் சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி வருகின்றோம். இனிப்புப் பலகாரம் செய்தல், ஊட்டச் சத்துக் கஞ்சி காய்த்து விற்பனை செய்தல் போன்ற செயலமர்வுகளை நடத்தி வருகின்றோம்.

இந்த பயிற்சி முகாம்களில் கலந்து கொள்கின்ற பெண்கள் பெரியளவில் கல்வி கற்றவர்கள் அல்லர். ஆனால் அவர்களிடம் நிறைய திறமைகள் இருக்கின்றன. அவர்களிடம் உள்ள திறமையை இனங்கண்டு நாங்கள் சமூகத்திற்கு அடையாளப்படுத்தி வருகின்றோம். ஒரு பெண்மணி நல்ல முறையில் கேக் வகைகள் செய்து வருகின்றார். அவரிடமிருந்து நல்ல கேக் வகைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிமுகம் செய்து வருகின்றோம். இதன் அடிப்படையில் நிறையப் பெண்மணிகள் பொருளாதார ரீதியாக தங்கள் குடும்பத்தை மேம்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றார்கள். ஒரு சிலர் வாய்ப்பை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாமல் கைநழுவ விட்டவர்களும் இருக்கின்றார்கள். அத்தகைய சிறப்பு வாய்ந்தவர்களை பெயர் பட்டியலுடன் அவர்களை நாங்கள் அறிமுகம் செய்யலாம். இதில் நூற்றுக்கு 10 விகிதமானவர்கள் உரிய இலக்கை அடைந்து கொண்டு இருக்கின்றார்கள். ஏனையவர்கள் பொருள் முதலீட்டுக்காக மூலதனம் சும்மா கிடைப்பதால் அவற்றை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாமல் விட்டுவிடுவது என்பது அது அவர்களுடைய இயலாத் தன்மையை எடுத்துக் காட்டுகிறது. அதிலும் எல்லாம் சும்மா கிடைப்பதால் அதன் அருமை அவர்களுக்குத் தெரிவதில்லை.



**இந்த உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதில் உங்களுடைய வகிபாகம் என்ன?**

ஒரு தையல் மெசின் இயந்திரம் பெற்றுக் கொடுப்பதற்காக நாங்கள் பல பேர்களிடம் கதைப்போம். அப்படி கதைப்பதன் மூலம்தான் நன்கொடையாளிகள் உதவி செய்கிறார்கள். நாலு பேருக்கு பிரச்சினையை வெளியே சொல்லும் போதுதான் பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும். அந்த வகையில் 500 க்கும் மேற்பட்ட தையல் மெசின் இயந்திரங்கள் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக எடுத்துக் கொடுத்துள்ளோம். இந்த தையல் மெசின் இயந்திரத்தைப் பெற்றுக் கொண்டு இளம் பெண்கள் அதிகளவு முயற்சிகளை மேற் கொண்டு முன்னுக்கு வந்துள்ளார்கள்.

எனினும் எல்லோரும் தையல் மெசின் இயந்திரத்தை மட்டும் நாடி நிற்பதைத் தவிர்த்து சிறிய முதலீட்டுடன் பெரிய இலாபத்தை அடைந்து கொள்வதற்கான புதிய வகையிலான சுய கைத்தொழில் பேட்டையை ஆரம்பித்தல் போன்ற நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். 'மிக்சர்' தயாரித்தல், இனிப்புப் பண்டம் தயாரித்தல் போன்ற சுய கைத்தொழில் முயற்சியாளர்களை உருவாக்கி வருகின்றோம். குறிப்பாக பலாக்காவில் மிக்சர் செய்கின்றார்கள். பலகாரம் செய்து மிகவும் பிரபல்யமாகி தற்போது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தும் வருகிறார்கள்.

ஒரு பெண்மணி வயது சென்றுதான் திருமணம் செய்தார். கணவர் இறந்து விட்டார். அவருக்கு குளிர் சாதனப்பெட்டி (Fridge) ஒன்று வாங்கிக் கொடுத்துள்ளோம். இறைச்சியை வாங்கி வைத்து விற்பனை செய்து வருகின்றார். அவருக்கு அதன் மூலம் நல்ல வியாபாரம் நடைபெறுகின்றன.

**உங்களுடைய புதிய முயற்சிகள் என்ன?**

அருகிப் போகின்ற பாரம்பரிய பலகார உணவுகளை புதுப்பிப்பதற்காக நாங்கள் ஊக்குவித்து வருகின்றோம். ஏனென்றால் முன்னர் காலங்களில் மூத்த உம்மம்மா போன்றவர்களுக்குத் தான் பலகாரம் செய்யத் தெரியும். இப்போதுள்ள இளம் பிள்ளைகளுக்கு அவைகள் செய்யத் தெரியாது. எனவே நாங்கள் அந்த உணவு வகைகள் மிகவும் சுவையானதாக இருக்கின்றது. தேவையான உதவிகளை நாங்கள் செய்கின்றோம். தொடர்ந்து செய்யுங்கள் என்று அவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்குவித்து வருகின்றோம். 20 ஆயிரம் கிலோ பொருட்கள் கையில் இருந்து கொண்டு இருக்கின்றது. 20 கிலோ பொருட்கள் கட்டாருக்கு கப்பல் மூலமாக சென்று கொண்டிருக்கிறது. இவை விதவைத் தாய்மார்கள் தயாரிக்கின்ற உணவுப் பண்டங்கள் ஆகும். நாங்கள் கொள்வனவு செய்யும் போது 10 கிலோ பொருட்களைக் கொண்டு வர வேண்டாம். 20 கிலோ கிராம் எடுத்து வாருங்கள். அதற்கான முற்பணம் 20,000 ரூபாவை வழங்கி ஊக்குவித்து வருகின்றோம். இவ்வாறு பெண்கள் மத்தியில் கைத்தொழில் துறையை நாங்கள் ஊக்குவித்து வருகின்றோம்.

இன்னும் கொஞ்சப் பேர்களுக்கு திருமணம் செய்து வைத்துள்ளோம். அதற்காக சிறிய தொகை அன்பளிப்பு செய்து வருகின்றோம். நல்ல தொடர்புகள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் விதவை தாய்மார்களை இணைத்து வைக்கின்ற பணிகளிலும் பள்ளிவாசல்கள் மூலமாக ஏற்படுத்திக் கொடுக்கின்றோம். இத்தகைய உதவிகளை நாங்கள் தனியாகச் செய்யவில்லை. இலங்கை பைத்துல் மால் நிதியம், இஸ்லாமிய நிறுவனங்களின் உதவியோடு செய்து கொண்டு செல்லுகின்றோம்.

இத்தகைய மனிதாபிமான உதவிகளை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பதை நாங்கள் அறிந்து வைத்துள்ளோம். ஆனால் முன்னேறத் துடிக்கின்ற பெண்களுக்கு எவ்வாறு இந்த உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது தெரியாது. அந்த உதவிகளை நாங்கள் நன்கொடையாளிகளுக்கும் பயனாளிகளுக்கும் இடையே நடுவில் இருந்து செய்து கொடுத்து வருகின்றோம். அவர்களுடைய ஆவணங்களைத் தயாரித்து அனுப்பி வைப்போம். இதில் பயனாளிகள் நேரடியாக அடைந்து கொள்வார்கள்.

கல்வி பயிலும் வறிய பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுத்து வருகின்றோம். கற்றல் உபகரணங்களும் வழங்கி வருகின்றோம். 2500 க்கும் மேற்பட்ட தண்ணீர் தாங்கிகளை வழங்கியிருக்கின்றோம். நாடளாவிய ரீதியில் சுத்தமான குடிநீர் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றோம். பொதுக் குழாய் நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றோம். ஒரே நேரத்தில் 250 குடும்பங்களுக்கு தண்ணீர் வழங்கியுள்ளோம். இது ஒவ்வொரு கிராமம் கிராமங்களாக செய்து வருகின்றோம்.

வடக்கு, கிழக்கு, வட மத்திய மாகாணம் உள்ளிட்ட பல இடங்களில் இந்த தண்ணீர் வசதியை ஏற்படுத்திக்



கொடுத்து வருகின்றோம்.

இப்படியான உதவிகளுக்கு எனது கணவர் பெரியளவில் உதவி செய்து வருகின்றார். இந்த மாதிரியான உதவிகள் செய்வதன் மூலம் அல்லாஹ்வின் நேரடியான உதவிகள் கிடைக்கின்றன. இதனை நாங்கள் அனுபவித்திருக்கின்றோம். நிறைய மனத்திருப்தி இருக்கின்றது. நிறைய வீடுகள் திருத்தப் பணிகளை மேற்கொண்டுள்ளோம். அவை தவிர மிகப் பெறுமதியான வீடொன்றை நிர்மாணித்துக் கொடுத்துள்ளோம். விதவைத் தாய்மார்கள் படிக்க விருப்பமானர்களுக்கு அவர்களுக்கு தேவையான வழிகளை ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றோம். எதிர்காலத்திலும் நிறைய மனிதாபிமான உதவிகளை இந்தப் பெண்களுக்குச் செய்து கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

**உங்களுடைய எதிர்கால இலக்குகள் என்ன?**

எதிகாலத்தில் கண்டி கட்டுகஸ்தோட்டையில் மிகப் பெரிய கைத்தொழில் பேட்டை நிலையம் ஒன்றை உருவாக்க வேண்டும். எங்களுடைய பிரதான இலக்கு அதுதான். ஒரே இடத்தில் சின்னச் சின்னப் பாரம்பரிய கைத்தொழில் பேட்டையை உருவாக்க வேண்டும் என்ற பேரவா இருக்கிறது. முருங்கை இலையில் மா செய்கின்றார்கள். சீனிப்புட்டு செய்கிறார்கள். முருக்கு



வகைகள் செய்கிறார்கள். இதற்கெல்லாம் டிப்ளோமா பட்டம் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இருக்கின்ற அறிவு போதுமானது.

முதிய தாய்மார்களையும் கவனத்திற் கொண்டு அவர்களுடைய தேவைப்பாடுகளையும் நிறைவு செய்து வருகின்றோம். முதியோர்களை பிள்ளைகள் தள்ளிவிடும் நிலைமை காணப்படுகின்றது.

கணவனை இழந்த விதவைத் தாய்மார்கள் என்போர் மிகவும் வலிமை மிக்கவர்கள். சமூகத்திலுள்ள பல்வேறு சவால்களைத் தாங்கிக் கொண்டு பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக தியாகம் செய்து கொண்டு விருப்பத்திற்குரிய உடை அணிய முடியாமல், ஒரு நல்ல பயணம் போக முடியாமல் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தாய்மார்களை நாங்கள் எப்பொழுதும் மதிக்க வேண்டும். கௌரவப்படுத்த வேண்டும். அநாதைப் பிள்ளையின் தலையை தடவுவது என்பது மிகவும் புண்ணிய காரியமாகும் என்று நபி நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அவர்களுடைய பெறுமதி இன்றியமையாததொன்று ஆகும். விதவைத் தாய்மார்கள்தான் கண்ணியமானவர்கள். அதேவேளையில் இந்தச் சந்தர்ப்பத்தில் எங்களுடைய இந்தப் பயணத்திற்கு ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கி வருபவர் கொழும்பிலுள்ள அஸாப் கான். அவர்களுக்கும் எனது கணவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் .

**இ. அம்மார்**

# வல்வை முதியோர் இல்ல செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு வடக்கு ஆளுநர் பணிப்புரை

(யாழ்.விசேட நிருபர்)



யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் எவ்வித அனுமதியுமின்றி செயற்படும் முதியோர் இல்லத்தின் நடவடிக்கைகளுக்கு தடைவிதிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய ஆளுநரின் செயலாளரால் பருத்தித்துறை பிரதேச செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வல்வை முதியோர் இல்லம் எவ்வித வசதிகளுமின்றி இதுவரை பதிவு செய்யப்படாமல் இயங்கியமை தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வல்வை முதியோர் இல்லம் தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் 'அபயம்' 24 மணித்தியால குறைகேள் வலையமைப்பிற்கு கிடைத்த முறைப்பாடுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பில் பருத்தித்துறை பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட கள விஜய அறிக்கை ஆளுநரிடம் சமர்பிக்கப்பட்டது.

விடயங்களை ஆராய்ந்த வடக்கு மாகாண ஆளுநர் முதியோர் இல்லம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

வல்வையிலுள்ள முதியோர் இல்லமொன்றில் தங்கியுள்ள முதியவர்களுக்கு பழுதடைந்த உணவுகளை வழங்குவது, பழுதடைந்த பழங்களை வழங்குவது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் காணொளியொன்று பதிவிடப்பட்டு, அது தொடர்பில் கடும் விசனம் எழுந்திருந்தது.

# யாழ்.பல்கலைக்கு விஜயம் செய்த துணைத்தூதுவர்



(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்திற்கான புதிய இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி, யாழ். பல்கலைக்கழகத்துக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை விஜயம் செய்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜாவை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

பல்கலைக்கழகத்தின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த முன்மொழிவுகள் உட்பட கல்வித்துறையில் கூட்டுத் திட்டங்கள் மற்றும் ஒத்துழைப்பு குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன. இச்சந்திப்பில் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம், இந்து கற்கைகள் பீட பீடாதிபதி ச.பத்மநாதன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

## வடக்கின் உதயம்

# வேகக்கட்டுப்பாட்டை இழந்து லொறி கட்டடத்துடன் மோதி விபத்து

சாரதி படுகாயம்

(பருத்தித்துறை விசேட, யாழ். விசேட நிருபர்கள்)



யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக வேகக் கட்டுப்பாட்டை இழந்த லொறி கடை கட்டடத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த லொறி நேற்றைய தினம் வியாழக்கிழமை நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக உள்ள வளைவில் திரும்பும் போது அங்கிருந்த கடை கட்டடத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் லொறியின் முன்பக்கம் கடுமையாக சேதமடைந்ததுடன் கடையும் சேதமடைந்துள்ளது. இதேவேளை அருகிலிருந்த முச்சக்கரவண்டியொன்றும் சேதத்திற்குள்ளானது.

கோவில் நிகழ்ச்சிகளை வழங்கும் தொலைக்காட்சி நிறுவனமொன்றின் அலுவலகமே இவ்வாறு சேதமடைந்துள்ளதாக தெரியவருகின்றது. சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்.மத்திய கல்லூரி – பரியோவான் கல்லூரிகளுக்கு இடையேயான மாபெரும் கிரிக்கெட் சமர்

(பருத்திதுறை விசேட, யாழ் விசேட நிருபர்கள்)



வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான மாபெரும் கிரிக்கெட் போட்டி நேற்றைய தினம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

117வது முறையாக நடைபெறும் இப்போட்டி, நாளை சனிக்கிழமை வரை மூன்று தினங்கள் நடைபெறும். கிரிக்கெட் போட்டியில் நேற்று (07) முதல் நாள் ஆட்டநேர முடிவின்போது யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி அணி வலுவான நிலையை பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 157 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்திய பரியோவான் கல்லூரி முதல் நாள் ஆட்டநேர முடிவின்போது இரண்டு விக்கெட் இழப்புக்கு 109 ஓட்டங்களை பெற்று வலுவான நிலையில் உள்ளது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர் உதயனன் அபிஜோய்ஷான்த் அதிரடியாக 39 பந்துகளில் 40 ஓட்டங்களை பெற்றதோடு அன்டர்சன் சச்சின் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளார். இதன்படி பரியோவான் கல்லூரி அணி இன்னும் 8 விக்கெட்டுகள் கைவசம் இருக்க யாழ். மத்திய கல்லூரியை விடவும் 48 ஓட்டங்களால் மாத்திரமே பின்தங்கியுள்ளது. முன்னதாக யாழ். மத்திய கல்லூரி சார்பாக முதல் இன்னிங்ஸில் மத்திய பின் வரிசையில் வந்த ஷகாதேவன் சயன்தன் 55 ஓட்டங்களை பெற்றார். இதன்போது பரியோவான் கல்லூரி சார்பில் அருள்சீலன் கவீஷன் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு குகதாஸ் மதுலன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

# திருக்கேதீஸ்வரத்துக்கு சிறப்பு பஸ் சேவை

(கரவெட்டி தினகரன் நிருபர்)

மகா சிவராத்திரி தினமான இன்று 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறையிலிருந்து திருக்கேதீச்சரத்துக்கு சிறப்பு பஸ் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

பழம்பெரும் பெருமை வாய்ந்த திருக்கேதீச்சரம் ஆலயத்தில் நடைபெறும் மகா சிவராத்திரி தின வழிபாடுகளில் வடமராட்சி மக்கள் பங்குபற்ற வசதியாகவே பருத்தித்துறை இலங்கை போக்குவரத்து சபையால் சிறப்பு பஸ்சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து அதிகாலை 5.00 மணி, காலை 9.00 மணி, நண்பகல் 12.00 மணி, பிற்பகல் 3.00 மணி மாலை 6.00 மணிக்கும் பஸ்சேவைகள் நடைபெறுமென பருத்தித்துறை டிப்போ தெரிவித்துள்ளது.

# வினாடி வினா போட்டியில் வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவிகள் முதலிடம்

(மாங்குளம் குரூப் நிருபர்)



மகளிர் தினத்தை முன்னிட்டு கொமர்ஷல் வங்கியின் முள்ளியவளை கிளையினால் நடாத்தப்பட்ட வினாடிவினா (quiz) போட்டியில் வற்றாப்பளை மகா வித்தியாலய பாடசாலை மாணவிகள் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

கொமர்ஷல் வங்கியின் முள்ளியவளை கிளையினர் முல்லைத்தீவு கல்வி வலயத்துடன் இணைந்து முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவிகளுக்கிடையில் மகளிரை கௌரவப்படுத்தும் முகமாக வினாடி விடை (quiz) போட்டியொன்றை (06) முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடாத்தியிருந்தனர்.

இதனடிப்படையில் நேற்றுமுன்தினம் மாலை முல்லைத்தீவு மகா வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட 21 பாடசாலைகளைச் சேர்ந்த பெண் பிள்ளைகளுக்கிடையில் வினாடிவினா போட்டி நடைபெற்றது.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தலா மூன்று மாணவிகள் தெரிவு செய்யப்பட்டு குழுக்களுக்கிடையிலான போட்டியாக இப்போட்டி நடைபெற்றது.

இப்போட்டியில் முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவிகளின் குழு முதலாமிடத்தை பெற்றுக் கொண்ட அதேவேளை முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் பாடசாலை மாணவிகள் குழு இரண்டாமிடத்தையும் முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலய பாடசாலை மாணவிகள் குழு மூன்றாமிடத்தையும் முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலய பாடசாலை மாணவிகள் குழு நான்காமிடத்தையும் முல்லைத்தீவு இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலய பாடசாலை மாணவிகள் குழு ஐந்தாமிடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

# மின்சாரசபை ஊழியரின் மோட்டார் சைக்கிள் திருட்டு

(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டுவில் வீதிப் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் மின்மானி வாசிப்பவரின் மோட்டார் சைக்கிள் திருட்டுப் போயிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மின்சாரசபை ஊழியர், மின் பட்டியல் கணக்கிடும் பொருட்டு கண்டுவில் வீதியில் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு வீடொன்றுக்குள் சென்ற போதே மேற்படி திருட்டு இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மலைச்சாரல்

# மாத்தளையில் 'கொலுசா' சிறுகதை வெளியீடு





(மாத்தளை சுழற்சி நிருபர்)

மாத்தளை மலரன்பனால் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்ட 'கொலுசா' என்ற சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா, மாத்தளை மகாத்மா காந்தி சபா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

மேற்படி சிறுகதைத் தொகுதியை சாலிய குணவர்தன ஆங்கிலத்திருந்து சிங்களத்துக்கு மொழிபெயர்க்க,மாத்தளை மலரன்பன் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் இலக்கிய ஆர்வலர் அமரர் துரை விஸ்வநாதனின் நினைவாக மாத்தளை தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறுகதையின் தமிழ் மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது.

# மலையக பெண்கள் துயரங்களுக்கு மத்தியில் ஓர் தேசமாய் வாழ்கின்றனர்

பெண்கள் அரசியல், சமூகம், பொருளாதாரம், கலை என அனைத்து துறைகளிலும் கடந்த ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேலாக பெற்ற வெற்றிகளை நினைவுப்படுத்தவும் எதிர்கொள்ள வேண்டியுள்ள களங்களும், சவால்களும் ஏராளமாகக் காத்திருக்கின்றன என்பதைக் கருத்தில் கொள்ளவும்.

இந்நாள் மகளிர் தினமாக உலகெங்கும் கொண்டாடப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினரும் அதிமேதகு ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷின் மகளிர் தின வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

எம் மலையக தாய் 200 வருடம் சொல்லெண்ணா துயரங்கள் பலவற்றிற்கு மத்தியில் தேயிலை கூடைக்குள் ஓர் தேசமாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்நிலை மாற வேண்டும். அவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்பட வேண்டும்.



பெண் இனம் அடைந்திருக்கும் வெற்றிகள் அனைத்திற்கும் என் பாராட்டுக்கள்.

அடையப் போகும் வெற்றிகள் அனைத்திற்கும் என்றென்றும் நான் உறுதுணையாய் இருப்பேன்

பெண்மை உயர உலகு உயரும். அனைவருக்கும் எனது மகளிர் தின நல்வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்து மகிழ்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

# அசிட் வீச்சில் ஐவர் காயம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

வழக்கு விசாரணைக்காக வந்து கொண்டிருந்த போது மேற்கொள்ளப்பட்ட அசிட் வீச்சில் ஐவர் காயமடைந்துள்ளனர். இரத்தினபுரி மேல் நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை (06) காலை இடம்பெற்ற அசிட் வீச்சினால் ஐவர் காயமடைந்து இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இரத்தினபுரி தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

வழக்கு ஒன்றுக்காக வந்த ஒருவர், வீதியில் பயணித்த அவரது மனைவி மற்றும் மூன்று குழந்தைகள் மீது அசிட் வீச்சு தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரியின் புதிய நகரத்தில் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்துடன் தொடர்புடைய பிரதான பிரதிவாதியை இலக்கு வைத்தே அசிட் வீச்சு நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வழக்கு விசாரணைக்கு ஆஜராக வந்தபோது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கார் விபத்தில் உயிரிழந்த இளைஞனின் தந்தையே அசிட் வீச்சை மேற்கொண்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி திருட்டு

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பங்களாஹத்த பகுதியில் வீட்டுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளதாக உரிமையாளர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

cp YS 3772 என்ற இலக்கத்தகட்டை கொண்ட டிவி.எஸ் கறுப்புநிற முச்சக்கர வண்டி எரிபொருள் இன்றி தனது வீட்டுக்கு முன் நிறுத்தப்பட்டிருந்த நிலையிலேயே திருடப்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

முச்சக்கரவண்டி தொடர்பான தகவல் கிடைத்தால் 0775343893 என்ற இலக்கத்திற்கு அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு உடனடியாக தெரிவிக்குமாறு நானு ஓயா பொலிஸார் மற்றும் உரிமையாளர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# 'மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயமும், மலையகத் தமிழரும்' நூல் வெளியீடு





மாத்தளை மாசிமக மகோற்சவத்தையொட்டி மாத்தளை வடிவேலன் எழுதிய 'மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயமும், மலையகத் தமிழரும்' என்ற நூலின் பிரதிகள் அன்னை முத்துமாரியம்மனிடம் அர்ச்சித்து வைக்கப்படுவதை நூற்படையில் சமூகப் பரிபாலனசபைத் தலைவர் எஸ்.விக்கிரமசிங்க, தொழிலதிபர் தனுஷ்கோடி இராஜேந்திரன் ஆகியோரிடம் நூல்கள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். இந்நிகழ்வில் சைவப்பெரியார் சு.புண்ணியசீலன், சுப்பையா ஜெயகுமார் மற்றும் அம்பிகை அடியார்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# 12 வயது மாணவி பாலியல் துஷ்பிரயோகம்

மஹியங்கனை, கெசல்பொத்த பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்கும் 12 வயதுடைய மாணவியொருவரை அவரது தாயின் இரண்டாவது கணவர் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர்.

மாணவி பாடசாலை முடிந்து வீட்டுக்குச் செல்ல முடியாது என அதிபரிடம் தெரிவித்ததையடுத்து இதுதொடர்பில் பாடசாலை அதிபர் மஹியங்கனை சிறுவர் மற்றும் மகளிர் பணியக அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

அதற்கமைய பாடசாலைக்கு சென்ற அதிகாரிகளால் சிறுமியை மஹியங்கனை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்து பரிசோதனைக்குட்படுத்தினர்.

இதன்போது மாணவி பல தடவைகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கெசல்பொத்த, மாபாக்கடையில் வசிக்கும் 48 வயதுடைய சந்தேகநபரை கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலும் சிறுமியின் தாயும், தாயின் இரண்டாவது கணவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# பாடசாலை மாணவன் மயங்கி விழுந்து மரணம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கலவான பிரதேசத்தில் பாடசாலை மாணவனொருவன் மயக்கி விழுந்து உயிரிழந்துள்ளார். கலவான மீபாகம பாடசாலை மாணவர் ஒருவரே இவ்வாறு மயங்கி கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று (6) இச்சம்பவம் இடம்பெற்றதாக கலவான பொலிஸார் தெரிவித்தனர். இப்பாடசாலையில் எட்டாம் தரத்தில் கல்வி கற்கும் பதின்மூன்று வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் இறந்து விட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான






திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளிர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கு. சரியான விடையின் கீழ் கோடிடுக.

- உருவில் உள்ள பொருட்களுடன் தொடர்புபட்ட செயல்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

01. 

i. வெட்டுதல், படித்தல், விளையாடுதல்
ii. சமைத்தல், கல்வி, பாதுகாப்பு
iii. வெட்டுதல், கற்றல், அணிதல்

02. 


i. வெட்டுதல், விளையாடுதல், கற்றல்
ii. உழுதல், இருத்தல், எழுதுதல்
iii. அறுவடை, இருத்தல், மகிழ்ச்சி


- தரப்பட்ட பொருள் சோடிகளுள் முதலாவது பொருளைப் பயன்படுத்துவதற்குத் தேவைப்படும் இரண்டாவது பொருளைச் சரியாகக் கொண்டுள்ள விடையைத் தெரிவு செய்க.


03. i. கொப்பி – புத்தகம் ii. ஊசி – நூல் iii. மண்வெட்டி – கத்தி


04. i. பேனை – மை ii. புடைவை - மீற்றர்க் கோல்
ii. பேனை – காரீயம்

- கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய உருவை வரைக.


05.  ...............

i. ii. iii.


06.  ................


i. ii. iii.



07. 40 இன் அரைவாசியுடன் 110 இன் அரைவாசியைக் கூட்டும் போது கிடைக்கும் விடை யாது?
i. 150 ii. 65 iii. 75

08. 
உருவில் உள்ள உருளை வடிவான திண்ம உருவை புள்ளிக்கோடுகள் வழியே வெட்டிய பின் கிடைக்கும் ஒரு துண்டில் எத்தனை மேற்பரப்புகள் உண்டு?
i. 4 ii. 3 iii. 5

09. அருகில் தரப்பட்டுள்ள உருவில் காணப்படும் செவ்வகங்களினதும் முக்கோணங்களினதும் எண்ணிக்கைகள் முறையே
i. 8, 5 ii. 10, 4 iii. 9, 4


- முதல் இரு தொடர்பை அவதானித்து அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

10.  ..............

i. ii. iii.


11.


| | | |
|---|---|---|
| 216 | 316 | 123 |
| 612 | 163 | 621 |
| 231 | 126 | 261 |


அடைப்பில் தரப்பட்டுள்ள எண்களை ஆக்குவதற்கு அதிக தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ள இலக்கம் எது?
i. 2
ii. 1
iii. 6


12. தரப்பட்டுள்ள வாக்கியங்களை ஒழுங்குபடுத்தும் போது சம்பவம் ஒன்று உருவாகும். அதனைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
**A** – வீதியருகே சிறிய பொதி ஒன்றைக் கண்டான்.
**B** – பெரியவர் அப் பொதியை உரியவரிடம் ஒப்படைத்தார்.
**C** – விஸ்வா பாடசாலை நோக்கி சென்று கொண்டிருந்தான்.
**D** – பொதி பற்றிய தகவலை பெரியவருக்குத் தெரிவித்தான்.
**E** – தூரத்தே பெரியவர் ஒருவர் வருவதைக் கண்டான்.


i. CAEDB ii. CADEB iii. CABED

13. இரு பகுதிகளும் சமனாக இருக்கும் விடையைத் தெரிக
i. KS54746 – KS60695 ii. POR ✲ ATY – PQR ✲ ATY
iii. XYZ654N – XYZ654N


14. அருகே தரப்பட்டுள்ள உருவை மேலிருந்து நோக்கும் போது தோன்றும் விதம்

i. ii. iii.

15. கீழே தரப்பட்டுள்ள வலையுருவை மூடி ஒட்டும்போது பெறப்படும் சதுரமுகியைத் தெரிவு செய்க.

i. ii. iii.

16. அருகில் உள்ள உருவில் ஒத்த மரக் குற்றிகள் சிலவற்றைப் பயன்படுத்தி உருவாக்கிய அமைப்பு உருவில் காட்டப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள மரக் குற்றிகளின் மொத்த எண்ணிக்கை யாது?
i. 10
ii. 20
iii. 24


17. உருவில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதி யாது?

i. ii. iii.

18. கமலன் தன்னிடமிருந்த ரூபாய் 5 நாணயக்குற்றிகள் இரண்டையும் ரூபாய் 10 நாணயக்குற்றிகள் மூன்றையும் ஒரு கடைக்காரரிடம் கொடுத்து அவை அனைத்தையும் ரூபாய் 2 நாணயக்குற்றிகளாக மாற்றிக் கொண்டான். தற்போது அவனிடமுள்ள நாணயக்குற்றிகளின் எண்ணிக்கை ஆரம்பத்திலிருந்த நாணயக்குற்றிகளின் எண்ணிக்கையின் எத்தனை மடங்காகும்?
i. 5 மடங்கு ii. 4 மடங்கு iii. 3 மடங்கு


19. கோலத்துக்கு ஏற்ப ? குறியீட்டுக்குப் பொருத்தமான எண் யாது?


i. 36 ii. 64 iii. 81


- ஓட்டப்போட்டி ஒன்றில் மாணவர்கள் ஓடி முடிக்க எடுத்த நேரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
கமல் - 7 நிமிடம் விமல் - 6 நிமிடம் அமல் - 5 நிமிடம்
நமல் - 8 நிமிடம் சமல் - போட்டியை நிறைவு செய்யவில்லை

20. மாணவர்கள் வெற்றிக்கம்பத்தை அடைந்த ஒழுங்குமுறை
i. அமல், விமல், கமல், நமல் ii. நமல், கமல், சமல், விமல்
iii. கமல், அமல், நமல், சமல்

21. இப்போட்டியில் முதலாவதாக வந்தவர்
i. அமல் ii. நமல் iii. கமல்




22. மேலே உள்ள உருவில் அதிகமாகக் காணப்படுவது
i. மாம்பழம் ii. அன்னாசி iii. அப்பிள்


23. 

இவ்வுருவில் A யினால் காட்டப்பட்டுள்ள கோணம்
i. செங்கோணத்திற்குச் சமன்
ii. செங்கோணத்தை விடக் குறைந்தது
iii. செங்கோணத்தை விடக் கூடியது

24. பெப்ரவரி மாதத்தின் 03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனின், அம்மாதத்தின் 28ஆம் திகதி என்ன கிழமையாக இருக்கும்?
i. புதன் ii. வியாழன் iii. வெள்ளி

25. வாகனத் தரிப்பிடம் ஒன்றில் உள்ள 13 முச்சக்கர வண்டிகளினதும், 20 கார்களினதும் டயர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
i. 125 ii. 109 iii. 119

26. கூம்பகம் ஒன்றை அமைக்கத் தேவையான தள வடிவங்கள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

i. ii. iii.

27. பீற்றர் தனது வீட்டில் இருந்து பாடசாலை செல்லும் பாதை கீழே தரப்பட்டுள்ளது. A அவனது வீடும் B அவனது பாடசாலையும் ஆகும்.


பீற்றர் வீட்டில் இருந்து பாடசாலை செல்லும் பாதையில் எத்தனை தடவைகள் தெற்கு நோக்கிப் பயணம் செய்தான்?
i. 4 ii. 5 iii. 2


(11ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கத் தொடர்)


# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்


28. மாணவன் ஒருவன் தீக்குச்சிகளைப் பயன்படுத்தி அமைத்த கோலத்தில் முதல் மூன்று சந்தர்ப்பங்களும் வருமாறு




கோலத்தின் முதல் 3 சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ள தீக்குச்சிகளின் எண்ணிக்கை யாது?
i. 24  ii. 21  iii. 20


29. 
இவ்வுருவில் உள்ள முக்கோணிகளினதும் சதுரங்களினதும் கூட்டுத் தொகை முறையே
i. 20, 6  ii. 18, 8  iii. 8, 6

30. இவ்வுருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
i. 5
ii. 9
iii. 6



31. 
இவ்வுருவின் சுற்றளவு எத்தனை இடைவெளிகள்?
i. 20 இடைவெளிகள்
ii. 21 இடைவெளிகள்
iii. 22 இடைவெளிகள்


32. இவ்வுருவில் உள்ள சிறிய சதுரமுகிகள் எத்தனை?
i. 17
ii. 18
iii. 20



| January | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஞா | தி | செ | பு | வி | வெ | ச |
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

33. நாட்காட்டியின் படி ஜனவரி மாதத்தில் வரும் வியாழக்கிழமைகளைக் கொண்ட திகதிகளின் கூட்டுத்தொகை யாது?
i. 75  ii. 85  iii. 80


34. ஜனவரி மாதத்தின் நடுநாள் என்ன கிழமையாகும்?
i. புதன்  ii. செவ்வாய்  iii. வியாழன்

35. 
இவ் டிஜிற்றல் எண்ணை ஆக்க 5 குச்சிகள் தேவை எனின், 12 ஐ டிஜிற்றல் எண்ணாக மாற்ற எத்தனை குச்சிகள் தேவை?
i. 6  ii. 7  iii. 8

36. PEPSI இதனை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது எவ்வாறு தெரியும்?
i. 129E9  ii. 1E959  iii. 12939

37. காகம் Black எனின், வெற்றிலை
i. Green  ii. Blue  iii. White


38. பின்வரும் உருக்களில் எதில் அதன் எல்லாச் சமச்சீர் அச்சுக்களும் வரையப்பட்டுள்ளன.

i. ii. iii.


39. குறித்த நாளொன்றில் ஒரு நூலகத்தில் மூன்று நண்பர்கள் புத்தகங்களை வாசித்த நேரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
அன்வர் - மு.ப 8.15 இலிருந்து பி.ப. 1.15 வரை
விமலன் - மு.ப. 9.45 இலிருந்து பி.ப. 2.30 வரை
அமரன் - மு.ப. 8.20 இலிருந்து பி.ப. 1.45 வரை

இதற்கேற்ப கூடுதலான நேரம் நூலகத்தில் புத்தகங்களை வாசித்தவர் யார்?
i. அன்வர்  ii. விமலன்  iii. அமரன்

40. சில விலங்குகள் அவை உண்ணும் உணவுகளின் வகையைக் குறித்துக் காட்டுவதற்காக பின்வரும் வரிப்படம் வரையப்பட்டுள்ளது. இதில் A, B, C, இனைக் குறித்துக் காட்டப்பட்டுள்ள விலங்குகள் முறையே யாவை?
i. எருமை, யானை, முயல்
ii. ஓநாய், புலி, சிறுத்தை
iii. சிங்கம், நாய், மான்




# கடந்த வார (01.03.2024) வினாத்தாள்- II இற்கான விடைகள்

**I.**
01. இதமான
02. மத்தாப்புச் சிதறல் போல
03. அங்குமிங்கும்
04. சென்றது
05. நிலவு
06. கூட்டம் கூட்டமாக
07. இருக்க
08. நாங்கள் நாய்கள் வளர்த்தோம்.
09. அறிவு வளரும்
10. கல்வி, எழுத்து
11. அலங்கார மீன்களை வளர்ப்பது உள நலத்திற்கு நல்லது
12. கமலா வீட்டிற்கு விரைவாக நடந்து வந்தாள்.
13. குயில்

**II.**
14. i. தோழன்  ii. சிறுவன்  iii. குறவன்
15. i. வீடு  ii. பென்சில்  iii. புத்தகம்
16. i. வாசித்தாள்  ii. சென்றார்  iii. விளையாடினோம்
17. i. வேட்பாளர்  ii. அமுதவிழா
18. i. i. தபால் நிலையம்  ii. புலி
ii. i. Pineapple  ii. Kite
19. i. How many sisters do you have
ii. i. பதின்மூன்று  ii. எனக்கு
20. i. ஒயாட வதுர ஓனத?
21. 821
22. i. 100 கொடிகள்  ii. 10 கொடிகள்
23. 20 பேர்
24. 7 தடவை
25. 22 பேருக்கு
26. 1, 4
27. i. 4  ii. 2
28. 16 : 00
29. i. ஓர்க்கிட், அந்தூரியம்  ii. 4 பேர்

**III.**
30. 2
31. 2
32. 2
33. 1
34. 1
35. 2
36. 2
37. 3
38. 1
39. 3
40. 1
41. 3
42. 3
43. 3
44. 1
45. 1
46. 1
47. 2
48. 1
49. 1
50. 3
51. 3
52. 1
53. 2
54. 1
55. 3
56. 3
57. 2
58. 1
59. 1

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு;

# பயனாளிகள் எண்ணிக்கையை 24 இலட்சமாக அதிகரிக்க முடிவு

## இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகள் பெற்றுக் கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கையை 24 இலட்சமாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேற்படி வேலைத் திட்டத்தின் இரண்டாம் கட்ட விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும் காலம் எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் நிறைவு பெறுவதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சிந்தக அமல் மாயாதுன்னே எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

அஸ்வெசும முதலாவது சுற்றில் 3,744,493 விண்ணப்பங்கள் கிடைத்தன. 1,894,140 குடும்பங்கள் தொடர்பான மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனை ஆகியவற்றை பரிசீலனை செய்த பின்னர் அவர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனையடுத்து 2023 டிசம்பர் மாதமளவில் 1,432,240 பேருக்கு கொடுப்பனவுகளை வழங்க முடிந்தது.

தற்போது பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணப்படுகிறது. தொடர்ந்து 2024 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரை சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படும். முதலாவது சுற்றில் விண்ணப்பிக்காதவர்களுக்கு இரண்டாவது சுற்றில் விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மார்ச் 15ஆம் திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் அனைவரும் இந்த விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அமைதி, நல்லிணக்கத்தை மேம்படுத்தி மஹாசிவராத்திரியை மேம்படுத்துவோம்

## ஜனாதிபதியின் மகாசிவராத்திரி வாழ்த்துச் செய்தி

இன்றைய மகா சிவராத்திரி தினத்தில் இந்துக்களால் ஏற்றப்படும் ஒளியானது, முழு இலங்கையரின் வாழ்விலும் ஒளியேற்றுவதாக அமைய பிரார்த்திப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, உலகெங்கிலுமுள்ள இந்து பக்தர்களால், விரதம் அனுஷ்டித்து வழிபாடு நடத்தப்படும் இன்றைய தினத்தில், சகல உயிர்களையும் துன்பத்திலிருந்து விடுவிக்க சிவபெருமானிடம் செய்த பிரார்த்தனையை நினைவு கூருவதாக மகா சிவராத்திரி தினம் அமைந்திருக்கிறது.

மானிடர்களிடமுள்ள மமதை, அகந்தையை அகற்ற உதவும் ஞானத்தைப் பரவச்செய்யும் வகையில் உலகெங்கிலும் உள்ள இந்து பக்தர்கள் இன்னு பிரார்த்தனை செய்கின்றனர். கடந்த இரண்டு வருடங்களில் வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாட்டு மக்களை மீட்க அரசாங்கம் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டது.

இந்து மக்கள் மாத்திரமன்றி ஒட்டுமொத்த இலங்கை மக்களின் வாழ்வையும் செழிப்பாக்கும் எதிர்பார்ப்புடன் இன்று மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புகள் வெற்றிகரமான நிலைக்கு வந்துள்ளன.

மகா சிவராத்திரி தினத்தை அர்த்தமுள்ளதாக்கும் அமைதி, நல்லிணக்கத்தை மேம்படுத்தி, ஆணவம் மற்றும் அகங்காரம் இல்லாத நாடாக அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் எதிர்காலத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கவிஞர் மதினா உம்மாவின் கவிதைத் தொகுப்பு வெளியீடு

**அக்கரைப்பற்று தினகரன் சுழற்சி நிருபர்**

கிழக்கின் பெண் ஆளுமைகளில் ஒருவரான அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியையும் கவிஞரும் எழுத்தாளருமான ஜனாபா எம்.ஐ. மதினா உம்மாவின் 17 ஆம் 18 ஆம் வெளியீடுகளான கலை மற்றும் வாழ்வை நிகர்த்த வானவில் ஆகிய இரண்டு கவிதைத் தொகுப்புக்களின் வெளியீட்டு வைபவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சிரேஸ்ட நில அளவையாளர் ஏ.மொஹிதீன் பாவா தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் ஆசிரியை மதீனா உம்மாவை ஜனாபா சித்ரா ஏ.குத்தூஸ் பொன்னாடை போர்த்த கலாபூஷணம் அருட்கவி அக்கரையூர் அப்துல் குத்தூஸ் வாழ்த்துப்பா பாடி வாழ்த்துப் பாவினை வழங்கி பாராட்டுவதையும் நூல் ஆய்வாளர் சிறாஜ் மசூர் அக்கரைப்பற்று மற்றும் இறக்காமம் பிரதேச செயலாளர் ரி.எம். அன்ஸார் (நழீமி), எம்.எஸ்.எம்.றஸ்ஸான் (நழீமி) பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ.அஹமட் கியாஸ் உள்ளிட்ட அதிதிகள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.



# மாத்தளை ஆமினாவில் இன்று சின்னம் சூட்டும் விழா

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை கல்வி வலயத்திற்குட்பட்ட மாத்தளை ஆமினா தேசிய பாடசாலையில் 23ஆவது மாணவியர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா இன்று 08ஆம் திகதி காலை 9 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் ஜே.எஸ்.எம்.பவாயிதா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைக்கான மலேஷியா உயர்ஸ்தானிகர் *Badli Hisham Adam* (பத்லி ஹிஷாம் ஆதம்) மற்றும் மாத்தளை கல்வி வலய அதிகாரிகள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# 35ஆவது வருட நிறைவைக் கொண்டாடும்
# அக்குறணை STUDY CENTRE


அல் ஹாஜ் எஸ்.எம்.எம். ரிழ்வான்
(போஷகர்)


அல் ஹாஜ் ஏ.எம்.எம். ஸிம்ஸான் (ஜே.பி)
(பணிப்பாளர்)


மின்ஸார் ஹமீட் (ACPM, AMA, DIB, DCM)
(நிர்வன தலைவர்)

## அக்குறணை Study Centre இன் கல்விப்பணி போற்றத்தக்கது

அக்குறணைப் பிரதேசத்தில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக 34 ஆண்டுகளாக கல்விப்பணியைச் செய்து வரும் 'ஸ்டடி சென்டரின்' சேவையை நான் மனப்பூர்வமாக பாராட்டுகின்றேன்.

கல்விக்கு உயிர் கொடுத்தோர் மரணிப்பதில்லை என்ற பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்றையும் கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக என்ற வள்ளுவரின் வாக்கையும் தம் சிரமேற்கொண்டு பணியாற்றி வரும் 'ஸ்டடி சென்டர்' நிறுவனம் மகத்தான தனது பணியை அக்குறணையில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் கிளைகளை நிறுவி நீண்ட காலமாக செய்து வருவதையிட்டு கல்வித் துறையைச் சார்ந்தவன் என்ற வகையில் நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன். இந்நிறுவனம் ஆரம்பமான காலம் முதல் அதன் கலைத்திட்டத்தை நெறிப்படுத்தி காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்களைப் புகுத்தி, பிள்ளைகளின் மனப்பாங்குகளை வளர்ச்சி அடையச் செய்து வருகிறது. அத்துடன் விளையாட்டுப் போட்டி, சுற்றுலா, கலைவிழா என எல்லோராலும் விரும்பப்படுகின்ற அம்சங்கள் இவர்களது கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதும் சிறப்புக்குரியதாகும்.

அந்த வகையில் சகோதரர் S.H.M. மின்சார், A.M.M சிம்சான் மற்றும் S.M.M றிழ்வான் ஆகியோரின் பணி சிலாகிக்கதக்கதாக இருப்பதுடன் இந்நிறுவனத்தின் ஆரம்ப கால ஆசிரியைகள், தற்கால ஆசிரியைகள் அனைவரும் நன்றியுடன் நினைவு கூரப்பட்டு பாராட்டப்பட வேண்டியவர்கள் ஆவர். மேலும் இங்கு முன் கல்வி பெற்ற எனது இரு பிள்ளைகள் இன்று பட்டதாரிகளாக உருவாகி கல்விப் பணியும் செய்து வருவதை நான் நன்றியுடன் நினைவு கூரக் கடமைப் பட்டுள்ளேன். புற்றீசல்போல் பல முன்பள்ளிகள் தோன்றி மின்னல் போல் மறைவதை நாம் காணக்கூடியதாக உள்ளன. இந்நிலையில் இந்நிறுவனம் நிலைத் திருப்பதற்கு மக்கள் காட்டும் பேரபிமானமும் நம்பிக்கையுமே காரணமாகும். இவர்களின் இப்பணி சிறக்கவும் மேன்மேலும் வளர்ச்சி அடையவும் எல்லாம் வல்ல அல்லாஹ்வை பிரார்த்திக்கின்றேன்.


**M.H.M. அலிறிஸாப் (SLPS)**
முன்னாள் ஆசிரிய ஆலோசகர் (தமிழ்)
ஓய்வு பெற்ற பிரதி அதிபர்.
(அக்குறணை சாஹிரா கல்லூரி)

## பாடசாலையின் வரலாறு

1989 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி அக்குறணையில் 'ஸ்டடி சென்டர்' பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடத்துடன் அதன் 35ஆவது வருட சேவை நிறைவைக் கொண்டாடுகின்றது.

அன்றைய காலகட்டத்தில் பாலர் பாடசாலைக் கல்வி முறையும் அதன் தேவையும் வெகுவாக உணரப்படாதிருந்தபோதிலும் (STUDY CENTRE) ஸ்டடி சென்டரின் பாலர் பாடசாலை அதன் சிறந்த நெறிமுறையினால் எமது மக்கள் மத்தியில் வரவேற்பினையும் நன்மதிப்பையும் பெற்றது. பொதுமக்களின் வரவேற்பினாலும் அவ்வப்பகுதி பிரதேச பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் அக்குறணையைச் சூழவுள்ள இருபது கிராமங்களை உள்ளடக்கியதாக புளுகொஹதென்ன சாஹிரா பஸார், கசாவத்தை, பள்ளிய கொட்டுவ, நீரெல்ல, மல்வானஹின்ன, அக்குறணை ஏழாம் கட்டை, துனுவில வீதி, உக்குலை, தெளும்புகஹவத்தை, குருகொடை, பானமுவ ஆகிய பிரதேசங்களில் 11 பாலர் பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் சமகாலத்தில் முந்நூறுக்கும் மேற்பட்ட பாலகர்கள் கற்றலை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவரை பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் எமது ஸ்டடி சென்டர் பாலர் பாடசாலைகளில் கல்வியை வெற்றிகரமாகப் பயின்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் இன்று அக்குறணையில் ஒவ்வொரு வருடமும் முதலாம் தரத்திற்கு பாடசாலைகளில் அனுமதிபெறும் மாணவர்களின் கூடுதலான மாணவர்கள் எமது ஸ்டடி சென்டர் பாலர் பாடசாலைகளில் கல்வி கற்றவர்களாகவே இருக்கின்றனர் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இப்பாலர் பாடசாலைகள் ஸ்டடி சென்டர் என்ற ஒரே பெயரின் கீழ் இயங்குவதனால் அவ்வப்பகுதி பாலர் பாடசாலைகளை அப்பிரதேசத்தின் பெயரைக்கொண்டே அழைக்கும் முறை இயல்பாகவே உருவாகிறது.

ஒரு மனிதனுக்கு கல்வியுடன் ஒழுக்கம் மிக முக்கியமானதாகும். ஒழுக்கம் எனும்போது சமயம், கலாசாரம், பண்பாடு இவற்றுடன் இணைந்ததாகும். அதனைச் சிறு வயதிலிருந்தே கொடுப்பது மிக முக்கியமானதாகும்.

எனவே, அந்த அடிப்படையில் சிறுவயது முதலே சமயத்துடன் பின்னிப் பிணைந்த கலாசார விழுமியங்களையும் எமது பாலர் பாடசாலைகள் வழங்கி வருகின்றன. பாலர் பாடசாலை என்னும் போது அது கற்றலுக்கு மாணவ, மாணவிகளை தயார்ப்படுத்தும் ஒருஇடம் என்பது நாம் அறிந்த உண்மை. அந்த அடிப்படையில் நாம் கல்விக்கு அடிப்படையான பல்வேறு பழக்க வழக்கங்களையும் அவர்களுக்கு ஏற்படுத்தி வருகிறோம். வருடந்தோறும் விளையாட்டுப் போட்டி மற்றும் கலை நிகழ்வுகள், சமய தினங்கள் போன்றவற்றையும் நாம் மேற்கொண்டு அவர்களை ஆளுமைப் பண்புள்ளவர்களாக்க முயற்சி செய்கிறோம்.

பலரினது பேரபிமானம் பெற்ற எமது பாலர் பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி முற்றிலும் விநோதங்களும் சுவாரஸ்யங்களும் உள்ளடக்கிய போட்டி நிகழ்ச்சிகளாக அமைந்துள்ளன. அத்துடன் பாலர் பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் இவ்விரண்டு நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள வாய்ப்பு அளிக்கப்படுவதனாலும் ஒவ்வொரு மாணவருக்கும் பரிசு கிடைக்கும் வகையில் இப்போட்டி நிகழ்ச்சிகள் அமைக்கப்படுவதனாலும் இவ்விளையாட்டுப் போட்டியானது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அத்துடன் வருட இறுதியில் எமது மாணவர்கள் பங்குகொள்ளும் முழுநாள் நேரடி வானொலி நிகழ்ச்சியொன்றும் ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

எமது மாணவர் செயல்நூல் முற்றிலும் படங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது முதலாம் தவணையின் இறுதிப் பகுதியில் வழங்கப்பட்டு வருகிறது. இச்செயல்நூல் மாணவர்களின் கற்கும் விருப்பத்தினை வளர்க்கிறது. விவேகமாகச் சிந்திக்க வைக்கிறது. உளச்சார்பினை அதிகரிக்கிறது. அத்துடன் திறமையை வளர்க்கிறது. இப்பாலர் பாடசாலைகள் அடிக்கடி எமது பணிப்பாளர் சபையின் மேற்பார்வைக்குள்ளாவதனால் எமது கல்வித்திட்டம் குறைவின்றி மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய முடிகிறது.


குறைந்த செலவில் நிறைந்த பயனை தமக்கு அண்மித்த பகுதியில் பெற்றுக் கொள்ள அக்குறணை ஸ்டடி சென்டர் பாலர் பாடசாலைகளை நாடுவோர் எண்ணிக்கைக்கு இத்துடன் உள்ள புகைப்படங்கள் ஒருசான்று என்பதைக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

## பாலர் பாடசாலை


எச்.எம். ரிகாஸ் மொஹமட்
(உதவியாளர்)


எம்.ஐ.எம். சாத்
(உதவியாளர்)


குருகொடை பாலர் பாடசாலை மாணவர்கள் - 02


பானகமுவ பாலர் பாடசாலை மாணவர்கள்


ஏழாம் கட்டை பாலர் பாடசாலை மாணவர்கள்-01


ஏழாம் கட்டை பாலர் பாடசாலை மாணவர்கள்-02


கசாவத்தை பாலர் பாடசாலை மாணவர்கள் -01


கசாவத்தை பாலர் பாடசாலை மாணவர்கள் -02


சாஹிரா பஸார் பாலர் பாடசாலை மாணவர்கள் - 01


சாஹிரா பஸார் பாலர் பாடசாலை மாணவர்கள் - 02


சாஹிரா பஸார் பாலர் பாடசாலை மாணவர்கள் - 03


நீரெல்லை பாலர் பாடசாலை மாணவர்கள் -01


நீரெல்லை பாலர் பாடசாலை மாணவர்கள் - 02


குருகொடை பாலர் பாடசாலை மாணவர்கள் - 01


மல்வானஹின்ன பாலர் பாடசாலை மாணவர்கள்


துனுவில வீதி பாலர் பாடசாலை மாணவர்கள் - 01


துனுவில வீதி பாலர் பாடசாலை மாணவர்கள் -02


துனுவில வீதி பாலர் பாடசாலை மாணவர்கள் -03


துனுவில வீதி பாலர் பாடசாலை மாணவர்கள் - 04


தெலும்புகஹவத்தை பாலர் பாடசாலை மாணவர்கள்


பள்ளியகொடுவ பாலர் பாடசாலை மாணவர்கள்


ஸ்டடி சென்டர் ஆசிரியர் குழாம்


எஸ். சதுர்தீன் (JP)
மாத்தளை சுழற்சி நிருபர்

பராடே சட்டத்தை இடை நிறுத்துவதற்கு

# அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தை உடனடியாக செயற்படுத்த நடவடிக்கை

## சபையில் பிரதமர் தினேஷ் குணவர்தன

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



தேவையான திருத்தங்களை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கும் வரை பராடே சட்டத்தை இடைநிறுத்துவதற்கு அமைச்சரவை மேற்கொண்டுள்ள தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நடைமுறையில் உள்ள பராடே சட்டத்தின் கீழ் மக்களின் சொத்துக்கள் மற்றும் காணிகளை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு வணிக வங்கிகள் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் அதனை தடுப்பதற்கு அரசாங்கம் தலையிட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் வகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் இந்த விடயம் தொடர்பில் பல தடவைகள் சபையில் சுட்டிக்காட்டியுள்ளார் அவரது கூற்றுக்கு நாம் இணக்கம் தெரிவிக்கின்றோம்.

இந்த சட்டம் கடந்த வருடங்களில் பல தடவைகள் திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளது. அந்த வகையில் பத்து வருடங்களுக்கு ஒரு தடவை இந்த சட்டம் திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

முதல்முறையாக நடைமுறைக்கு வந்த மட்டுப்படுத்தல்கள் தற்போது பல மடங்காக அதிகரித்துள்ளன.

அதன் காரணமாகவே அமைச்சரவையில் ஜனாதிபதி அது தொடர்பில் தெளிவாக ஆராய்ந்து அந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு பணிப்புரை வழங்கியுள்ளார். அந்த வகையில் தேவையான திருத்தங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் வரை அதனை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுற்றுலா விசாவில் வர்த்தகத்தில் ஈடுபடும் ரஷ்யர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை



சுற்றுலா விசாக்களில் இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் ரஷ்ய பிரஜைகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

காலி இமதுவ பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டம் நேற்றுமுன்தினம் (06) இமதுவ பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர்,

அஹங்கம பிரதேசத்தில் ரஷ்யர்களே அதிகளவில் வர்த்தகத்தில் ஈடுபடுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டது.

இமதுவ மற்றும் ஹபராதுவ ஆகிய பிரதேசங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் இமதுவைக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு அங்கு 1,850 மீற்றர்களுக்கு காபட் இடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

"தற்போது உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் சுற்றுலா நடவடிக்கைகளுக்கு பணம் பெறும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, இமதுவ பிரதேச செயலகப்பிரிவில் சுற்றுலா அபிவிருத்திகள் தொடர்பில் முன்மொழிவுகளை மாகாண சபைகள் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

எமது அமைச்சினால் கட்டுமாணத் துறை தொழிலுக்கு அதிக சம்பளத்தில் இஸ்ரேலுக்கு செல்லக்கூடியவர்கள் விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கஷ்டப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும்.

அஸ்வெசும திட்டத்தில் 24 இலட்சம் குடும்பங்களில் 15 இலட்சம் குடும்பங்கள் பயன் பெறுகின்றன. அத்துடன் நாட்டில் முடங்கப்பட்டிருந்த அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

டொலரின் விலை குறைந்து, வெளிநாட்டிலிருந்து வரும் பணம் அதிகரித்தது, ஏற்றுமதி அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதால் மின் கட்டணத்தையும், எரிபொருள் விலையையும் மேலும் குறைக்கலாம் என அமைச்சர் தெரிவித்தார்.

# நிரந்தரமற்ற 388 ஊழியர்களுக்கு நியமனம் வழங்குமாறு வடக்கு ஆளுநர் கோரிக்கை



தற்காலிக பணியாளர் 388 பேருக்கான நிரந்தர நியமனங்களை வழங்குவதற்குரிய அமைச்சரவை அனுமதியை பெற்றுத்தருமாறு பிரதமரிடம், வடக்கு ஆளுநர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் தற்காலிக, பதிலீட்டு, சாதாரண மற்றும் தினக்கூலி அடிப்படையில் சேவையாற்றும் 388 பேருக்கான நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியை பெற்றுத்தருமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் நேரடியாக சென்று கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள பிரதமரின் அலுவலகத்தில் நேற்று இச்சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சில் பணியாற்றும் 67 பேருக்கும், உள்ளூராட்சி அமைச்சின் கீழுள்ள பிரிவுகளில் கடமையாற்றும் 321 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமென ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அவசர மற்றும் அத்தியாவசிய தேவைகருதி சேவையில் இணைக்கப்பட்டவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமெனவும், இவர்களின் அனுபவம் மற்றும் துறைசார்ந்த திறன், அறிவை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அவசர நிலைகளை ஈடுகொடுக்கக்கூடியதாக அமையும் என ஆளுநர், பிரதமரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்காலிகமாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள், நிரந்தர நியமனங்களை பெற்றுக்கொள்ள காத்திருப்பதாக தெரிவித்த ஆளுநர், அவர்களின் பெயர்பட்டியல் அடங்கிய கோரிக்கை கடிதத்தையும் பிரதமரிடம் சமர்பித்துள்ளார். விசேட திட்டத்தின் கீழ் இவர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கான அமைச்சரவை அனுமதியை பெற்றுத்தருமாறு ஆளுநர், பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிவராத்திரியை அனுஷ்டிக்க

# திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் அதிகளவான பக்தர்களின் வருகை எதிர்பார்ப்பு



மன்னார் பாடல் தளமான திருக்கேதீஸ்வரத்தில் எதிர்வரும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இவ்வருடம் அதிகளவான பக்தர்கள் கலந்து கொள்ளவிருப்பதால் இதற்கான சகல ஏற்பாடுகளும் தற்பொழுது பூர்த்தியடைந்துள்ளதாக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சிவராத்திரி தினம் தொடர்பில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அன்னாதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இத்துடன் அங்கர் பால்மா கம்பனி, இலங்கை போக்குவரத்து சபை, இலங்கை வங்கி, நீர்பாசன திணைக்களம், பாலாவி சேவா சங்கம், நீர்வழங்கல் வடிகால் சபை மற்றும் கட்டடத் திணைக்களம் ஆகியன தாகசாந்தி வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்து ஏழு வருடங்களாக இவ்வாலயத்தில் புனரத்தான வேலைகள் இடம்பெற்று வந்தமையால் கோவில் 2022 ஆம் ஆண்டு வரை பாலாலயம் அமைத்து சுவாமிகள் வழிபட்டு வந்தனர். இந்நிலையில் 2023 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டு சிவராத்திரிவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த வருடம் சிவராத்திரி விழாவுக்கு சுமார் ஐயாயிரம் பக்கதர்களுக்கு மேல் கலந்து கொண்டனர். இவ்வருடம் இத்தொகையை அதிகரிக்க வாயப்புக்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வருடமும் வழமை போன்று வடக்கு பகுதியில் மட்டுமல்ல இலங்கையின் நாலா பக்கங்களிலிருந்தும் பெருந்தொகையான பக்தர்கள் கலந்துகொள்ளவிருப்பதாக எதிர்பார்க்கப்படுகின்றது.

பராடே சட்டம் தொடர்பான அமைச்சரவை தீர்மானம்

# வங்கிகளுக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சபையில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பராடே சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ள போதும் வங்கிகளில் தொடர்ந்தும் அந்த சட்டத்தின் கீழ் தொழில் முயற்சியாளர்களின் சொத்துக்கள் ஏலத்தில் விற்கப்பட்டு வருவதனால் அந்த வங்கிகளுக்கு எழுத்துமூலம் அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பராடே சட்டத்தை எதிர்வரும் டிசம்பர் 15 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடை நிறுத்த அமைச்சரவை எடுத்த தீர்மானம் நடைமுறையில் செயற்படுத்தப்படுவதில்லை. வர்த்தக வங்கிகள் இன்னும் அந்த சட்டத்தையே பின்பற்றி நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன.

அதனால் பராடே சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மத்திய வங்கியூடாக இந்த வர்த்தக வங்கிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பராடே சட்டத்தின் கீழ் பலரின் சொத்துக்களை ஏலத்தில் விடுவதற்கு கடந்த வாரம் தொடர்ச்சியாக பத்திரிகைகளில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக வர்த்தக வங்கிகளே இந்த விளம்பரத்தை பிரசுரித்து வருகின்றன.

மத்திய வங்கியே நாட்டின் வங்கிக் கட்டமைப்பை கண்காணித்து வருவதால் மத்திய வங்கியூடாக வர்த்தக வங்கிகளுக்கு சுற்று நிருபம் ஒன்றின் மூலம் பராடே சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்த அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை விடுக்க வேண்டும்.

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களை பாதுகாக்கும் வகையில் பராடே சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்த அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு நானும் நன்றி கூறினேன். ஆனால் இன்று அந்தத் தீர்மானம் தவறாக பயன்படுத்தப்பட்டு அது அவப்பெயரை ஏற்படுத்துகிறது.

அரசாங்கம் மத்திய வங்கியூடாக வர்த்தக வங்கிகளுக்கு கடிதம் அனுப்பி, பராடே சட்டத்தின் ஊடாக சாதாரண கைத் தொழிலாளர்களின் சொத்துக்களை ஏலத்தில் விடுவதை உடனடியாக நிறுத்துமாறு உத்தரவிட வேண்டும்.

அவ்வாறின்றி இச் சட்டத்தில் திருத்தம் செய்து அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கும் போது சம்பந்தப்பட்ட வங்கிகள் கைத்தொழிலாளர்களின் சொத்துக்களை ஏலத்தில் விட்டு முடித்துவிடுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பில்

# நன்னீர் மீன் வளர்ப்பை ஊக்குவிக்க ஏற்பாடு



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான முன்னாயத்த கலந்துரையாடல் அம்மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை (07) நடைபெற்றது.

இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபைத் தவிசாளர் வி.விஜயரத்ன தலைமையிலான குழுவினரால் மட்டக்களப்பில் நன்னீர் மீன் வளர்ப்பு ஊக்குவிக்கப்படவுள்ள நிலையிலேயே இக்கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத முறையில் நன்னீர் மீன் வளர்ப்பை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை புதிய தொழில்நுட்ப உதவியுடன் நன்னீர் மீன் வளர்ப்பால் சிறந்த விளைச்சலை பெற முடியுமென, துறைசார் நிபுணர்கள் கூறினர்.

மேலும், வன இலாகாவின் அனுமதி பெற்று இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அத்தியடியில் 'Fadna Arunella' மருத்துவ முகாம்




சுமார் இரண்டு தசாப்தகாலம் முதல் தேசத்தின் நல்வாழ்வுக்கு வெற்றிகரமான பங்களிப்பை வழங்கி வரும் இலங்கையில் மிகப் பிரபல்யம் வாய்ந்த வர்த்தக நாமத்தைக் கொண்ட 'Fadna', அதன் 48ஆவது 'Fadna Arunella' மருத்துவ முகாமை அண்மையில் அத்தியடி மாதிரி ஆரம்பப் பாடசாலையில் நடத்தியது.

மருத்துவ தேவையுடையோருக்கு இலவச மருத்துவ சேவையை வழங்குவதற்காக கடந்த 2010ஆம் ஆண்டில் 'Fadna Arunella' மருத்துவ முகாம் ஆரம்பிக்கப்பட்டது. பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளை 'Fadna Arunella' வழங்குவதுடன், 'Fadna Arunella' மூலம் சுகாதார பயிற்சி முகாம்களும் நடத்தப்படுகின்றன.

இந்நிலையில் அனைவரும் தமது சுறுசுறுப்புமிக்க வாழ்க்கையில் சிறந்த சுகாதாரத்தையும் தேக ஆரோக்கியத்தையும் 'Fadna Arunella' மருத்துவ முகாம் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமென்று தாம் நம்புவதாகத் தெரிவித்துள்ள 'Fadna' ஸ்தாபகர் சமிந்திர சோமதுங்க, 'Fadna Arunella' மூலம் இலங்கையிலுள்ளோர் நன்மையடைவதையிட்டு தாம் பெருமையடைவதாகவும் கூறியுள்ளார்.

306A1 Moratuwa New Horizon Lions Club, அத்தியடி, கல்கிசை பொலிஸ் இடம் உள்ளிட்ட இடங்களில் 'Fadna Arunella' மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகின்றது.

'Fadna' சமூகத்துக்கான தனது பங்களிப்பை தொடர்ந்து வழங்குமென்பதுடன், எதிர்காலத்தில் மேலும் பல மருத்துவ முகாம்களை நடத்த திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம்

## புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு

இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் 68ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் மேல் மாகாணத்தில் கடந்த வாரம் நடைபெற்றதுடன், இதன் போது2024–2025காலப்பிரிவுக்கான புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். போஷகர், தலைவர், உப தலைவர், பொதுச் செயலாளர், பிரதி பொதுச் செயலாளர், தேசிய செயலாளர், உதவி செயலாளர், தேசிய அமைப்பாளர், உதவி தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு புதியவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்களாக முதித்த காரியகரவன்ன, திலகரட்ண குருவிட்ட பண்டார, உபாலி அரம்பேவல, பி.பாலசிங்கம், சமன் அதாவுடஹெட்டி, தர்மன் விக்கிரமரட்ண, சிசிர விஜேசிங்க ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவராக குருலு கூஞ்சன காரியகாரவன்ன (டெய்லிமிரர்) உப தலைவர்களாக பி.எம்.சௌரட்ன, எஸ்.ஜி.கே.டி.ஜூலியன், விஜித கடிரகொன ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

பொதுச் செயலாளராக திலக் சேனநாயக்க (ஊடக பயிற்சியாளர்), பிரதி பொதுச் செயலாளராக டக்ளஸ் நாணயக்கார ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். தேசிய செயலாளராக நிமந்தி ரணசிங்க (தினமின), துணை செயலாளர்களாக ஆனந்த கன்னங்கர (ஹெல்பேஜ் லங்கா) சமன் இந்திரஜித் (த ஐலன்ட்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பொருளாளராக சமிந்த கருணாரட்ண, உதவி பொருளாளர்களாக கிருஷ்ண டி.எதிரிசிங்க, சுதம் பஹலகம ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

# அக்கரைப்பற்று மாணவர்களுக்கு திசைமுகப்படுத்தல் செயலமர்வு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயலமர்வு நேற்று முன்தினம் புதன்கிழமை (06) அக் கல்லூரி அதிபர் எம்.எம். ஹசன் தலைமையில் கல்லூரியில் நடைபெற்றது. இதன்போது வளவாளர்களால் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரி பதிவாளர் எம்.ஏ.சீ.முகம்மட் றகீப், தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் எம்.றுமைஸ், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். வளவாளர்களாக, மௌலவி கலாநிதி எம்.ஐ.சித்தீக் (அஷ்ஹரி), சுவாமி நித்தியானந்த ஹிமாலயா, அம்பாறை மாவட்ட உளவள ஆலோசகர் மனூஸ் அபூபக்கர் ஆகியோர் கலந்துகொண்டனர்.




## தற்காலிக காணி அனுமதிப்பத்திரமுள்ள
# கல்முனை வியாபார நிலையங்களின் உரிமையாளருக்கு நிரந்தர காணி உறுதி

**ஒலுவில் விசேட நிருபர்**

கல்முனை மாநகர சபை பிரிவில் தற்காலிக காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு நிரந்தர காணி உறுதி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் புதன்கிழமை (06) காணி ஆணையாளர் நாயகத்துடன் நடைபெற்றதுடன், ஜனாதிபதியின் 'உறுமய' திட்டத்தின் கீழ் நிரந்தர காணி உறுதி வழங்க காணி ஆணையாளர் நாயகம் உறுதியளித்ததாகவும், அவர் தெரிவித்தார்.



கல்முனை மாநகர சபை பிரிவிலுள்ள வியாபார நிலைய உரிமையாளர்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கி வரும் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுடன் கலந்துரையாடியதாகவும் இதற்கமைய நிரந்தர காணி உறுதி வழங்கப்படவுள்ளதாகவும், ஹரீஸ் எம்.பி. தெரிவித்தார்

நிரந்தர காணி உறுதி வழங்கப்படவுள்ளதால், அதிகளவான வியாபார நிலைய உரிமையாளர்கள் நன்மையடைய முடியுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# சமூகமட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு; தம்பலகாமத்தில் ஆராய்வு

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

'கிழக்கு மாகாணத்தில் ஜனநாயக பங்குதாரர்களுக்கான ஓர் அரங்கத்தை உருவாக்குதல்' எனும் தொனிப்பொருளின் கீழ் கலந்துரையாடல், தம்பலகாமம் பிரதேச சபை மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை (07) நடைபெற்றது.

அகம் மனிதாபிமான வள நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது பல்வேறு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன. தமது பிரதேசங்களில் நிலவும் சமூகமட்டப் பிரச்சினைகளை உள்ளூர் அதிகார சபைகளினூடாக மக்கள் பங்கேற்புடன் தீர்வு பெற்றுக்கொண்டு, சமூகத்தை விழிப்படையச் செய்தல் எனும் கோணத்தில் இந்தக் கலந்துரையாடல் அமைந்தது.

# மகளிரின் முன்மாதிரியான செயல்களுக்கு ஒத்துழைப்போம்
## மகளிர் தின வாழ்த்துச் செய்தியில் கிழக்கு ஆளுநர் செந்தில்



இந்நாட்டின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் பெண்களின் பங்களிப்பு இருப்பதுடன், பன்முகத் திறமை கொண்ட பெண்கள் சமுதாயத்தில் உருவாக்கிய மாற்றங்கள் அதிகமென, கிழக்கு மாகாண ஆளுநரும் இ.தொ.கா. தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார். பெண்களை மதித்துக் கொண்டாடுவதுடன், அவர்களின் முன்மாதிரியான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

பெண்களுக்கான சம உரிமை, பொருளாதார சுதந்திரமே சமூகத்தின் வெற்றியாக அவதானிக்கப்படுவதாகத் தெரிவித்த அவர், பெண்ணானவள் தேசத்தை கட்டியமைக்கும் வலிமையானவள், பொருளாதாரத்தை உயர்த்துவதிலும் அவர்களின் பங்கு அளப்பரியதென்றார்.

சர்வதேச மகளிர் தினம் இன்று (08) கொண்டாடப்படும் நிலையில், அவர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்தாவது,

"ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து பெண்களுக்கான வாய்ப்புகள் அதிகளவில் வழங்கப்படும் இடத்தில் இலங்கை முதலாமிடத்தில் உள்ளதுடன், இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக உலகின் முதல் பெண் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க உள்ளார். பிரித்தானிய ஆட்சிக்காலம் முதல் இன்றுவரை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்குதாரர்களாக பெருந்தோட்ட பெண்கள் உள்ளனர். பெண்கள் நினைத்தால் சமூகத்தில் எத்தகைய மாற்றத்தையும் கொண்டு வர முடியும். வீட்டையும் நாட்டையும் கட்டியெழுப்பும் வலிமை அவர்களுக்கே உண்டு" என்றார்.

## சிறுவர் நலன்கள்
# வெருகல் பிரதேச குழுக் கூட்டத்தில் கலந்தராய்வு



**தோப்பூர் தினகரன் நிருபர்**

வெருகல் பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவர்களின் பாதுகாப்பு, பராமரிப்பு உள்ளிட்ட நலன்களுக்கான எதிர்காலத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தியுள்ளனர்.

வெருகல் பிரதேசமட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம், அப்பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (06) நடைபெற்ற போதே, சிறுவர் நலன்கள் தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்தியுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் திருகோணமலை மாவட்டச் செயலாளர் சமிந்த ஹெட்டியாரச்சி, திருகோணமலை மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், வெருகல் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார், கிராம அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறுவர் நலன்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துகளை முன்வைத்துள்ளனர்.

அத்துடன் சிறுவர் நலன்களை முன்னெடுப்பதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை இந்தக் கூட்டத்தில் அதிகாரிகள் வலியுறுத்தியதுடன், பல்வேறு தீர்மானங்களையும் எடுத்துள்ளனர்.

# திருமலை சிவராத்திரி நிகழ்வில் மருதஸ்தல அடிகளார், சீர்காழி சிவசிதம்பரம் பங்கேற்பு





மகா சிவராத்திரி விரதத்தையிட்டு திருக்கோணேஸ்வரம் கோயிலில் நடைபெற்ற நிகழ்வில் போரூர் ஆதீனம் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதஸ்தல அடிகளார் மற்றும் பத்மஸ்ரீ சீர்காழி சிவசிதம்பரம் விசேட அழைப்பாளர்களாக கலந்துகொண்டனர். போரூர் ஆதினம் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதஸ்தல அடிகளாரின் சொற்பொழிவும் சீர்காழி சிவசிதம்பரத்தின் தெய்வீக கானங்களும் நேற்று முன்தினம் கோயிலில் நடைபெற்றன.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் கடந்த 2ஆம் திகதி முதல் சிவராத்திரி விரத நிகழ்வுகள் திருக்கோணேஸ்வரம் கோயிலில் நடைபெற்று வருகின்றன.

இதில் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டு வருகின்றனர்.

# ஒலுவில் மக்களின் தேவைகளை கேட்டறிந்த அதாஉல்லா எம்.பி



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

ஒலுவில் பிரதேச மக்களின் தேவைகளை கேட்டறியும் முகமாக தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா அம்மக்களுடன் சந்திப்பொன்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை (03) நடத்தினார்.

தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய ஒலுவில் பிரமுகர்களின் ஏற்பாட்டில் ஒலுவில் பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது ஒலுவில் பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் ஏ.எம்.றாபி மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களை சந்தித்து, ஒலுவில் பிரதேசத்தில் நீண்ட காலமாக நிலவும் காணிப் பிரச்சினை, மீன்பிடி உட்பட மக்களின் அத்தியாவசிய பிரச்சினைகள் தொடர்பாக அதாஉல்லா எம்.பி. கலந்துரையாடினார்.

# அட்டாளைச்சேனையில் காணி உத்தரவுப்பத்திரம் வழங்கல்

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குள் அரச காணிகளை வைத்திருக்கும் பொது மக்களுக்கு நிரந்தர காணி அளிப்புப் பத்திரங்கள் மற்றும் காணி உத்தரவுப் பத்திரங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை (06) வழங்கி வைக்கப்பட்டன. அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி, ஆலங்குளம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்களுக்கே இவை வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது 59 காணி அளிப்புப் பத்திரங்களும் 111 காணி உத்தரவுப் பத்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டன.




அட்டாளைச்சேனையின் முன்னாள் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது சாபீர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக காணி அளிப்புப் பத்திரங்களும் காணி உத்தரவுப் பத்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டதை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தனது உரையில் நினைவுகூர்ந்தார். அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் அப்பிரதேச செயலாளர் பி.ரி.எம்.இர்பான் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, விசேட அதிதியாக கிழக்கு மாகாண காணி நிர்வாக திணைக்களத்தின் உதவிக் காணி ஆணையாளர் கே.எல்.எம்.முசம்மில் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## அட்டாளைச்சேனை
# கல்வியியல் கல்லூரி மாணவர் கல்முனைக்கு விஜயம்

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் பாடசாலை புடைக்காட்சி தொடர்பான விபரங்களை சேகரிக்க அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரியைச் சேர்ந்த 21 மாணவர்கள் கல்முனை இஸ்லாமாபாத் வித்தியாலயத்துக்கு விஜயம் செய்துள்ளனர்.

கல்முனை இஸ்லாமாபாத் வித்தியாலய அதிபர் ஏ.ஜீ.எம்.றிசாத் மற்றும் ஆசிரியர்கள் இதற்கான சகல உதவிகளையும் வழங்கி வருகின்றனர்.

கல்முனை கல்வி மாவட்ட பாடசாலைகளில் சமகாலத்தில் இந்தச் செயற்பாடு நடைபெற்று வருவதுடன், கல்விக் கல்லூரி விரிவுரையாளர்கள் மேற்பார்வை செய்து வருகின்றனர்.

## பாலமுனையில்
# போதைப் பாவனையை கட்டுப்படுத்த விழிப்புணர்வு வேலைத்திட்டம்

**பாலமுனை கிழக்கு தினகரன், பாலமுனை தினகரன் நிருபர்கள்**



போதைப்பொருள் பாவனை மற்றும் சமூக சீர்கேடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு வேலைத்திட்டம், பாலமுனை ஜும்மா பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் இவ்வேலைத்திட்டத்தை அட்டாளைச்சேனை பிரதேச சபை மற்றும் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையமும் இணைந்து அண்மையில் ஆரம்பித்து வைத்தது.

பாலமுனை பிரதேசத்திலுள்ள மைதானங்கள், கடற்கரையோரங்கள், வயல்வெளிகள் உள்ளிட்ட பொது இடங்களில் இடம்பெறும் போதைப்பொருள் பாவனை, சூதாட்டம் போன்ற சமூக சீர்கேடுகளை கட்டுப்படுத்தும் முகமாகவே இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பாலமுனை பெரிய பள்ளிவாசல் தலைவர் எம்.ஏ.ஏ.அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளர், கிராம உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பில் கண்காட்சியும் விழிப்புணர்வு நிகழ்வும்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



சர்வதேச மகளிர் தினத்தையிட்டு பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் விசேட தேவையுடைய பெண்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் முகமாக மட்டக்களப்பின் கல்லடி பாலத்துக்கு அருகில் உற்பத்திப் பொருள் கண்காட்சியும் விழிப்புணர்வு நிகழ்வும் நடத்தப்பட்டது.

'வீட்டையும் சமூகத்தையும் அழகாக வைத்திருக்கும் பெண்களை வாழ்த்துவோம்' எனும் கருப்பொருளின் கீழ் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தால் முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.ஜே. முரளிதரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு விற்பனை கண்காட்சியை பார்வையிட்டதுடன், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தற்போதைய காலகட்டத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெண் அமைப்பினர்கள் முன்னெடுக்கும் வாழ்வாதார உதவித் திட்டங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்களையும் இதன்போது அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

# சர்வதேச மகளிர் தினம் இன்று; காத்தான்குடியில் நிகழ்வு



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

சர்வதேச மகளிர் தினத்தையிட்டு 'அவளுடைய பலம் நாட்டுக்கு முன்னேற்றம்' எனும் தொனிப்பொருளின் கீழ் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (07) நடைபெற்றது. சர்வதேச மகளிர் தினம் மார்ச் 8ஆம் திகதி கொண்டாடப்பட்டு வரும் நிலையில், காத்தான்குடி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடத்தப்பட்டது. இதன்போது சுமார் 100 உள்ளூர் பெண் உற்பத்தியாளர்கள் மற்றும் பெண்கள் கலந்துகொண்ட வர்த்தக கண்காட்சி நடத்தப்பட்டதுடன், கேக் தயாரித்தல், அழகுக் கலை நிபுணர் சேவை மற்றும் ஒப்பனை கலைத்திறன் உள்ளிட்ட அம்சங்களில் கவனம் செலுத்தப்பட்டன. அத்துடன் மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளுடன், காத்தான்குடி பெண்கள் காப்பகத் தலைவி சல்மா அமீர் ஹம்சா சிறப்புரை நிகழ்த்தினார். நிகழ்வின் இறுதியில் சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குகொண்ட பெண் தொழில் முயற்சியாளர்கள் சான்றிதழ் மற்றும் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# சிவப்பு அறிவித்தலை மீறுவோருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல்

**ஒலுவில் விசேட நிருபர்**

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய இடங்களை வைத்திருப்போருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் அந்த அறிவித்தலை மீறுவோருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக, அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.முகம்மது இஸ்ஸதீன் தெரிவித்தார்.

தமது இடங்களை துப்புரவு செய்யுமாறு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்ட போதும், துப்புரவு செய்யாது அதனை மீறுவோருக்கு எதிராகவே நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

தற்போது அட்டாளைச்சேனையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் டெங்கு ஒழிப்பு பணியை முன்னெடுத்து வருவதுடன், வீடு வீடாகச் சென்று டெங்கு ஒழிப்பு தொடர்பான ஆலோசனையும் வழங்கி வருகின்றனர்.

# மூன்றாவது நடுவர் மீது இலங்கை முறைப்பாடு

பங்களாதேஷுக்கு எதிராக நேற்று முன்தினம் (06) நடைபெற்ற இரண்டாவது டி20 போட்டியில் துடுப்பில் பந்து பட்டது தெளிவாக ஒளிப்பதிவில் தெரிந்தபோதும் மூன்றாவது நடுவர் ஆட்டமிழப்பு வழங்காதது தொடர்பில் போட்டி மத்தியஸ்தரிடம் முறையிடப்போவதாக இலங்கை அணி தெரிவித்துள்ளது.

பினுர பெர்னாண்டோ வீசிய நான்காவது ஓவரில் சௌம்யா சார்கர் துடுப்பில் பட்டாவாறு சென்ற பந்தை விக்கெட் காப்பாளர் குசல் மெண்டிஸ் பிடியெடுத்தார். நடுவர் ஆட்டமிழப்பு வழங்கியபோதும் சௌம்யா மூன்றாவது நடுவரிடம் முறையிட்ட நிலையில் மூன்றாவது நடுவர் ஆட்டமிழப்பு இல்லை என்று அறிவித்தார்.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

இந்நிலையில் போட்டி மத்தியஸ்தரிடம் எழுத்துமூல முறைப்பாட்டை செய்யப்போவதாக இலங்கை உதவி பயிற்சியாளர் நவீட் நவாஸ் போட்டிக்குப் பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.



'நாம் பார்த்ததை தவிர மூன்றாவது நடுவர் வேறு காட்சியை பார்த்தாரா என்பது எனக்குத் தெரியவில்லை.

நாம் பார்த்த காட்சியில் பந்து படுவது தெளிவாக தெரிகிறது. இதனை நாம் போட்டி மத்தியஸ்தருக்கு எடுத்துச் செல்வோம்' என்று நவாஸ் தெரிவித்தார். இந்தப் போட்டியில் இலங்கை அணி 8 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்த நிலையில் தொடர் 1–1 என சமநிலை பெற்றுள்ளது.

# மைலோ கால்பந்து சம்பியன்சிப்: முல்லையிலிருந்து 16 அணிகள்



வட மாகாணத்தின் மைலோ கால்பந்து சம்பியன்சிப் தொடரின் இறுதிச் சுற்றில் ஆடுவதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து 10 மற்றும் 12 வயதுக்கு உட்பட்ட 16 ஆடவர் மற்றும் மகளிர் பாடசாலை அணிகள் தகுதி பெற்றுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்திற்காக கடந்த மார்ச் 2 ஆம் திகதி நடைபெற்ற இந்தப் போட்டியில் மொத்தம் 32 அணிகள் பங்கேற்றன. இதில் 12 வயதுக்கு உட்பட்ட ஆடவர் பிரிவில் முல்லைத்தீவு மகாவித்தியாலயமும் 10 வயது ஆடவர் பிரிவில் இரணைப்பாலை ரோமன் கத்தோலிக்க மகாவித்தியாலய அணியும் வெற்றியீட்டின.

12 வயதுக்கு உட்பட்ட மகளிர் பிரிவில் முல்லைத்தீவு ரோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலை அணி வெற்றிபெற்ற நிலையில் 10 வயது பெண்கள் பிரிவில் உடையார்கட்டு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி வெற்றிபெற்றது.

மைலோ கால்பந்தாட்ட சம்பியன்சிப் இறுதிச் சுற்றுப்போட்டி எதிர்வரும் மார்ச் 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் துறையப்பா அரங்கில் நடைபெறவுள்ளது.

# சர்வதேச செய்திகள்

## 9ஆவது மாதமாக சாதனை வெப்பம்



நவீன வரலாற்றில் கடந்த மாதம் உலகின் அதிக வெப்பமான பெப்ரவரி மாதமாக பதிவானதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் காலநிலை சேவை தெரிவித்துள்ளது. இதன்படி மாதாந்த வெப்பநிலை பதிவுகளில் தொடர்ச்சியாக ஒன்பதாவது மாதமாக வெப்பம் சாதனை உச்சத்தை தொட்டுள்ளது.

கடந்த 2023 ஜுன் மாதம் தொடக்கம் ஒவ்வொரு மாதமும் வெப்பநிலை புதிய உச்சத்தை தொட்டுள்ளது.

உலகின் கடல் மேற்பரப்பின் வெப்பம் சாதனை அளவுக்கு பதிவாகி இருப்பதோடு அன்டார்டிகாவின் கடல் பனி கடுமையாக குறைவடைந்துள்ளது.

எல் நினோ காலநிலை நிகழ்வு வெப்பம் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தபோதும் மனித செயற்பாட்டால் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் இதற்கு பிரதான காரணியாக உள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி கடந்த பெப்ரவரியில் மனிதன் அதிக அளவு புதைபடிவ எரிபொருளை எரிக்க ஆரம்பித்த தொழில்துறைக்கு முந்திய காலத்தை விடவும் சுமார் 1.77 செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது.

## சரக்கு கப்பல் மீதான ஹூத்திக்களின் ஏவுகணைத் தாக்குதலில் மூவர் பலி

தெற்கு யெமனுக்கு அப்பால் சரக்கு கப்பல் ஒன்றின் மீது ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் நடத்திய ஏவுகணை தாக்குதலில் அந்தக் கப்பலில் இருந்த மூன்று பணியாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வர்த்தகக் கப்பல்கள் மீது அந்தக் கிளர்ச்சியாளர்கள் நடத்தி வரும் தாக்குதல்களில் உயிரிழப்புகள் பதிவான முதல் சந்தர்ப்பமாக இது உள்ளது.



பார்படோஸ் கொடியுடனான ட்ரூ கொன்பிடென்ஸ் என்ற அந்தக் கப்பலில் தீ பரவிய நிலையில் அது கைவிடப்பட்டுள்ளது. உள்ளூர் நேரப்படி புதன் கிழமை இரவு 11.30 மணி அளவில் லைபீரிய நாட்டுக்கு சொந்தமான அந்தக் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது மேலும் நான்கு பணியாளர்கள் காயமடைந்ததாகவும் அதில் மூவர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் அமெரிக்க கட்டளையகம் கூறியது. எனினும் ஹூத்தி கப்பற்படை விடுத்த எச்சரிக்கையை ட்ரூ கொன்பிடென்ஸ் கப்பல் பொருட்படுத்தவில்லை என்று அந்த கிளர்ச்சியாளர்கள் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.


காசாவில் இடம்பெறும் போரில் பலஸ்தீனர்களுக்கு ஆதரவாகவே செங்கடலில் செல்லும் இஸ்ரேலுடன் தொடர்புபட்ட கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதாக ஹூத்திக்கள் கூறுகின்றனர்.

ஹூத்திக்களின் இந்த தாக்குதலுக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் கடந்த ஒன்றரை மாதமாக யெமனில் அந்த கிளர்ச்சியாளர் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றபோதும் அது செங்கடல் மீதான தாக்குதல்களை தடுக்கத் தவறியுள்ளது.

முன்னதாக உரத்தை எடுத்துச் சென்ற சரக்குக் கப்பல் ஒன்றின் மீது ஹூத்திக்கள் கடந்த மாதம் தாக்குதல் நடத்திய நிலையில் அந்தக் கப்பல் கடந்த சனிக்கிழமை மூழ்கியது.

'காசாவில் உள்ள பலஸ்தீன மக்கள் மீதான முற்றுகை நீக்கப்பட்டு, ஆக்கிரமிப்பு நிறுத்தப்படும் வரை இந்தத் தாக்குதல்கள் நிறுத்தப்படாது' என்று ஹூத்தி இராணுவ பேச்சாளர் சாரீ குறிப்பிட்டுள்ளார்.

## 3,400 குடியேற்றங்களுக்கு இஸ்ரேலிய அரசு ஒப்புதல்



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள குடியேற்றங்களில் 3,400க்கும் அதிகமான வீடுகளை அமைக்கும் திட்டத்தை இஸ்ரேல் அரசு வெளியிட்டுள்ளது.

இதில் 70 வீதத்துக்கும் அதிகமான வீடுகள் கிழக்கு ஜெரூசலத்தின் மாலே அதுமிம்மிலும் ஏஞ்சியவை பெத்லஹாம் தெற்கிலும் அமைக்கப்படவுள்ளன. மாலே அதுமிம்முக்கு அருகில் இரு வாரங்களுக்கு முன் நடத்தப்பட்ட பலஸ்தீன தாக்குதலுக்கு பதில் நடவடிக்கையாகவே இந்த வீடுகள் அமைக்கப்படுவதாக அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கால பலஸ்தீன நாடு ஒன்றுக்கு இடையூறாக அமைக்கப்படும் இஸ்ரேலிய குடியேற்றங்கள் சர்வதேச சட்டத்தை மீறுவதாக பார்க்கப்படுகிறது.

1967 மத்திய கிழக்கு போரில் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெரூசலத்தில் சுமார் 160 குடியேற்ற வீட்டுத் திட்டங்களில் சுமார் 700,000 யூதர்கள் வாழ்கின்றனர்.

இந்நிலையில் இஸ்ரேலின் இந்த புதிய திட்டத்திற்கு சர்வதேச அளவில் கடும் கண்டனங்கள் வெளியாகியுள்ளன.



# காசாவில் ஊட்டச்சத்து குறைபாட்டால் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகரிப்பு

## ரமழானுக்கு முன் இறுதிக் கட்ட இராஜதந்திர முயற்சி

முஸ்லிம்களின் புனித ரமழான் மாதம் ஆரம்பிப்பதற்கு இன்னும் ஒரு சில நாட்களே இருக்கும் நிலையில் காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான இறுதிக் கட்ட இராஜதந்திர முயற்சிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றபோதும் காசாவில் தொடர்ந்து மோதல் நீடிப்பதோடு, அங்கு ஊட்டச்சத்து குறைப்பாட்டினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த ஒக்டோபர் ஏழாம் திகதி இஸ்ரேல் மீதான பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து வெடித்த இந்தப் போர் தற்போது ஆறாவது மாதத்தை தொட்டுள்ளது. கடந்த நவம்பரில் இடம்பெற்ற ஒரு வார போர் நிறுத்தத்தை தவிர்த்து காசா மீது இஸ்ரேல் தொடர்ந்து இடைவிடாது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 31 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. இதில் 70 வீதத்திற்கு அதிகமானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

மத்திய காசாவில் கடந்த புதன் இரவு தொடக்கம் இஸ்ரேல் நடத்தி வரும் குண்டு தாக்குதல்களில் அங்கு குறைந்தது 35 பேர் கொல்லப்பட்டிருப்பதாக சுகாதார அதிகாரிகள் கூறியதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதன்போது நுஸைரத் அகதி முகாம் மற்றும் டெயிர் அல் பலாவில் உள்ள வீடுகள் மீது இஸ்ரேல் வான் தாக்குதல்களை நடத்திய இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 24 மணி நேரத்தில் காசாவில் மேலும் 83 பேர் கொல்லப்பட்டு 142 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது. இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 38,800 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 72,298 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு இடையில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கான வாய்ப்பு இன்னும் இருப்பதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

கெய்ரோவில் அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து மத்தியஸ்தத்தில் ஹமாஸ் பிரதிநிதிகள் பங்கேற்றிருக்கும் பேச்சுவார்த்தை தொடர்ந்து இடம்பெற்று வந்தபோதும் இஸ்ரேலிய பிரதிநிதிகள் இதில் பங்கேற்கவில்லை. எதிர்வரும் மார்ச் 10 அல்லது 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ரமழான் மாதத்திற்கு முன்னர் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கே முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தப் பேச்சுவார்த்தையில் இழுபறிகள் நீடித்து வருகின்றபோதும், உடன்படிக்கை ஒன்று இன்னும் சாத்தியமாக உள்ளது என்று அமெரிக்கா கூறியுள்ளது.

'தடைகள் கடக்க முடியாததல்ல என்றும் உடன்படிக்கை ஒன்றை எட்ட முடியும் என்றும் நாம் தொடர்ந்து நம்புகிறோம். எனவே அதற்காக நாம் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கிறோம்' என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் மத்தியு மில்லர், வொஷிங்டனில் தெரிவித்தார்.

இந்நிலையில் பீஜிங்கில் நேற்று (07) செய்தியாளர் சந்திப்பில் பேசிய சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ கூறியதாவது, 'இது மனித குலத்தின் அவலம் என்பதோடு இந்த மனிதாபிமான நெருக்கடியை நிறுத்த முடியாவிட்டால் 21 ஆம் நூற்றாண்டில் இன்றைய நாகரிகத்தின் அவமானம்' என்றார்.

வரலாற்று ரீதியாக பலஸ்தீன ஆதரவு போக்குடைய சீனா, காசாவில் போர் நிறுத்தத்தை கோரி வருகிறது.



'அவசர போர் மற்றும் மோதலை நிறுத்துவதற்கு முன்னுரிமை அளித்து, அவசர தார்மீக பொறுப்பு ஒன்றாக மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு சர்வதேச சமூகம் அவசரமாக செயற்பட வேண்டும்' என்று வாங் யீ வலியுறுத்தினார்.

இந்தப் போர் காசாவில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி 2.4 மில்லியன் மக்கள் தொகையில் அதிகப் பெரும்பாலானவர்களை தமது வீடுகளில் இருந்து வெளியேற்றி பாரிய மனிதாபிமான நெருக்கடி ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் காசாவில் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நீரிழப்பு காரணமாக உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 20 ஆக அதிகாரித்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு புதன்கிழமை (06) கூறியிருந்தது. இவர்களில் பாதி அளவானவர்கள் குழந்தைகளாவர்.

காசாவின் வடக்கு பகுதியில் மட்டுப்படுத்தப்பட்ட உதவிகள் மாத்திரமே கிடைத்திருக்கும் சூழலில் அங்கு பட்டினி பேரழிவு மட்டத்தை எட்டி இருப்பதாக உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.

'குழந்தைகள் பட்டினி தொடர்பான நோய்களால் இறப்பதோடு கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்' என்று அந்த அமைப்பு குறிப்பிட்டது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 15 வயது சிறுமி ஒருவரும் அடங்குவதாகவும் அவர் காசா நகரின் அல் ஷிபா மருத்துவமனையில் உயிரிழந்திருப்பதாகவும் காசா சுகாதார அமைச்சு கூறியது.

இந்த அமைச்சின் பேச்சாளர் அஷ்ரப் அல் குத்ரா கூறியதாவது, 'வடக்கு காசாவில் பஞ்சம் உயிர் ஆபத்து மட்டத்தை எட்டி இருப்பதோடு காசாவுக்கு மேலும் உதவி மற்றும் மருந்து விநியோகங்கள் கிடைக்காதபட்சத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழக்கக் கூடும்' என்றார்.

போரினால் இடம்பெயர்ந்தவர்களால் நிரம்பியுள்ள தெற்கு காசாவின் ரபா நகரில் உள்ள ஐ.நா அகதி நிறுவன அலுவலகம் ஒன்றுக்கு வெளியில் மாவு பைகளை பெறும் எதிர்பார்ப்புடன் நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர்.

'அவர்கள் தரும் மாவு போதுமானதாக இல்லை' என்று இடம்பெயர்ந்தவரான முஹமது அபூ ஒதே கூறினார். 'மாவைத் தவிர சீனி அல்லது வேறு எதனையும் தருவதில்லை' என்றும் அவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

எகிப்து எல்லையை ஒட்டி இருக்கும் ரபாவில் தற்போது காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமான 1.5 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றுள்ளனர்.

மறுபுறம் தெற்கு காசாவின் மிகப் பெரிய நகரான கான் யூனிஸின் நகர மத்தியில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் வாபஸ் பெற்றதை அடுத்து பலரும் தமது வீடுகளில் எஞ்சியுள்ளவற்றை காண்பதற்கு அங்கு திருப்பியதாக அங்குள்ள ஏ.எப்.பி. செய்தியாளர் விபரித்துள்ளார்.

எனினும் துருப்புகள் வாபஸ் பெறப்பட்டது பற்றி இஸ்ரேலிடம் இருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை என்று அந்த செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

காசாவில் பரந்த அளவில் பட்டினி நிலை ஏற்பட்டிருக்கும் சூழலில் இஸ்ரேலுக்கு எதிராக அவசர நடவடிக்கையை விதிப்பதற்கு சர்வதேச நீதிமன்றத்திற்கு தென்னாபிரிக்கா கடந்த புதனன்று மனுத் தாக்கல் செய்துள்ளது.

காசாவுக்கு உதவிகள் செல்வதை அதிகரிக்கும்படி பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் டேவிட் கெமரூனும் இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுத்துள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## இன்று மஹா சிவராத்திரி தினம்...

திருக்கோணேஸ்வரம் உள்ளிட்ட பஞ்ச ஈஸ்வரங்கள் உட்பட நாட்டிலுள்ள அனைத்து சிவாலயங்களிலும் இன்று சிவராத்திரி பூஜைகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நான்கு ஜாமப் பூஜைகளுடன் லிங்கோற்பவருக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.

## பால்நிலை சமத்துவ கல்வியில்...

பெண்கள் ஏற்றுள்ளனர்.நாட்டின் அபிமானத்துக்குரிய வர்கள் பெண்கள். நிலையான அபிவிருத்திக்கான பயணத்தில் பெண்களின் பங்களிப்பை மேலும் பலப்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்திற்காக பெண் தொழில்முனைவோரை வலுவூட்டுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். மகளிர் தினத்தை ஒரு தினத்திற்கு மட்டுப்படுத்தாமல், புதிய சட்ட திட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்கிப் பெண்களின் அபிமானத்தை பாதுகாக்க அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பெண்கள் மீதான பாகுபாட்டைத் தவிர்க்க, முதல் முறையாக தேசிய பாலினக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளமை சிறப்பம்சமாகும்.

தேசிய மகளிர் ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளதோடு, பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவதற்கான இரண்டு புதிய சட்டங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கத் தேவையான சட்ட திருத்தங்களையும் அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## சமூகத்தில் பெண்களின் வகிபாகங்கள்...

ஒரு தனித்துவமான இடம் இருந்து வந்துள்ளது. தேசத்தின் பெருமையாக விளங்கிய பெண்கள், அரசாங்கத்திலும், சாசனத்திலும் மற்றும் அரசியலிலும் முன்னணி வகித்தனர் . நெருக்கடி நிலையிலும் உறுதியுடன் செயற்படும் பெண்கள், நாட்டின் பெரும் பலமாக விளங்குகின்றனர்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 52 வீதமுள்ள பெண்கள், அபிவிருத்தியில் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். மகளாகவும், மனைவியாகவும், தாயாகவும், பாட்டியாகவும், நாட்டின் பிரஜையாகவும், சமூக சேவகியாகவும் பல,பாத்திரங்களை வெளிப்படுத்தும் பெண்களின் உரிமைகளை பாதுகாப்பது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையின் அர்ப்பணிப்புக்கு...

நிதி அமைச்சில் நேற்று (07) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை இலங்கை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதால், அதன் பிரதிபலன்களை காண முடிந்துள்ளதாகவும் பீட்டர் ப்ரூவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் வலுவடைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதென தெரிவித்த அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அர்பணிப்புக்கும் பாராட்டு தெரிவித்தார்.

இதன்போது நாட்டை பொருளாதார சரிவிலிருந்து மீட்பதற்கான அரசாங்கத்தின் திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை அங்கீகரிப்பதானது இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையிலான பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்காக ஏற்றுகொள்ளப்பட்ட கூட்டு முயற்சியை வலியுறுத்துவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து இலங்கையின் நிதி ஸ்திரத்தன்மை, கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகள், எதிர்கால நோக்கு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன், நாட்டின் பொருளாதார செயற்பாடுகளின் பல தரப்பட்ட விடயப்பரப்புக்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்காகவும் நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் இரு தரப்புக்கும் இடையேயான தொடர்ச்சியான ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இலங்கை சார்பில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன. , ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, பணிக்குழாம் பிரதானி அலுவலகத்தின் பணிப்பாளர் ஷிரந்த ஹேரத் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சர்வதேச நாணய நிதியத் தூதுக்குழுவின் பிரதி தலைவர் கத்யா ஸ்விரிட்சென்கா(*Katya Svirydzenka*), வதிவிடப் பிரதிநிதி கலாநிதி. சர்வத் ஜஹான் ( *Dr. Sarwat Jahan*), சோபியா ஜாங் (*Sophia Zhang*), சந்தேஷ் துங்கனா (*Sandesh Dhungana*),ஹோடா செலிம் (*Hoda Selim*), டிமிட்ரி ரோஸ்கோவ் (*Dmitriy Rozhkov*), மார்க் எடம்ஸ் ( *Mark Adams*),ஹுய் மியாவோ ( *Hui Miao*), சம்ஸன் குவாலிங்கனா (*Samson Kwalingana*) மற்றும் மானவீ அபேவிக்ரம உள்ளிட்ட சர்வதேச நாணய நிதியக் குழுவின் உறுப்பினர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

## ரயில் நிலையத்தில் புதிய டிஜிட்டல்...

மூலம் ரயில் நேரஅட்டவணைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தனியார் நிறுவனமொன்றின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் இத் திட்டத்தை ஆரம்பிக்கும் நிகழ்வில் ரயில்வே பொது முகாமையாளர், எச். எம். கே. டபிள்யூ. பண்டார, பிரதி பொது முகாமையாளர்கள், மீடியா ஹட் நிறுவன தலைவர் கமிந்த மலவியாராச்சி உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## கோப், கோபா குழுக்களுக்கு...

தொடர்பான குழுவின் (கோபா) புதிய தலைவராக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ணவும் நியமிக்கப்பட்டுள்ளனர். நேற்றைய தினம் நடைபெற்ற 09ஆவது பாராளுமன்றத்தின் 05ஆவது கூட்டத் தொடரில், கோப் மற்றும் கோபா குழுக்களின் முதலாவது கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்களின் போதே அவர்கள் இருவரும் இக்குழுக்களின் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோப் குழுவின் புதிய தலைவர்களாக ரோஹித அபேகுணவர்தனவின் பெயரும் காமினி வலேபொடவின் பெயரும் முன்மொழியப்பட்டன. ரோஹித அபேகுணவர்தனவின் பெயரை மஹிந்தானந்த அளுத்கமகே எம்.பி. முன்மொழிந்ததுடன் சஞ்ஜீவ எதிரிமான்ன எம்.பி. அதனை வழிமொழிந்தார்.

அதேவேளை, காமினி வலேபொடவின் பெயரை ஹேசா விதானகே முன்மொழிந்ததுடன் டிலான் பெரேரா எம்.பி. அதனை வழிமொழிந்தார். அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வாக்கெடுப்பில் ரோஹித அபேகுணவர்தன மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் பாராளுமன்ற அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின் (கோபா) புதிய தலைவராக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார்

அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவின் முதலாவது கூட்டம் நேற்று இடம்பெற்ற போதே ஆளும் கட்சி மற்றும் எதிர்கட்சியினரால் அவர், ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ணவின் பெயரை வஜிர அபேவர்தன எம்.பி. முன்மொழிந்ததுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி. எஸ்.சிறிதரன் அதனை வழிமொழிந்தார்.

அதனையடுத்து மேற்படி குழுவின் எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமாக புதிய தலைவர் கலந்துரையாடியதுடன் அதனை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் கோரினார்.

## 'ஷெல்' எரிபொருள் நிறுவனம்...

துறையில் ஒரு பாரிய சக்தியாக இந்நிறுவனம் உருவெடுத்துள்ளது. எவ்வாறாயினும், அறுபத்து மூன்று வருடங்களின் பின்னர், ஷெல் நிறுவனம் இலங்கையின் எரிசக்தி துறையில் மீண்டும் இணைந்துள்ளது. இந்நிறுவனத்தின் முதலாவது எரிபொருள் கப்பல் 63 வருடங்களின் பின்னர் எதிர்வரும் (19) கொழும்பு துறைமுகத்திற்குள் பிரவேசிக்கவுள்ளது அரசாங்கத்தின் எரிசக்தி மற்றும் பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தின் கீழ், எரிபொருளை இறக்குமதி செய்தல் , சேமித்தல் மற்றும் விநியோகிப்பதற்கும் இந்நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களை அரசாங்கம் ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முருகன், ரொபட் பயஸையாவது...

இக்கோரிக்கையை விடுத்துள்ளார். பாராளுமன்றத்தில் புதன்கிழமை (06) இடம்பெற்ற வரித்திருத்தச் சட்டமூல திருத்தங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே,சிவஞானம் சிறீதரன் எம்.பி, இக்கோரிக்கையை விடுத்தார். பாராளுமன்றத்தில் பேசிய அவர்; இந்தியாவில், சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் விடுதலையாகியும் சாந்தனால் வீடு வர முடியாமல் போனது. இவருக்கு எனது அஞ்சலியை செலுத்துகிறேன். தனது தாயைப் பார்ப்பதற்காக, உறவினர்களைச் சந்திக்க இவர் பெரிதும் விருப்புடையவராக இருந்தவர் சாந்தன். இருபது வயதில் புறப்பட்ட இளைஞன் 53 வயதைக் கடந்து சடலமாக வரவேண்டிய மிகப்பெரிய சோகம் சாந்தனுக்கு ஏற்பட்டது. நெருக்கடி மற்றும் மன உழைச்சலுக்கு உட்பட்டிருந்த சாந்தன், சடலமாக இலங்கைக்கு வந்தார். இது தொடர்பாக மனோகணேசன் எம்.யுடன் சென்று வெளியுறவுத்துறை அமைச்சர் அலிசப்ரி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆகியோரிடம் பேசினேன். இந்தியாவிலுள்ள இலங்கை தூதரக அதிகாரியையும் தொடர்பு கொண்டு சாந்தனின் வருகைக்காக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவை, தோல்வியடைந்ததால், சாந்தன் உயிருடன் வீட்டுக்கு வர முடியாது போனது. எனவே, தற்போது இந்திய சிறையிலுள்ள முருகன் ரொபட் மற்றும் பயஸ் உள்ளிட்டவர்களையாவது உயிருடன் விடுதலை செய்து அவர்களுடைய குடும்பத்தோடு அவர்கள் சேர வழியேற்படுத்துமாறு கோருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# பெறுகை அறிவித்தல்

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்**

## கேள்வி மனுக்கோரல்

திணைக்கள குழுவின கொள்முதல் தலைவரினால் பின்வரும் பணிகளுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| பெயர் மற்றும் ஒப்பந்தத்தின் பெயர் | தகமைகள் | மீளளிக் கப்படாத கட்டணம் LKR | மனு செல்லுபடியாகும் (நாட்கள்) | மனுப் பாதுகாப்பு LKR | மனுப் பாதுகாப்பு செல்லுபடியாகும் (நாட்கள்) | மனுக்கள் மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| Civil Works at Polonnaruwa District, Walikanda Ginidammana, Ginidammana CBOs **Contract No: DNCWS/PRO/2024/CV/PO/01** | ICTAD Grade C8/C7/C6 | 3,000 | 77 | 70,000 | 06.07.2024 | 22.03.2024 10.00am |
| Civil Works at Polonnaruwa District, Welikanda Ellewewa, Pubudugama Nildiya CBO **Contract No: DNCWS/ PRO/2024/ CV/PO/02** | ICTAD Grade C8/C7/C6 | 3,000 | 77 | 70,000 | 06.07.2024 | |
| Civil Works at Batticaloa District, Eravurottu ,Veppaveduvan 186 A,Pararchenai CBOs **Contract No: DNCWS/PRO/2024/CV/BT/01** | ICTAD Grade C8/C7/C6 | 3,000 | 77 | 100,000 | 06.07.2024 | |
| Civil Works at Kegalle District, Dehiowita,Ambalanpitiya ,Nagahahena Puspasena CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/KG/01** | ICTAD Grade C8/C7/C6 | 5,000 | 77 | 110,000 | 06.07.2024 | |
| Civil Works at Kegalle District,Yatiyantota Malapola, Malalpola CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/KG/02** | ICTAD Grade C8/C7/C6 | 3,000 | 77 | 75,000 | 06.07.2024 | |
| Civil Works at NuwaraeliyaDistrict, Walapane Kurupanawala, Diya Bibula CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/NE/01** | ICTAD Grade C8/C7/C6 | 3,000 | 77 | 80,000 | 06.07.2024 | |
| Civil Works at Galle District, Nagoda ,221 A Budupanagama , Nadeethera CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/GA/01** | ICTAD Grade C7/C6/C5 | 7,500 | 77 | 200,000 | 06.07.2024 | |
| Civil Works at Galle District, Yakkalamulla, 179A, Nakiyadeniya ,Diduladiya CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/GA/02** | ICTAD Grade C7/C6/C5 | 5,000 | 77 | 140,000 | 06.07.2024 | |
| Civil Works at Jaffna District,Valikamam South West , Marisankoodal J/154 ,Marisankoodal Water User Association **Contract No: DNCWS/PRO/2024/CV/JF/01** | ICTAD Grade C8/C7/C6 | 3,000 | 77 | 100,000 | 06.07.2024 | |
| Civil Works at Nuwaraeliya District, Hanguranketha,Deniyagama,Ranmuthu CBO **Contract No: DNCWS/PRO/2023/CV/NE/07** | ICTAD Grade C7/C6/C5 | 6,000 | 77 | 180,000 | 06.07.2024 | |
| Civil Works at Mullaithivu District,Manthai West ,Siraddikulam, Siraddikulam Water User Association **Contract No: DNCWS/PRO/2024/CV/MU/01** | ICTAD Grade C7/C6/C5 | 7,500 | 77 | 180,000 | 06.07.2024 | |
| Civil Works at Matale District,Galewela, Ihala Bambawa Grameeya Surakshitha , CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/ML01** | ICTAD Grade C6/C5/C4 | 12,000 | 91 | 450,000 | 24.07.2024 | 02.04.2024 10.00 am |
| Civil Works at Rathnapura District , Embilipitiya, Diyapota,Randiya dahara , CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/RT/01** | ICTAD Grade C6/C5/C4 | 12,000 | 91 | 400,000 | 24.07.2024 | |
| Civil Works at Hambanthota District , Walasmulla, Thalapathkanda,Pathuma , CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/HT/01** | ICTAD Grade C6/C5/C4 | 12,000 | 91 | 500,000 | 24.07.2024 | |
| Supply & Delivery of PVC Pipes, Fittings & Specials to Matara,Polonnaruwa,Galle,Puttalam ,Kurunegala ,Kaluthara, & Kegalle District CBOs **Contract No: DNCWS/PRO/2024/PVC/01** | PVC Pipes & Fittings Manufacturers/ Suppliers | 15,000 | 91 | 600,000 | 24.07.2024 | |
| Supply & Delivery of GI & DI Pipes, Fittings & Specials to Matara , Polonnaruwa, Kandy,Anuradhapura ,Puttalam,Kurunegala, Kaluthara,Hambanthota ,Vavuniya,Galle, Badulla, & Kegalle District CBOs **Contract No: DNCWS/PRO/2024/GI/01** | GI Pipes & Fittings Suppliers | 10,000 | 77 | 250,000 | 06.07.2024 | |
| Supply, Delivery, Install & Commission of Water Pumps & Accessories to Kurunegala,Polonnaruwa, Matara,Nuwaraeliya, Galle, Manner,Kaluthara, Vavuniya, Mullaithivu & Anuradhapura District CBOs **Contract No: DNCWS/ PRO/2024/PUMP/01** | Pumps & Accessories Suppliers | 11,500 | 91 | 350,000 | 24.07.2024 | |

**மேல் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கான பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

01. கோள்விப்பத்திரங்களை **கடிதத்தலைப்பில் எழுதப்பட்ட கோரிக்கை மற்றும் மீள்ச்செலுத்தப்படாத கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டினை** தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் 2 வது மாடியில் உள்ள கொள்முதல் பிரிவில் சமர்ப்பித்து மனு ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம் (மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள கொள்முதல் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்) மனு ஆவணங்கள் **2024.03.21 ஆம் திகதி மற்றும் 2024.04.01 ஆம் திகதி வரை** வழங்கப்படும்.
02. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்வதுடன் **சாதாரண வேலை நாட்களில் (மு.ப.09.00 மணிமுதல் 3.00 பி.ப)** ஆவணங்களை வழங்கும் இடத்தில் **மனு ஆவணங்களை** இலவசமாகப் பரிசீலனை செய்யலாம்.
03. கேள்வி மனுக்களை திணைக்களத்தின் 2வது மாடியில் **(கொள்முதல் பிரிவில்)** வைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் பெட்டியினுள் இடல் அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு **பதிவுதபால் மூலமாக அல்லது விரைதூதர் மூலமாக** அனுப்பிவைக்க வேண்டும்.
04. மேலதிக தகவலுக்கு, பணிப்பாளரை **(கொள்முதல்)** தொடர்பு கொள்ளவும் - **தொலைபேசி 011 2 774927.**
05. கேள்வி மனுக்கள் கேள்வி மனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அதே முகவரியில் **2024.03.22** ஆம் திகதி **மு.ப.10.15** மணி மற்றும் **2024.04.02** ஆம் திகதி **மு.ப.10.15** மணிக்கு மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கலந்துகொள்ளத் தேர்ந்தெடுக்கும் மனுதாரரின் பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான ஏலங்கள் திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.
06. **மனுப் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொடைக்கு** முகவரியிடப்படல் வேண்டும்.
07. மேலே உள்ள அனைத்து ஒப்பந்தங்களுக்கான மனு ஆவணத்துடன் PCA 03 படிவம் இணைக்கப்பட வேண்டும்.

தலைவர்,

திணைக்களத்தின் பெறுகை குழு,

**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,**

இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொட.

**2024.03.08**

SELACINE

சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

107
டொயோட்டா கார்கள்
விற்பனைக்கு

CP-CAR-0827 - TOYOTA - DAA-EVW30 PRIUS - MOTOR - CAR - 2013 - BLACK அதியுயர் விலைக்கானது. CBC பினான்ஸ் எல்டீடி, 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 08 12 081033. 016788

113
சுசுகி கார்கள்
விற்பனைக்கு

NW-CAE-6440 - SUZUKI - ALTO - LX1800 - MOTOR CAR - 2014 - GRANITE GRAY அதியுயர் விலைக்கானது. CBC பினான்ஸ் எல்டீடி, 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 081 0 33. 016793

117
வேன்கள்
விற்பனைக்கு

NP - PI-3807 - TOYOTA - QDF - KDH201V- HIACE- VAN - 2014 - WHITE அதியுயர் விலைக்கானது. CBC பினான்ஸ் எல்டீடி, 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 081 0 33. 016782

119
பஸ்கள், லொறிகள்
விற்பனைக்கு

WP-JZ-6847 - LANKA ASHOK LEYLAND AND COMET TIPPER - MOTOR LORRY - 2005 - GREEN அதியுயர் விலைக்கானது. CBC பினான்ஸ் எல்டீடி, 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 08 12 081033. 016776


**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல் 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு - 55**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் வட்டரெக்க எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 520028 கண்ட இல. 03 பத்திர இல. - துண்ட இல. 0080,0096 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த, இல. 276/A, வட்டரெக்க, பாதுக்க எனும் விலாசத்தைக் கொண்ட ரனசிங்க ஆரச்சிகே ஆனந்த நிமல் ரனசிரி எனும் ஆள் 2021.02.07 ஆம் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 06 முதலாம் ஒழுங்கை ரயில் நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.04.08 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்

**ஆணையாளர் நாயகம்
காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

# திருத்தம் செய்யப்பட்ட மின்சார சபை சட்டமூலம் ஏப்ரலில் சபையில் சமர்ப்பிப்பு



திருத்தம் செய்யப்பட்ட மின்சார சபைச் சட்ட மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் அனுமதிக்குப் பின்னர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எரிபொருளின் விலை சூத்திரம் தொடர்பில் உரியவர்களை அழைத்து கேட்டறிந்ததன் பின்னர் விலையை மேலும் குறைக்கத் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இங்கு மேலும் தெரிவித்த அவர்,

2024 மார்ச் 05 ஆம் திகதி நள்ளிரவு முதல் மின்சார கட்டணத்தை 21.9% இனால் குறைக்க முடிந்தது. இருப்பினும் அதற்கு நிகராக உணவு விலைகள் குறைக்கப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குரியாக உள்ளது. பொது சேவைகளில் ஈடுபடுவோரால் மக்களுக்கு பெருமளவான நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும். அதனைமின்சாரசபையோ அல்லது அமைச்சுக்களோ செய்ய முடியாது.

அண்மைக் காலமாக கிடைத்த பெரும் மழை வீழ்ச்சியின் காரணமாக, மின் உற்பத்தி செயல்பாட்டில் உள்ள பிரச்சினைகளை குறைந்துள்ளன. இதன் பலனாக 2022 ஆம் ஆண்டின் 270 பில்லியன் ரூபா இழப்பீட்டையும் சரிசெய்ய முடிந்தது. இருள் யுகத்தில் கிடந்த நாடு பொருளாதார முன்னேற்றம் கண்டு வருவதன் பலனாகவே, மின்சார கட்டணத்தை குறைக்க முடிந்துள்ளது.

மின்சார உற்பத்திச் செலவு பெருமளவில் குறை ந்துள்ளதோடு, மூன்றிலக்க பெறுமதியாக காணப்பட்ட வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளமையும் பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

மேலும், இந்திய கடனின் கீழ் பெறப்பட்ட 100 மில்லியன் டொலர்களில் முதல் பகுதியைக் கொண்டு, பாடசாலைகள், பாதுகாப்பு முகாம்கள், பல்கலைக்கழகங்கள், மத வழிபாட்டுத் தலங்கள் போன்ற பொது இடங்களில் மின்சாரம் பெறுவதற்கு சூரிய சக்தி பனல்களை வழங்கும் பணியை மேற்கொண்டு வருகிறோம். மின் கட்டணத்தை மேலும் குறைக்க, தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் அல்லது தற்போது அதிக விலைக்கு மின்சாரம் கொள்வனவு செய்வதை விடுத்து குறைந்த செலவிலான மாற்று முயற்சிகளுக்கு செல்ல வேண்டும்.2025 இல், சியாம்பலாண்டுவ மின் உற்பத்தித் திட்டத்தை தேசிய மின் கட்டமைப்பில் இணைக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இதனால் நூறு மெகாவோட் மின்சாரத்தை 25, 26 ரூபாவுக்கு பெற்றுகொள்ள முடியும்.

இதேபோன்ற பல பாரிய மின் உற்பத்தி திட்டங்கள் குறித்து ஆராய்ந்து வருகிறோம்.

அதற்காக ஏராளமான முதலீட்டாளர்கள் எம்மோடு இணைந்துகொண்டுள்ளனர்.

மேலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புதிய முதலீட்டாளர்களுக்காக 10 காற்றாலை மற்றும் சூரிய ஒளி திட்டங்கள் திறக்கப்பட்டுள்ளன. மன்னார் பகுதியை மையமாக கொண்டு 50 மெகாவாட் காற்றாலைக்கான விலைமனு அடுத்த வாரம் கோரப்படும்.

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**

**1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்**

**பிரிவு 55**

குருநாகல் மாவட்டத்தின் மல்லவபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் உயந்தன் 720 பிரிவின் பகவந்தளாவ தோட்டம் எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 420209, பிரிவு இல. 01, தாள் இல.01, துண்டு இல. 0256ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 22, ரேஸ் கோர்ஸ், அம்பகமுவ, உடுபுலத்கம எனும் விலாசத்தைக் கொண்ட காலவில விதானகே தொன் சுவர்ணா கருணாதிலக என்பவர் 01.06.2023 ஆந் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் பழைய பிரதேச சபை கட்டிடம், மல்பிடிய, போயகனே என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 10.04.2024ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்,
காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்**

**1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம்**

**பிரிவு 55**

காலி மாவட்டத்தின் நான்கு சூழற் பிரதேச செயலாளர் பிரிவில் கல்வதுகொட 96 B கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 810044, பிரிவு இல. 01, தாள் இல.01, துண்டு இல. 135ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 317/1, வக்வெல்ல வீதி, காலி என்னும் விலாசத்தைக் கொண்ட கமகே அநுரகுமார சமரவீர என்பவர் 20.05.2023 ஆந் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல.25/1, பத்தேகம வீதி, ஹிரிம்புர, காலி என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 08.04.2024ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்,
காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

# வனவிலங்குகளிடமிருந்து விவசாயத்தை பாதுகாக்க விசேட வேலைத்திட்டம்

## பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கவும் முடிவு; *அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவிப்பு*

**லோரன்ஸ் செல்வநாயகம்**

யானை, குரங்கு உள்ளிட்ட வன விலங்குகளால் விவசாய ப் பயிர்ச் செய்கைக்கு ஏற்படும் பாதிப்பை கட்டுப்படுத்தும் வகையில் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமிப்பதற்கு உத்தேசித்துள்ளதாக வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்தார்.

அவ்வாறான தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் பாராளுமன்றத்தில் சபாநாயகரிடம் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்தார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வொன்றை காணும்வகையில் பாராளுமன்றம் என்ற ரீதியில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்புடன் துறைதொடர்பான அனைத்து நிபுணர்களையும் இணைத்துக்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வனவிலங்குகளினால் விவசாயப் பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாடு என்ற ரீதியில் நீண்டகாலம் தொடரும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றைக் காணவேண்டியது அவசியம். இதற்கு முன்னரும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் சம்பந்தப்பட்ட துறைசார்ந்தவர்கள் முயற்சிகளை மேற்கொண்டபோதும் அந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படவில்லை.

அந்தவகையில், பாராளுமன்றத்தின் மூலம் தெரிவுக்குழுவொன்றை அமைத்து பேச்சுவார்த்தை நடத்தி, சம்பந்தப்பட்ட துறைசார்ந்த நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டு அதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதே எமது நோக்கமாகும்.

வனஜீவராசிகள் மற்றும் வனபாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் பல கட்டப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளனர்.

அனைத்துத் தரப்பினரும் இணைந்தே இதற்கான தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டும். நாட்டில் அதுதொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

குரங்கு தொடர்பில் பேச்சுக்களை எடுக்கும்போது, குரங்கிலிருந்தே மனிதன் பரிணாமம் பெற்றுவந்ததாக தெரிவிக்கின்றனர். அதே போன்று பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் விவசாயம், சுற்றாடல், பாதுகாப்பு ஆகிய அமைச்சுக்களின் அதிகாரிகளை ஒன்றிணைத்துக்கொண்டு இதற்கான தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ளவேண்டியுள்ளது.

அத்துடன் சமயத் தலைவர்கள் சுயாதீன அமைப்புக்களின் பிரதிநிதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களையும் இணைத்துக்கொண்டே இந்த தெரிவுக்குழு உருவாக்கப்படவேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கையை சபாநாயகர் மேற்கொள்ளவேண்டுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# கேள்வி கோரல் அழைப்பு

## 2024ம் ஆண்டிற்கான நிறையுணவு கொள்வனவு செய்தல்

**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்
வட மத்திய மாகாணம்**

வட மத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் 2024 வருடத்திற்குத் தேவையான கீழே விபரிக்கப்பட்டுள்ள நிறை விலங்கு உணவுகளை கொள்வனவு செய்வதற்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து மாகாண பணிப்பாளர்/ பெறுகைக் குழுவின் தலைவரான என்னால் தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பொருட்களின் விபரம் | பெறுகை இலக்கம் | சமர்ப்பிக்க வேண்டிய கேள்விப் பிணை முறி (ரூபா) | கேள்விப் பிணை முறியின் செல்லுபடியாகும் காலம் கேள்வி திறக்கப்படும் தினம் முதல் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிறையுணவு வழங்குதல் Poultry Commercial layer - Starter feed | 2024/DOAPH/ NCB/AF/WF/01 | 101,500.00 | 2024.06.26 | 2,500.00 |
| 02 | உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிறையுணவு வழங்குதல் Poultry Commercial layer - Grower feed | 2024/DOAPH/ NCB/AF/WF/02 | 307,500.00 | 2024.07.31 | 2,500.00 |
| 03 | உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கான நிறையுணவு வழங்குதல் Poultry Commercial layer - feed | 2024/DOAPH/ NCB/AF/WF/03 | 308,000.00 | 2024.07.31 | 2,500.00 |
| 04 | திரப்பனே விலங்கு பண்ணைக்கான நிறையுணவு வழங்குதல் Poulry Commercial layer - Starter feed | 2024/DOAPH/ NCB/AF/TF/01 | 142,500.00 | 2024.06.26 | 2,500.00 |
| 05 | திரப்பனே விலங்கு பண்ணைக்கான நிறையுணவு வழங்குதல் Poulry Commercial layer - Grower feed | 2024/DOAPH/ NCB/AF/TF/02 | 18,000.00 | 2024.06.07 | 2,500.00 |
| 06 | திரப்பனே விலங்கு பண்ணைக்கான நிறையுணவு வழங்குதல் Poulry Commercial layer - feed | 2024/DOAPH/ NCB/AF/TF/03 | 55,500.00 | 2024.06.26 | 2,500.00 |
| 07 | திரப்பனே விலங்கு பண்ணைக்கான நிறையுணவு வழங்குதல் Dairy Cattle feed | 2024/DOAPH/ NCB/AF/TF/04 | 12,500.00 | 2024.06.07 | 2,500.00 |

02. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2024 மார்ச் 06 முதல் 2024 மார்ச் 27 வரை வாரத்தில் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அநுராதபுரம் கொடகே மாவத்தையில் அமைந்துள்ள விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாண அலுவலகத்தில் இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பார்க்க முடிவதுடன் ரூபா 2500.00 மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்தி கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். கேள்வியுடன் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள பெறுமதிக்கு நிபந்தனையற்ற கேள்விப் பிணையொன்றை கேள்வி திறக்கப்படும் தினம் முதல் மேற்கண்டவாறு செல்லுபடியாகுமாறு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளை வேறு வேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு 2024 மார்ச் 28 பி.ப. 3.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு மாகாண பணிப்பாளர்/ தலைவர் பெறுகைக் குழு, மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கொடகே மாவத்த, அநுராதபுரம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது மாகாண பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விகளை சமர்ப்பிப்பது எதற்காக என்று குறிப்பிடுதல் வேண்டும். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

04. தகைமைக்குப் பின்னரான தகவுத் திறன்களில் குறிப்பிடப்படும் கேள்வி மதிப்பீட்டிற்காக கவனத்தில் கொள்ளப்படும் விடயங்களுக்கு மேலதிகமாக கொள்வனவாளரால் கோழி உணவை பயன்படுத்தி பரிசீலனை செய்வதற்கு உத்தேசிக்கப்படுகிறது. அதன் பிரகாரம் கோழியுணவு 1 கிலோ கிராமை 3 பொதிகளை கேள்வியுடன் வழங்குதல் வேண்டும்.

05. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் 2024 மார்க் 28 பி.ப. 3.00 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு இவ் வேளையில் சமுகமளிக்கலாம். இப் பெறுகை விடயங்கள் சம்பந்தமாக வட மத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் தொ.பே. இல. 025-2222533ஐ அழைக்குமாறு அறிவிக்கிறேன்.

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,
வட மத்திய மாகாணம், அநுராதபுரம்.**

பராடே சட்டம் குறித்து அரசின் தீர்மானம்

# இலங்கை மத்திய வங்கி ஊடாக வர்த்தக வங்கிகள் கண்காணிப்பு

## அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த சபையில் தெரிவிப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

அரசாங்கம் பராடே சட்டத்தை இடைநிறுத்தியுள்ள போதும் அது தொடர்பான நடவடிக்கைகளை பின்பற்றாத வர்த்தக வங்கிகள் தொடர்பில் உரிய கண்காணிப்புகளை மத்திய வங்கி மேற்கொள்ளும் என அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மத்திய வங்கியில் காணப்படும் வங்கிகளை கண்காணிக்கும் பிரிவு மூலம் வர்த்தக வங்கிகளுக்கு உரிய பணிப்புரைகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

பராடே சட்டம் புதிய சட்டம் ஒன்ற ல்ல. பராடே சட்டம் 1990 ஆரம்ப காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு சட்டமாகும். இன்றுள்ள நிலைமைகள் அல்ல. அன்று வெவ்வேறு காரணத்திற்காக இந்த சட்டம் உருவாக்கப்பட்டது.

பலரும் வங்கிகளில் கடன்களை பெற்றுக்கொண்டு அதை மீள செலுத்த தவறும் சந்தர்ப்பங்களில் வங்கிகளை கொண்டு நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. அந்த சந்தர்ப்பத்திலேயே இந்த பராடே சட்டம் கொண்டுவரப்பட்டது.

வங்கிகள் உரிய அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்ட பின்னரும் அவ்வாறான கடன்களை அறவிட முடியாமற் போனால் அந்த சந்தர்ப்பத்தில் வங்கி பணிப்பாளர்களினால் யோசனை முன்வைக்கப்பட்டு அந்த கடன்களுக்காக சம்பந்தப்பட்ட நபர்களின் சொத்துக்களை ஏலத்தில் விட்டு உரிய கடன் தொகையை பெற்றுக் கொள்வதற்காக அதன் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டது. இந்த சட்டத்தை கொண்டு வந்ததற்கான அடிப்படை காரணம் இதுதான்.

வங்கிகள் இதனை பின்பற்றி வந்தாலும் அரசாங்க வங்கிகள் இரண்டும் ஏனைய வர்த்தக வங்கிகளைப் போலன்றி நெகிழ்வு போக்குகளையே கடைப்பிடித்தன. முடிந்தளவு அந்த நிலைக்குச் செல்லாமல் வேறு வழிகளில் அந்த கடன்களை அறவிடும் முறைமையே அந்த வங்கிகள் முன்னெடுத்தன. அதற்கான வாய்ப்புகளை தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கின.

அதனைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட கொரோனா முடக்க சூழ்நிலை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக வர்த்தக நடவடிக்கைகள் பின்னடைவு கண்டன. அதனையடுத்து சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மற்றும் கைத்தொழில் துறையில் ஈடுபட்டவர்கள் பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்க நேர்ந்தது. அதன் காரணமாகவே தற்போதைய நிலை உருவாகியுள்ளது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய சந்தர்ப்பத்திலும் இது தொடர்பில் தெரிவித்துள்ளார். அந்த வகையில் இரண்டு அரச வங்கிகளும் இந்த விவகாரம் காரணமாக பாரிய பாதிப்புகளை எதிர் நோக்க நேர்ந்தது.

டொலர் தட்டுப்பாடு நிலவிய போது கிடைக்கும் டொலரையாவது பெற்றுக் கொள்வதற்கு வங்கிகளில் ரூபா இருக்கவில்லை. அந்தளவு மோசமான நிலையே காணப்பட்டது. தற்போது அதனை முகாமைத்துவம் செய்ய முடிந்துள்ளது.

இத்தகைய பின்னணியிலேயே பராடே சட்டம் தொடர்பில் அமைச்சரவை தீர்மானம் ஒன்றை மேற்கொண்டது. அந்த வகையில் அந்த சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவும் அதன் மூலம் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான சட்ட வரைபு தயாரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கான நடவடிக்கைகள் நிறைவுறும் வரை, மத்திய வங்கியின் வங்கிகள் கண்காணிப்பு பிரிவின் மூலம் அனைத்து வர்த்தக வங்கிகளையும் கண்காணித்து உரிய பணிப்புரைகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பராடே சட்டம் மூலம் நேரடியாக நடவடிக்கைகளை எடுக்காமல் சம்பந்தப்பட்டவர்களுக்கு நெகிழ்வுப் போக்குடன் அதற்கான வாய்ப்புகளை வழங்குமாறு கோருவதே இதன் நோக்கமாகும். அது தொடர்பில் நிதியமைச்சு கவனம் செலுத்தியுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல் 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு - 55**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் ஹோமாகம எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 520001 கண்ட இல. 46 பத்திர இல. - துண்ட இல. 0364, 0366, 0367, 0368 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த, இல. 278/2, கட்டுவான வீதி, ஹோமாகம எனும் விலாசத்தைக் கொண்ட ரணசிங்க ஆரச்சிகே தொன் சுமனதாச ரணசிங்க எனும் ஆள் 2020.08.23 ஆம் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 06, முதலாம் ஒழுங்கை, ரயில் நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.04.08 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்

**ஆணையாளர் நாயகம்
காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

**மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல் 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு - 55**

கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் பிட்டிபன வடக்கு எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 520006 கண்ட இல. 16 பத்திர இல. - துண்ட இல. 0250 ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த, இல. 242/2, ஏ. களுவலதெனிய, பிட்டிபன வடக்கு, ஹோமாகம எனும் விலாசத்தைக் கொண்ட விக்ரமகே சிரிசேன பெரேரா எனும் ஆள் 2024.01.25 ஆம் திகதி மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 06 முதலாம் ஒழுங்கை ரயில் நிலைய வீதி, ஹோமாகம என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்திற்கு 2024.04.08 ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்

**ஆணையாளர் நாயகம்
காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

# கேள்விக்கான அழைப்பு

## தென் மாகாண சபை

## மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை - ஹம்பாந்தோட்டை

ஹம்பாந்தோட்டை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை சார்பாக ஹம்பாந்தோட்டை மாவட்ட பெறுகைக் குழுவின் தலைவரால் திறன் உடைய மற்றும் தகைமையுடனான கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்காணும் ஒப்பந்தங்களுக்காக, வேறுவேறாக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் விநியோகிக்கப்படும் கால எல்லை : 2024.03.13 மு.ப.9.00 முதல் 2024.03.26 பி.ப. 2.00 வரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைதல் மற்றும் திறத்தல் : 2024.03.27 மு.ப.10.00

| தொடர் இல. | வேலை விபரம் | தேவைப்படும் பதிவு (CIDA) கட்டிடம் | கேள்விப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | பெரகம பிரதேச வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சியத்தின் கூரையை பழுதுபார்த்தல் | C8 and C7, C9 | 28,000.00 | 2,000.00 |
| 2 | ரத்ன பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு கட்டிடங்களின் கூரையை மீளமைத்தல் | C9,C8 and C7 | 23,900.00 | 2,000.00 |
| 3 | விலமுல்ல ஆரம்ப மருந்து சிகிச்சை அலகு - அகலமாக்குவதற்கான பழுதுபார்த்தல்கள் | C9 , C8 and C7 | 23,000.00 | 2,000.00 |
| 4 | பெரககிம பிரதேச வைத்தியசாலையின் பற்சினிச்சை அலகு கட்டிடத்தை மறுசீரமைத்தல் | C9 and C8 | 3,000.00 | 2,000.00 |
| 5 | "ருஹுணு சுவ நிவஹன" பாதுகாப்பு மதிலை அமைப்பதற்கான புதுப்பித்தல் | C9 and C8 | 18,000.00 | 2,000.00 |
| 6 | திஸ்ஸமஹாராம ஆதார வைத்தியசாலையின் குப்பை பிரிக்கும் இடத்தை அமைத்தல் | C9 and C8 | 8,000.00 | 2,000.00 |
| 7 | சமாதிகம ஆரம்ப மருத்துவ சிகிச்சை அலகின் பற்சிகிச்சை கதிரைக்கான நீர் செல்லும் கால்வாய் அமைப்பை உருவாக்குதல் | C9 and C8 | 1,700.00 | 1,000.00 |
| 8 | அகுனுகொலபெலஸ்ஸ பிரதேச வைத்தியசாலையின் மலசலகூடம் பழுதுபார்த்தல் | C9 and C8 | 17,000.00 | 2,000.00 |
| 9 | அகுனுகொலபெலஸ்ஸ சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் மறுசீரமைத்தல் | C9 , C8 and C7 | 21,000.00 | 2,000.00 |
| 10 | வராபிட்டிய ஆரம்ப மருத்துவ சிகிச்சை அலகின் நோயாளிகளுக்கான மலசலகூட அமைப்பை உருவாக்குதல் | C9 and C8 | 10,000.00 | 2,000.00 |
| 11 | வீரவில கிராமோதய சுகாதார நிலையத்தை பழுதுபார்த்தல் | C9, C8 and C7 | 26,000.00 | 2,000.00 |
| 12 | ஹக்குருவெல பிரதேச வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரி உத்தியோகபூர்வ இல்லம். இல.02 புதுப்பித்தல் | C9, C8 and C7 | 28,000.00 | 2,000.00 |
| 13 | மாவட்ட சுகாதர சேவைப்பணிப்பாளர் பணிமனையின் கணக்காளரின் உத்தியோகபூர்வ இல்ல மீதி வேலைக்கான பழுதுபார்த்தல் | C9, C8 and C7 | 38,000.00 | 2,000.00 |
| 14 | மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் சமையலறை மறுசீரமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல் | C9,C8 | 11,000.00 | 2,000.00 |
| 15 | மாவட்ட சுகாதர சேவைப்பணிப்பாளர் பணிமனை பதிவகத்தை நிர்மாணித்தல் | C7 and C8,C9 | 29,000.00 | 2,000.00 |
| 16 | கோணதெனிய பிரதேச வைத்தியசாலையின் மலசலகூட பழுதுபார்த்தல் | C9,C8 | 10,000.00 | 2,000.00 |
| 17 | மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் களஞ்சியம் partitioning செய்தல் | C9,C8 | 3,600.00 | 2,000.00 |
| 18 | திஸ்ஸமஹாராம ஆதார வைத்தியசாலையின் வலையமைப்பிற்கு உட்படுத்துவதற்கான பழுது பார்த்தல் | | 29,000.00 | 2,000.00 |
| 19 | வீரக்கெட்டிய சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் காத்திருப்பு அலகு மற்றும் பதிவுசெய்யும் இடத்தை அமைத்தல் | C9,C8 | 15,000.00 | 2,000.00 |

### பொருட்களை கொள்வனவு செய்தல்

| தொ.இலக்கம் | உபகரணம் | அளவு | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை | தொ.இல | உபகரணம் | அளவு | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ECG Machine | 3 | 1000 | 19 | writing table | 20 | 1000 |
| 2 | Spot Lamp | 4 | 1000 | 20 | rotating chair | 25 | 1000 |
| 3 | Nebulizer | 2 | 1000 | 21 | Executive Chair | 8 | 1000 |
| 4 | BP Apparatus (sphygmomanometer) | 5 | 1000 | 22 | Computer table | 6 | 1000 |
| 5 | Height measuring rod | 5 | 1000 | 23 | Refregerator | 1 | 1000 |
| 6 | Autoscope | 3 | 1000 | 24 | Cushion Chair | 30 | 1000 |
| 7 | Dressing trolley | 3 | 1000 | 25 | Plastic Chair | 100 | 1000 |
| 8 | Weight scale | 10 | 1000 | 26 | White board | 9 | 1000 |
| 9 | C pap machine | 01 | 2000 | 27 | Executive table | 1 | 1000 |
| 10 | Purchasing of cholesterol strips-UC 220 | 2500 | 1000 | 28 | Counter chair | 4 | 1000 |
| 11 | Colour Printer | 3 | 1000 | 29 | AC 12000 BTU | 5 | 2000 |
| 12 | UPS | 20 | 1000 | 30 | Television | 2 | 1000 |
| 13 | Fax Machine | 3 | 1000 | 31 | Beds | 4 | 1000 |
| 14 | Printer | 10 | 1000 | 32 | Fully automated industrial washing machine | 1 | 2000 |
| 15 | Steel Cupboard | 20 | 1000 | 33 | AC 36000 BTU | 2 | 2000 |
| 16 | Glass Cuboard | 15 | 1000 | 34 | AC 24000 BTU | 6 | 2000 |
| 17 | Book Rack | 10 | 1000 | 35 | water filter | 2 | 500 |
| 18 | Ceiling Fan | 15 | 1000 | 36 | Photocopy Machine | 1 | 1000 |

02. தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (NCB) ஊடாக இக்கேள்விகோரல் நடத்தப்படும்.

03. ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாதவராக இருப்பதுடன், மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் தரத்தில் கட்டிட நிர்மாணத் துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) பிரிவு இருத்தல் வேண்டும். (பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் திஸ்ஸமஹாராம ஆதார வைத்தியசாலை வலையமைப்புக்கு உட்படுத்துவதற்காக பழுதுபார்த்தலுக்கு (CIDA) பதிவு பொருந்தாது.

04. ஆர்வம் காட்டுகின்ற திறன் உடைய கேள்விதாரர்களால் மேலதிக தகவல்கள் மற்றும் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியை 2024.03.13 முதல் 2024.03.26 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.00 வரை கேள்வி ஆவணக்கட்டணத்தை செலுத்தி ஹம்பாந்தோட்டை மிரிஜ்ஜவில முகவரியில் அமைந்துள்ள மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். சகல கொடுப்பனவுகளும் காசாக மாத்திரம் செலுத்தப்படவேண்டியதுடன், கேள்விப்பிணை கட்டணத்தை ஹம்பாந்தோட்டை மாவட்ட சுகாதார சேவைப்பணிப்பாளர் பணிமனைக்கு காசாக மாத்திரம் செலுத்தப்பட வேண்டியதுடன், பற்றுச்சீட்டின் போட்டோப்பிரதியொன்றை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்தல் மேற்படி கால எல்லைக்குள் மேற்கொள்ளலாம். மேலதிக விபரங்களை இவ் அலுவலகத்தில் 047-2220381 தொ.பே இலக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். (திஸ்ஸமஹாராம ஆதார வைத்தியசாலையின் வலையமைப்பிற்கு உட்படுவதுடன் சம்பந்தப்பட்ட அறிவுறுத்தல் பத்திரங்களை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்த தள பரிசோதனையை மேற்கொண்டு கேள்வி ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்)

05. சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரைக்குறிப்பிட்டு பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் அதன் மூலப்பிரதியில் "மூலப்பிரதி" என்று குறிப்பிடுவதுடன், பிரதியில் "நகல்பிரதி" என்று குறிப்பிடுதல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு பொறியிட்டு ஒரே உறையில் இட்டு பதிவுத்தபாலில் அல்லது ஹம்பாந்தோட்டை மாவட்ட சுகாதார பணிப்பாளர் பணிமனையில் (கணக்குப்பிரிவில்) உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

06. கேள்விகள் திறத்தல் 2024.03.27 மு.ப.10.00 இற்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் ஹம்பாந்தோட்டை மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெறுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**ஹம்பாந்தோட்டை**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

**இலங்கை சனநாயக சோஷலிசக்குடியரசு அரசாங்கம்**

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

| இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 1 | மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகமவிலிருந்து குருநாகல், யக்காபிட்டிய பிரிவிற்கு பராமரிப்பு வேலைகளுக்காக தொழிலாளர்களை வழங்கல். கேள்வி இல.: RDA/EOM&M/MNT/CE/2024/07 |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.03.08 ஆம் திகதியிலிருந்து 2024.03.28 ஆம் திகதி வரையும் www.rda.gov.lk என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையபக்கத்தை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், வீஅஅ பெறுகைக் குழு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**

**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு**

**(e-NIC செயற்திட்டத்திம்)**

**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்**

# விலைமனுக்கோரல் (IFB)

**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின்**
**மாகாண அலுவலகத்திற்கான மத்திய தடையின்றிய 06 எண்ணிக்கையிலான**
**மின் வழங்கி அமைப்பினை வழங்கல், நிறுவல் மற்றும் செயற்படுத்தல்**

**IFB No: DRP/e-NIC/PRO/2023/15**

1. e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை சார்பாக, செயற்திட்ட கொள்முதல் குழுவின் தலைவரினால்,ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தில் மாகாண அலுவலகத்திற்கான மத்திய தடையின்றிய 06 எண்ணிக்கையிலான மின் வழங்கி அமைப்பினை வழங்கல், நிறுவல் மற்றும் செயற்படுத்தல் தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.
   - 30kVA 02 Nos.
   - 60kVA 04 Nos.
2. இம் மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.(NCB)
3. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **காரியாலய நேரங்களில் மு.ப 09.00** மணி தொடக்கம் **பி.ப 03.00 மணி வரை சிரேஷ்ட கொள்முதல் அதிகாரி, e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,** (தொலைபேசி: **011-2874626**) மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தில் **2024.03.07 ஆம் திகதி** முதல் **2024.03.27 ஆம் திகதி** வரை எவ்வித கட்டணச் செலுத்துகையும் இன்றி பரீட்சித்துக்கொள்ள முடியும்.
4. ஒப்பந்தத்திற்கு தகுதிபெற பின்வரும் குறைந்தபட்ச தகுதிகளை மனுதாரர் பூர்த்தி செய்ய வேண்டியதுடன், கூடுதல் விவரங்கள் மனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.
   a. மனுதாரர் இலங்கையில் **ஐந்து (05)** ஆண்டுகளுக்கு மேல் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும். மனுதாரர் தனது வியாபாரத்தின் சட்டரீதியான அல்லது சட்டபூர்வமான நிலை பதிவுசெய்த இடம் மற்றும் பிரதான வியாபாரநிலைய இடத்தின் அசல் ஆவணங்களின் நகல்களை மனுதாரர் முன்வைக்க வேண்டும்.
   b. இந்த மனுக்கோரலுக்கு **பணிப்பாளர் குழு மற்றும் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட** (POA) **சான்றிதழ்** உடன் மனு மற்றும் ஏனைய ஆவணங்களுக்கு கையொப்பமிடும் நபருக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   c. மனுதாரர் **ISO** 9001-2015 **(தர மேலாண்மை) சான்றிதழ் மற்றும் ISO** 9001-2015 தரத்தில் சான்றிதழ் பெற்றிருப்பதோடு அதனை மனுக்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
   d. உற்பத்தியாளர் **ISO 9001** மற்றும் **ISO 14001** ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்
   e மனுதாரர் **CIDA - EM 4** அல்லது அதற்கு மேல் சான்றளிக்கப்பட்டவராக இருப்பதுடன் குறித்தவற்றில் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் மற்றும் அதற்கான பதிவு ஏலத்துடன் இணைக்கப்படும்.
   f. இக்கோரலில் பங்கேற்கும் மனுதாரர் 1987 **ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ்** பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
   g. **கடந்த ஐந்து (05) ஆண்டு காலத்திற்குள் (2019-2023)** மனுதாரர் இந்த கொள்முதலின் தன்மையின்படி **(30kVA அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்நிலை UPS)** வழங்கல் மற்றும் நிறுவுவதில் நிரூபிக்கப்பட்ட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
   h கடந்த **ஐந்து (05) ஆண்டு காலத்திற்குள் (2019-2023)** மனுதாரர் **குறைந்தபட்சம் 150 மில்லியன் ரூபாய்** அல்லது அதற்கு அதிகமாக நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலையினை கொண்டிருத்தல் வேண்டும்.
   i மனுதாரர் குறைந்தபட்சம் **ஐம்பது மில்லியன் இலங்கை ரூபாயில் (50 மில்லியன்) நிகர திரவ சொத்துக்கள்** (தற்போதைய சொத்துக்கள்-பொருட்கள்-நடப்பு பொறுப்புகள்) அல்லது இந்த திட்டத்திற்கான **கடன் வசதிகளை** வழங்கக் கூடியவாறு இருத்தல் வேண்டும் (அதற்கான ஆவண சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).
   j. கடந்த **ஐந்து (05) ஆண்டுகளாக (2019-2023)** நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட **(இலாபம் மற்றும் நஷ்டம் மற்றும் நிதிநிலை அறிக்கைகளின்) சான்றளிக்கப்பட்ட நகல்களை** மனுதாரர் சமர்ப்பிக்க வேண்டும்.
   k. மனுதாரர் இந்த தயாரிப்பின் அசல் கருவி உற்பத்தியாளரின் **அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநராக** இருக்க வேண்டும். அதற்கான ஆதாரம் அசல் கருவி உற்பத்தியாளர்களின் தொடர்பு விவரங்கள் மனு ஆவணத்தில் இணைக்கப்பட வேண்டும் மற்றும் பொருந்தினால் அவற்றின் உள்ளூர் முகவர் / விநியோகஸ்தர்கள் மனுதாரரால் தயாரிக்கப்படாத / வழங்கப்படாத உபகரணங்கள், **அசல் உற்பத்தியாளரிடமிருந்து உற்பத்தியாளரின் அங்கீகாரக் கடிதங்கள்** இந்த ஏல ஆவணத்துடன் வழங்கப்பட வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் இணைக்கப்படாவிட்டால் மனுக்கள் முறையாக பதிலளிக்கப்படாதவையாகக் கருதப்படும்.
   l. தெரிவு செய்யப்படும் மனுதாரரால் நிறுவல், பராமரிப்பு மற்றும் துணை சேவைகளுக்கான **திறமையான தொழில்முறை தொழில்நுட்ப ஊழியர்களைக்** கொண்டிருக்க வேண்டும்.
   m மனுதாரர் நுவரெலியா மற்றும் குருணாகல் போன்ற இடத்திற்கு தேவையான தொடர்ச்சியான சேவைகளை **(24 மணிநேரம் மற்றும் 365 நாட்கள்)** வழங்கும் திறனைக் கொண்டிருக்க வேண்டும்.
   n. கடந்த **பத்து ஆண்டுகளில் (10) (2014-2023)** மனுதாரர் எதேனும் வழக்குகள் தொடர்பான தகவல்கள் இருப்பின் அவற்றை முன்வைக்க வேண்டும்.
   o. **கடந்த (10) பத்து ஆண்டுகளில் (2014-2023)** மனுதாரர் அல்லது அதன் துணை நிறுவனங்கள் அல்லது இணைந்த நிறுவனங்கள் எந்தவொரு அரசாங்க நிறுவனத்தாலும் தடுப்புப்பட்டியலில் இடப்பட்டிருக்கக்கூடாது.
5. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2024.03.07** ஆம் திகதியிலிருந்து **2024.03.27** ஆம் திகதி வரை காரியாலய வேலை நாட்களில் **09.00** மணியிலிருந்து **03.00** மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத **ரூபா.12,000.00** கட்டணத்தை செலுத்தி **செயற்திட்டப் பணிப்பாளர், e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** காரியாலயத்தில் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். **கட்டணத்தை காசாக செலுத்துதல் அவசியமாகும்.**
6. பூரணப்படுத்தப்பட்ட மனு ஆவணங்களை **இரண்டு பிரதிகளுடன் (அசல் மற்றும் நகல்) 2024.03.28 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்** பந்தி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு கிடைக்கப்பெறுமாறு மனுக்களை அனுப்ப வேண்டும். அல்லது **e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "B" பகுதி, 10 ஆம் மாடி, ஸ்ரீ சுபூதிபுர வீதி, சுஹுருபாய, பத்தரமுல்லை** எனும் முகவரியில் **கொள்முல் பிரிவில்** மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். மனுக்கள் **91 நாட்கள்** வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியவை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து மனுக்களுடனும் இலங்கையில் செயல்படும் எந்தவொரு உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்படும் **ரூபா.550,000/- (ஐந்து இலட்சம்) காப்புறுதிப்பிணையுடன்** இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு,**
**e-NIC செயற்திட்டம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,**
**"B" பகுதி, 10 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

SELACINE

**பொது அறிவித்தல் நீதிமன்ற அட்டவணை மற்றும் கலைப்பாளரை நியமித்தல்**

**கம்பனியின் பெயர்:**
ஒபோர்டோ டிவலொப்மன்ட் (பிரைவட் லிமிட்டட்)
**பதிவு இலக்கம்:**
PV-121730
**பதிவு அலுவலக முகவரி:**
இல. 67A, கிரகரிஸ் வீதி, கொழும்பு - 07
**கேள்வி இல:**
CHC/16/2022/CO
**கட்டளைத் திகதி:**
24 ஒக்டோபர் 2023
**நீதிமன்றம்:**
வர்த்தக உயர் நீதிமன்றம், கொழும்பு
கலைப்பாளரின் நியமனத் **திகதி:**
13 பெப்ரவரி 2024
கலைப்பாளருக்கான **அறிவித்தல் திகதி:**
13 பெப்ரவரி 2024
**கலைப்பாளரின் பெயர்:**
கெடவாகண்டகே சுதத் குமார்
**கலைப்பாளரின் முகவரி:**
இல. 46, லும்பின மாவத்த, களுகம, களனி.
கலைப்பாளரின் அலுவலக **முகவரி:**
3ம் மாடி, யதாமா கட்டிடம், இல. 124, காலி வீதி, கொழும்பு - 03

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

---

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

**SUPPLY OF 02 Nos,: SWIVEL END CHAIN SUPPORT BUOY**

**B/14/2024**

02 எண்ணிக்கையான Swivel end Chain Support Buoy இன் வழங்கலுக்காக உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தகுதித்தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகலும் வேண்டும்.

2024.04.18 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவை (ரூபா 1,653.58 + 2.5% SSCL + 18% VAT) ஒவ்வொரு தொகுதிக்கும் செலுத்திய பின்னர், கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைக்கு பொறுப்பான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம் அல்லது https://ceypetco.gov./lk/public-tenders/ என்ற இபெகூ இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

விலைமனுக்கள் 2024.04.19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கு பொறுப்பான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களின் மூடும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கும் விலைமனுதாரர்கள் https://eroc.drc.gov.lk என்ற இணையதளத்தினூடாக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு பெற்று பிசிஏ 3 சான்றிதழையும் அவர்களின் விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/ பா.,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**இல.: 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-5455336**
**தொலைநகல்: 0094-11-5455424**

---

## கம்பளை நகர சபை
# கேள்வி அறிவித்தல்

2024.04.01 முதல் 2024.12.31 வரை கம்பளை நகர சபைக்குச் சொந்தமான IIம் அட்டவணையில் உள்ள பாதை/வீதிகளில் (அனுமதித்த முச்சக்கரவண்டி நிறுத்துமிடங்கள் தவிர்த்து) நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களிலிருந்து Iம் அட்டவணையில் உள்ளவாறு கட்டணங்களை அறவிடும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல்:** 2024.03.11 முதல் 2024.03.25 வரை மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை
**கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல்:** 2024.03.26 மு.ப. 10.15 வரை
**திறத்தல்:** 2024.03.26 மு.ப. 10.30 இற்கு

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பங்களை மேற்படி தினங்களில் நகர சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**அட்டவணை - I**

| தொடர் இலக்கம் | வாகன வகை | ஒரு மணி நேரக் கட்டணம் |
|---|---|---|
| 01 | மோட்டார் சைக்கிள் | ரூ. 20/- |
| 02 | முச்சக்கர வண்டி | ரூ. 30/- |
| 03 | கார/வேன்/கெப் | ரூ. 50/- |
| 04 | லொறி/டிரக்டர் | ரூ. 80/- |
| 05 | பஸ் | ரூ. 80/- |

**அட்டவணை - II**

| பாதை/வீதி | குறைந்த பட்ச கேள்வி (மாதாந்தம்) |
|---|---|
| 1. அம்பகமுவ வீதி - கண்டி வீதி சந்தியில் இருந்து கீரப்பனே ரெயில் கேட் வரை | 15000/- |
| 2. கண்டி வீதி - அம்பகமுவ வீதி சந்தியில் இருந்து கஹட்டபிட்டிய ரெயில் கேட் வரை | 22500/- |
| 3. நுவரெலிய வீதி - கண்டி வீதி சந்தியிலிருந்து நுவரெலிய வீதி பாலம் வரை | 18000/- |
| 4. கங்கசிரி வீதி - பெரிய பாலத்திற்கு அருகிலிருந்து கூட்டுறவு நிரப்பு நிலையம் வரை | 10500/- |
| 5. ஹில் வீதி ஆரம்பத்தில் இருந்து முடிவு வரை | 9000/- |
| 6. கடுகன்னாவ வீதி - கண்டி வீதி கூட்டுறவு சந்தி முதல் கவிஷ்வர மாவத்த இலங்கை வங்கி வரை | 9000/- |
| 7. கவிஷ்வர மாவத்த - கங்கசிரிபுர கல்லூரி அருகில் இருந்து கடுகன்னாவ வீதி இலங்கை வங்கி வரை | 18000/- |
| 8. நாவலப்பிட்டிய வீதி - லக்வுட் சந்தி முதல் சமரகோன் எரிபொருள் நிலையம் (வீதி இரு பக்கமும்) | 15000/- |
| 9. பழைய நீதிமன்ற வீதி - நகர சபை அலுவலகம் முன்னால் இருந்து நுவரெலிய வீதி | 6000/- |
| 10. நிதஹஸ் மாவத்த - கீரப்பனே சந்தி முதல் சிங்ஹபிட்டிய ரெயில் கேட் வரை | 9000/- |

**யூ. ஜீ. ஜயரத்ன,**
**தலைவர்,**
**கேள்விச் சபை, கம்பளை நகர சபை.**
2024.03.10

**கம்பளை நகர சபை அலுவலகத்தில்**

---

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் அரசுக்கு எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கும் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள காணி, அச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் உரித்து மற்றும் நஷ்டஈடு பரிசீலனை 2024.03.13/2024.03.14 திகதிகளில் மு.ப. 09.30 மணிக்கு எலஹர பிரதேச செயலகத்தில் எனது முன்னிலையில் நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.அக்காணி தொடர்பாக உடந்தையுள்ளவர்கள் அப்பரிசீலனையின் போது பிரசன்னமாதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2371/34 கொண்ட 2024.02.15 திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| மாகாணம் | வடமத்திய | | | |
| மாவட்டம் | பொலன்னறுவை | | | |
| பிரதேச செயலாளர் பிரிவு | எலஹர | | | |
| காணி அமைச்சின் குறிப்பு இல. | 4/3/10/2019/MV/436 | | | |
| எனது இல. | POL/ELH/LND/01/06/077 | | | |
| கிராம அலுவலர் பிரிவு | கிராமம் | ஆரம்ப வரைபட இல. | துண்டு இல. | உரித்து மற்றும் நஷ்டஈடு பரிசீலனை நடைபெறும் திகதி |
| இல. 10.கோட்டபிட்டிய தெற்கு | புவக்கஹ உல்பத | கடஸ்ட்ரால் வரைபட இல.120231,வலய இல. 01,பத்திர இல. 09 | 1,2,5,6,7,11,12,14,15,16,17,20,21,22,23,26,27,28,31,32,33,34,36,37,38,39,40,41,42,43,44,45,46,47,48,49,50,51,54,55,56,57,60,61,62,63,64,67,68,69,70,73,74,75,76,77,80 & 81 | 2024.03.14 |
| இல. 10.கோட்டபிட்டிய தெற்கு | புவக்கஹ உல்பத | கடஸ்ட்ரால் வரைபட இல.120231,வலய இல. 04,பத்திர இல. 01 | 1 | 2024.03.13 |
| இல. 10.கோட்டபிட்டிய தெற்கு | புவக்கஹ உல்பத | கடஸ்ட்ரால் வரைபட இல.120231,வலய இல. 08,பத்திர இல. 03 | 1,2,3,5,6,7,8,9,10,12,13,14,15,16,19,20,21,22 & 23 | 2024.03.13 |

**பிரதேச செயலாளர்,**
**காணி எடுத்தல் அதிகாரி**
**எலஹர**

**2024.03.05 ஆம் திகதி**
**எலஹர பிரதேச செயலகத்தில்**

---

# பதவி வெற்றிட அறிவித்தல்

## இலங்கை காலநிலை நிதியம்

### சூழல் அமைச்சு

இலங்கை காலநிலை நிதியத்தினால் இலங்கை பிரஜைகளிடமிருந்து பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**பதவி**: தர நிறைவேற்று அலுவலர், ஒப்பீட்டு நிறைவேற்று அலுவலகர் மற்றும் நிருவாக அலுவலர்.

**தர நிறைவேற்று அலுவலர் (01 வெற்றிடம்) மற்றும் ஒப்பீட்டு நிறைவேற்று அலுவலர் (01 வெற்றிடம்) ஆகியவற்றிற்காக முக்கிய தேவைப்பாடுகள்.**

ப.மா.ஆ. இனால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து/ நிறுவனமொன்றிலிருந்து சூழல் விஞ்ஞானம்/ தர முகாமைத்துவம்/சூழல்ரீதியிலான முகாமைத்துவம் / பெருந்தோட்ட முகாமைத்துவம்/ வனவியல்/சூழல் வர்த்தக முகாமைத்துவம்/பசுமை தொழில்நுட்பவியல்/ இயற்கை வளங்கள் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பெற்ற விஞ்ஞானமாணி பட்டம் அல்லது நிகரான பட்டப் படிப்பு பட்டம்.

**தர நிறைவேற்று அலுவலருக்கான விஷேட தேவைப்பாடுகள்:**

ISO 14001 மற்றும் 9001 ஆகியவற்றுடனான அனுபவம் அல்லது நிகரான தர நியமனமாக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் சேர்க்கப்பட்ட தகைமையாகும்.

**தேவைப்படும் திறன்கள் மற்றும் அனுபவம்:**

- தற்போதைய சூழல்ரீதியிலான சிக்கல்கள், காலநிலை மாற்றம், பசுமை இல்ல வாயு வெளியேற்றம் மற்றும் நிலைபெறுதகு செயன்முறைகள்.
- நவீன நிலைபெறுதகு தர கட்டுப்பாட்டு செயன்முறைகள்
- ஆங்கிலத்தில் தேர்ச்சி
- சூழல் முகாமைத்துவம் மற்றும் வனவியல் துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட தொழில்நுட்ப புலமையானது சேர்க்கப்பட்ட தகுதியாக கருதப்படும்.

## நிருவாக அலுவலர் (01 வெற்றிடம்)

**முக்கிய தேவைப்படுத்தல்கள்:**

- வர்த்தகம், பொது முகாமைத்துவம், பொது நிருவாகம், மனித வளங்கள் முகாமைத்துவம், வர்த்தக நிருவாக கற்கைநெறித் துறையில் பெற்ற பட்டப் படிப்பு பட்டம்.
- அரசாங்க, கூட்டுத்தாபன, சபை, நியதிச்சட்டசபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் அமைப்பொன்றில் ஆகக் குறைந்தது ஒரு (01) வருட அனுபவம்.

மாதாந்த சம்பள மட்டம்: 27,500 + 12,800 + 5,000 ரூபா + அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க ஏனைய படிகள்.
வயதெல்லை: 22 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும்.

ஒரு வருட ஒப்பந்த அடிப்படையிலும் அதன் பின்னர் செயற்பாட்டு மதிப்பீட்டில் நிரந்தரமாக்கல்.

**விண்ணப்ப செயன்முறை:**

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தமது சொந்த விண்ணப்பங்களை தயாரித்து அத்துடன் விபரமுள்ள விளக்கங்களுடன் அனுப்பலாம். மேலதிகமாக, விண்ணப்பதாரிகள் உரித்தான சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 2024 மார்ச் 22 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பிரதான நிறைவேற்று அலுவலர், இலங்கை காலநிலை நிதியம், 'சொபதம் பியச', இல. 416/**1/C,** ரொபேர்ட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது info@climatefund.lk/charikasicf@gmail.com என்ற மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

(தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சையொன்றிற்கு அறிவிக்கப்படுவார்கள்)

**இணையதளம்: [www.climatefund.lk] தொலைபேசி: 011 2053065**

**K.H.M.H.H. Abeyrathna,**
**பதில் கடமையாற்றும் பிரதான நிறைவேற்று அலுவலர்,**
**இலங்கை காலநிலை நிதியம்.**





